Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 28 | சுடர்: 28 | கதிர்: 287 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 24, திங்கள் 09.09.2013


ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்

X 5

# வடக்கில் இராணுவத்தை முடக்குங்கள் முகாமுக்குள்

## நீதியான தேர்தலை உறுதிப்படுத்துவதற்காக ஜனாதிபதிக்கு கூட்டமைப்பு அவசரக் கடிதம்


யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 9
ஜனநாயக முறையில் நீதியான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக உடனடியாக வடக்கில் உள்ள இராணு வத்தினரை முகாம்களுக்குள் முடக்குங்கள் என்று கோரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடிதம் ஒன்றை இன்று அனுப்பவுள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கையொப்பமிட்டு அனுப்பவுள்ள இந்தக் கடிதத்தின் சாராம்சம் வருமாறு:

தமிழ்ப் பகுதிகளில் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு அதிகரித்துள்ளதாக ஏற்கனவே குற்றம்சாட்டப்பட்டு வருகிறது. இதைவிட வடக்கில் அளவுக்கதிகமான இராணுவப் பிரசன்னம் இருப்பதை பல்வேறு அமைப்புகளும் தெரியப்படுத்தி இருந்தன.

இந்த நிலையில் வடமாகாணத் தேர்தலில் அரச கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரில் இராணுவத்தால் தெரிவு செய்யப்பட்ட சிலரும் போட்டி யிடுகின்றனரோ என்ற சந்தேகம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

இதற்கேற்ப சில அரச கட்சி வேட்பாளர்களின் சுவரொட்டிகளை படையினரே ஒட்டுவதுடன், அவற்றை கிழிக்க வரும் தேர்தல் அதிகாரிகளையும் அச்சுறுத்தி உள்ளனர் என்றும் எமக்குத் தெரியவருகின்றது. இந்த நிலையில் வடமாகாண தேர்தலில் மக்கள் அச்சமின்றி வாக்களிக்கவும், நீதியான முறையில் இந்தத் தேர்தல் நடைபெறுவதற்கும், பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் வடக்கில் உள்ள படையினரை தேர்தல் முடியும் வரையாவது முகாம்களுக்குள் முடங்கியிருக்க நீங்கள் உத்தரவிட வேண்டும் - என்றுள்ளது. (ஙு)



இலங்கை அரசு மீது விசாரணை அவசியம் 10

ஜனநாயகமல்ல அமெ. இலக்கு 11

ஆவரங்கால் மத்தி, மோகனதாஸ் வசம் வெற்றிக் கிண்ணங்கள் 26

பாகிஸ்தான் சுழலில் சிதறியது சிம்பாப்வே 27

# ஜெனிவா தொடர் இன்று ஆரம்பம்

## இலங்கைக்கு மீண்டும் தலையிடி

கொழும்பு, செப். 9
சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்கு கடும் இராஜதந்திரச் சமர் களமாகத் திகழும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பூகோளகாலக் கிரமமீளாய்வுக்கூட்டத்தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.

இக்கூட்டத்தொடரின்போது, தனது இலங்கைப் பயணம் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

எனினும், குறித்த தொடரில் இலங்கை அரசின் உயர்மட்ட தூதுக்குழு எதுவும் பங்கேற்காது என தெரியவருகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது பயணத்தின் முடிவில் இலங்கை தொடர்பில் முன்வைத்த பாரதூரமான கருத்துகளே அரசின் இந்த முடிவுக்கு காரணம் எனக் கூறப்பட்டாலும் இது தொடர்பில் அரசு இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் விடுக்கவில்லை.

அரசின் சார்பில் பங்கேற்கும் நால்வர்

25



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன் மற்றும் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், இ.ஜெயசேகரன் ஆகியோர் யாழ். நகரில் நேற்றுமுன்தினம் நடைபவனியாகச் சென்று பரப்புரையில் ஈடுபட்டனர்.

# தபால் மூல வாக்களிப்பு இன்றும் நாளையும்

கொழும்பு, செப். 9
வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. வடக்கிலிருந்து 14 ஆயிரத்து 421 பேர் உட்பட ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 383 பேர் தபால் மூல வாக்களிப்புக்குத்

25

# கண்காணிப்புக்கு சார்க் குழு

கொழும்பு, செப். 9
வடக்கு, மத்திய, மற்றும்வடமேல் ஆகிய மூன்று மாகாணங்களுக்குமான தேர்தலைக் கண்காணிப்பதற்கு சார்க் நாடுகளின் குழு ஒன்று இலங்கைக்கு வரவுள்ளது. இந்தியாவின் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையாளர் கோபாலசுவாமி தலைமையில் வரவுள்ள இந்தக் குழுவில் நேபாளம், பங்களாதேஷ் உட்பட்ட சார்க் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 13 ஆம் திகதி வருகை தரும் குழுவினர் 23 வரை தங்கியிருந்து தமது கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

25

# நாடெங்கும் மஹிந்த சிந்தனை வடக்கிலோ ஹத்துரு சிந்தனை

## குற்றம்சாட்டுகிறார் விக்கி

யாழ்ப்பாணம், செப்.9
நாடு முழுவதும் மஹிந்த சிந்தனை நடைமுறையில் இருப்பதாக அரசு கூறுகிறது. ஆனால் உண்மையில் வடக்கில் மட்டும் ஹத்துரு சிங்க சிந்தனையே நடைமுறைப்படுத்தப்படுகிறது. அந்தளவுக்கு எல்லா விடயங்களிலும் இராணுவத்தின் தலையீடு அதிகரித்துள்ளது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக் னேஸ்வரன்.

கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம் ஒன்று கொக்குவில் பாரதி சனசமூக நிலையத்தில் நேற்று இரவு நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்துள்ள விக்னேஸ்வரன் இராணுவத்தினரைப் பற்றி இல்லாத விடயங்கயை கூறுகின்றார் என்று யாழ். கட்டளைத் தளபதி ஹத்துரு சிங்க தெரிவித்துள்ளார். இவ்வாறு எம்மைவிமர்சிக்கும்உரிமையை அவருக்குக் கொடுத்தது யார்? உண்மையில் அரசுக்கு பயந்து, பணிந்து, கைகட்டி சேவகம் செய்யும் ஊழியர் தான் ஹத்துரு சிங்க. இப்படிப் பட்டவர் எங்களை விமர்சிக்க எந்த அருகதையும் கிடையாது.

நாடெங்கும் மஹிந்த சிந் தனை நடைமுறைப்படுத்தப்படுவதாக அரசு பீற்றிக்கொள்கிறது. ஆனால் வடக்கில் மாத்திரம் மஹிந்த ஹத்துரு சிங்க சிந்தனையே நடைமுறையில் உள்ளது. அந்த அளவுக்கு பொதுமக்களின் இயல்பு வாழ்வில் இராணுவத் தலையீடு என்றுமில்லாத வகையில் அதிகரித்துள் ளது. இந்தத் தலையீட்டின்

25

# சரணடைந்தவர்கள் இரகசிய முகாமிலா?

## மனோ கணேசன் சந்தேகம்

"காணாமற்போனோர் என எவரும் இல்லை என்று கூறும் அரசு, இறுதி போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் பற்றிய தகவல்களையும் வெளியிட மறுக்கின்றது. அரசின் இத்தகைய பதில்கள் இலங்கையில் இரகசியத் தடுப்பு முகாம்கள் உள்ளனவோ என்று சந்தேகப்பட வைக்கின்றன.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் நேற்று தெரி வித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கையில் இரகசியத் தடுப்புமுகாம்கள் எங்கு இருக்கின்றன என்று பாதுகாப்புச் செயலர் சவால் விட்டுள்ளார். இது தெருவில் அப்பாவி மக்களை அச்சுறுத்தி விட்டு முடிந்தால் அதற்கெதிராக நடவடிக்கை

25

# வடக்கில் ஒருவாரத்தில் 13 தேர்தல் முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், செப்.9
தேர்தல் விதிமுறை மீறல் மற்றும் வன்முறைகள் தொடர்பாக வடமாகாணத்தில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 13 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

மூன்று மாகாணங்களிலும் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 141 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று கபே

25

உங்கள் தெரிவு
முதன்மை வேட்பாளர்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
X 10
(ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்)
க.வி.விக்னேஸ்வரன்

இடம்பெயர்ந்தவர்கள் தமது
இல்லங்களை கையேற்பது எப்போது?
சுய நிர்ணய
உரிமையை
வென்றெடுக்க


உதயன்
09/09/2013

## தகடுகள் அற்ற வாகனங்கள் தேர்தல் பரப்புரையில்

யாழ்ப்பாணம், செப். 9
நாவலப்பிட்டி மற்றும் கம்பொல பகுதிகளில் இலக்கத்தகடற்ற வாகனங்கள் தேர்தல் பரப்புரைப் பணிகளில் ஈடுபடுத்தப் படுவது குறித்து தாம் அவதானித்துள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறையிட்டுள்ளதாகவும் கபே அமைப்பு தெரிவித்துள்ளது.
தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களே தமது பரப்புரைக்காக இலக்கத்தகடுகள் அற்ற இத்தகைய வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.
தேர்தல்கள் விதிமுறை மீறல்கள் மற்றும் வன்முறைகள் வடமத்திய, வடமேல் மாகாணங்களிலேயே அதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கும் கபே. அரச தரப்பினரின் ஆதரவாளர்களே அதிகளவான மீறல்களில் ஈடுபடுவதாகவும் சுட்டிக்காட்டி தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## தமிழர்களை அடிமைகளாக வைத்திருப்பதே அரசின் திட்டம்

கொழும்பு.செப்.9
"இலங்கைத் தமிழர்கள் எப்போதும் கைகட்டி, வாய் பொத்தியே வாழவேண்டும். அவர்களுக்கான உரிமைகளையோ, சலுகைகளையோ ஒருபோதும் அரசு வழங்கவேமாட்டாது. அவர்கள் அடிமையாக இருக்க வேண்டும். இதுவே அரசின் நோக்கம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அரசும் சில இனவாத அமைப் புகளும் விமர்சிப்பதன் மூலம் நிரூபணமாகிறது."
இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ண நேற்று தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -
இந்த அரசு யுத்த காலத்தின் போது இந்தியா, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளின் உதவியைப் பெற்று தமிழர்களைக் கொன்று குவித்த

> “ கொடுஞ் செயல்களைத் தமிழர்கள் கண்டும் காணாதவாறு, இவற்றைப் பற்றி எதுவும் விமர்சிக்கக் கூடாது என்பதைத்தான் அரசும், இனவாத அமைப்புகளும் தமிழர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றன.

தோடு அங்குள்ள மத வழிப்பாட்டு ஸ்தலங்கள், தமிழர்களது பூர்வீக உடைமைகள் என்பவற்றையெல்லாம் அழித்தொழித்தது.
தற்போது தமிழர் வாழுகின்ற பகுதிகளில் இராணுவத்தினரை குடியமர்த்தி அவர்களுக்கு மேலும் துன்பத்திற்கு மேல் துன்பத்தை இந்த அரசு கொடுத்துக் கொண்டுதான் உள்ளது.
இது போன்ற கொடுஞ் செயல்களைத் தமிழர்கள் கண்டும் காணாதவாறு, இவற்றைப் பற்றி எதுவும் விமர்சிக்கக் கூடாது என்பதைத்தான் அரசும், இனவாத அமைப்புகளும் தமிழர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றன.
தமிழர்கள் என்றும் கைகட்டி, வாய் பொத்தி இருக்க வேண்டும் என்பது தான் அரசின் நோக்கமாகும். இது முற்றிலும் இனவாத செயலாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை இவர்கள் எதிர்ப்பதன் பிரதான காரணமும் இதுதான்.
ஒரு காலத்தில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இனவாதத்தை முற்றிலும் எதிர்த்தார். ஆனால், இன்று அந்த பழைய வாசுவையும் காணமுடியாதுள்ளது. இது போன்ற துவேசங்கள் நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்படும் வரை தமிழர்கள் நிம்மதியுடன் வாழவே மாட்டார்கள்" என்றார்.

## இந்த வாரத்துக்குள் அடையாள அட்டைகள்

### நடமாடும் சேவையில் விண்ணப்பித்தவர்களுக்கு கிடைக்கும் என்கிறது பவ்ரல்

யாழ்ப்பாணம், செப்.9
நடமாடும் சேவையூடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு தேர்தலுக்கு முன்னர், அவை நிச்சயம் விநியோகிக்கப்படும் என்று பவ்ரல் அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் ப.சசீந்திரன் தெரிவித்தார்.
வடக்கில் தேசிய அடையாள அட்டை இல்லாமால் இருந்த ஒரு லட்சம் பேர் வரையிலானோர் நடமாடும் சேவையூடாக விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பித்து ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் இன்னமும் அவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகள்கிடைக்கப் பெறவில்லை.
இதனால் தேர்தலில் வாக்களிக்கும் முகமாக தேர்தல் திணைக்களத்தால் விநியோகிக்கப்படும் தற்காலிக அடையாள அட்டைக்கு மக்கள் விண்ணப்பிக்கச் செல்கின்றபோது, தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ளமையை காரணம் காட்டி தற்காலிக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லையென்று கிராம சேவையாளர்கள் தெரிவிக்கின்றனர்.
இந்த விடயம் தொடர்பில் நடமாடும் சேவைகளை நடத்திய பவ்ரல் அமைப்பிடம் கேட்ட போது;
தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை கிடைக்கும்.- என்றார். (ஐ- 5)

### இலங்கையில் முஸ்லிம் தீவிரவாதமாம்

## கோத்தாவின் கருத்தை கண்டிக்கிறார் ரிஷாத்



கொழும்பு,செப்.9
இலங்கையில் முஸ்லிம் தீவிரவாதம் இருப்பது தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியம் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை கண்டிக்கத்தக்கது என்று கைத்தொழில் வணிக அமைச் சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
கோத்தபாயவின் கருத்து முஸ்லிம்களுக்கு எதிரான போலிக் குற்றச் சாட்டுக்களுக்கு பலம் சேர்ப்பதாக உள்ளது. நாட்டின் அரசியல் வரலாற்றை புரட்டிப் பார்த்தால் முஸ்லிம்கள் நாட்டுப் பற்றுடையவர்களாக இருந்துள்ளனர்.
பிரிவினைவாதத்தை முஸ்லிம்கள் எதிர்த்ததால் அவர்கள் இழந்தவை பலவாகும். அதனால் தான் வடக்கிலிருந்து இன சுத்தி கரிப்பும் செய்யப்பட்டனர்.
முஸ்லிம்களை ஆத்திரமூட்டுவதற்காகவே அவர்களின் வணக்கஸ்தலங்களை தாக்குகின்றனர். அனைத்துக்கும் நாம் பொறுமையாக இருக் கிறோம். குற்றம் செய்பவர்கள் ஒவ்வொரு சமூகத்திலும் இருக்கிறார்கள். அவர்களுக்கான சட்டங்களும் உண்டு. இலங்கையில் முஸ்லிம் அல்லாதவர் குற்றம் புரிந்தால் அது தனிநபர் குற் றம். அதுவே முஸ்லிம் ஒருவர் குற்றம் புரிந்தால் அது முழு சமூகத்தின் குற்றம். இவ்வாறான சூழ்நிலைதான் இன்று இலங்கையில் நிலவுகின்றது.
ஆனால் முஸ்லிம்கள் இலங்கையில் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதாக ஒரு சம்பவமும் இதுவரை இல்லை. இந்த நிலையில் பாதுகாப்பு செயலரது கூற்று கவலையளிக்கின்றது.
அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் இக்கட்டான சூழ்நிலைகளிலெல்லாம் அரசுக்கு தோள் கொடுத்துள்ளது. பாதுகாப்பு செயலர் தான் இவ்வாறு கூறியதற்கான காரணத்தை தெளிவுபடுத்தி முஸ்லிம் மக்கள் தொடர்பில் வெளிவரும் பிழையான [illegible]ணத்தை போக்க வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-10)

## ரணில் நாளை யாழ். வருகை

யாழ்ப்பாணம், செப்.9
எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தேர்தல் பரப்புரைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.
நாளை முற்பகல் 10 மணி தொடக்கம் இரவு வரை பல்வேறு இடங்களில் தேர்தல் பரப்புரையில் ஈடுபடுவதோடு சந்திப்புக்களையும் நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி நாளை முற்பகல் 10 மணிக்கு சங்கானை புதுச் சந்தைப்பகுதியிலும், 10.30 மணிக்கு காரைநகர் ஆலடி மீன் சந்தைப் பகுதியிலும் பரப்புரைக்கூட்டத்தில் ஈடுபடுவார். மதியம் 12 மணிக்கு வல்லிபுரக் கோயிலுக்குச் சென்று வழிபட்ட பின்னர் ஒருமணியிலிருந்து கொடிகாமம், சாவகச்சேரிப்பகுதிகளில் பரப்புரை செய்வார். பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் நகர பஸ் நிலையத்தில் பரப்புரைக்கூட்டம் நடத்துவார். 4.30 மணிக்கு யாழ். ஆயரைச் சந்திப்பார். 5 மணிக்கு யாழ். நகர் விடுதியில் பத்திரிகையாளர் சந்திப்பைத் தொடர்ந்து பிற்பகல் 6மணிக்கு நல்லூர் கிட்டுப்பூங்காவில் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தவுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## போலி நகைகளை அடகு வைத்து அரச வங்கிக்கு டிமிக்கி

### சந்தேகநபரை தேடி பொலிஸார் வலை வீச்சு

யாழ்ப்பாணம், செப். 9
அரச வங்கி ஒன்றில் நகை அடைவு வைத்து 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுச் சென்றுள்ள ஒருவருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கொடிகாமத்திலுள்ள அரச வங்கி ஒன்றில் போலியான தாலிக் கொடி கடந்த 25 ஆம் திகதி அடகு வைக்கப்பட்டது.
எழுதுமட்டுவாழைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு அடைவு வைத்துள்ளார். அதனைப் பெற்றுக் கொண்ட வங்கியினர் அதற்குரிய பணமாக 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவைக் கொடுத்துள்ளனர். அவர் பின்னர் கொழும்புக்குச் சென்று விட்டார்.
ஐந்து நாள்களின் பின்னரே வங்கியாளர்கள் அந்தத் தாலிக் கொடியைப் பரிசோதித்துள்ளனர். அதன்போது தாலிக்கொடி போலியானது என்று தெரிய வந்தது. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4)

## தன் எஜமான் வீட்டுக்காரர்களை முழந்தாளிட்டு வணங்கும் மாடு

கொழும்பு,செப்.9
ஹொரணை, கோணபொலவில் மாடு ஒகன்று தனது எஜமானின் குடும்ப அங்கத்தவர்களை முழந்தாளிட்டு வணங்கி வருகிறது. இந்த ஆச்சரியமான சம்பவம் அந்தப் பிர தேசமக்கள் அனைவரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.
இறைச்சி கடைக்கு வழங்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட மாடே முழந்தாளிட்டு வணங்குகின்றது. மீட்டெடுத்த வர்த்தகரையும் அவரது வீட்டு அங்கத்தவர்களையும் அக்கிராமத்திலுள்ள விஹாரையின் தேரரரையுமே குறித்த மாடு முழந்தாளிட்டு வணாங் குகின்றது.
ஹொரணை, கோணபொலவைச் சேர்ந்த வர்த்தகரான எஸ்.டீ. டியுட்டர் என்பவர் வளர்க் கின்ற இந்த மாடு, இறைச்சிக் கடைக்கு கொடுக்கப்பட்டிருந்த நிலையில் நான்கு வருடங்களுக்கு முன்னர் மீட்டெடுக்கப் பட்டது.
அந்த மாட்டை தனது பட்டியில் கட்டியதன் பின்னர் அதன் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் மாறுபட்டே வந்தன என்றும் தெரிவித்த வர்த்தகர், நானும் எனது வீட்டை சேர்ந்தவர்கள் கூறினால் மட்டுமே மாடு முழந்தாளிட்டு வணங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

## பவ்ரல் கண்காணிப்பு நிலையம் நேற்று திறந்து வைப்பு




யாழ்ப்பாணம், செப். 9
வடமாகாண சபைத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவதற்காக பவ்ரல் அமைப்பு தனது மாவட்ட அவதானிப்பு நிலையத்தை யாழ்ப்பாணத்தில் நேற்றுத் திறந்து வைத்துள்ளது.
தேர்தல் விதிமுறைகள் மீறல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் கண்காணிப்பதற்கும் இந்த விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கும் ஏற்றவகையில் இந்த நிலையம் செயற்படவுள்ளது.
பவ்ரல் அமைப்பிடம் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளுக்கு தீர்வு பெற்றுத்தர முழுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த இந்த அமைப்பின் சட்ட ஆலோசகர் க.சுகாஸ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்

> பவ்ரல் அமைப்பிடம் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளுக்கு தீர்வு பெற்றுத்தர முழுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

பிட்டார்.
இல-81, குருசோ வீதி, சுண்டுக்குளியில் பவ்ரல் அமைப்பின் மாவட்ட அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நேரடியாக முறைப்பாடுகளைப் பதிவு செய்யமுடியும் . தொலைபேசியூடாக முறைப்பாடு செய்பவர்கள் 072 496 5396 என்ற இலக்கத்துக்கோ அல்லது 078 9141869 என்ற இலக்கத்துக்கோ 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், செப். 9
வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சி தோட்டம் கற்பக விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. காலை நடைபெறும் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்து திருவீதியுலா வரவுள்ளார்.
ஆலயத்தின் தீர்த்தத் திருவிழாவான நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆலயத் தீர்த்தக் கேணியான கணேச குண்டத்தில் பெருமான் தீர்த்தமாடுதல் நடைபெறும்.
ஆலயத்தின் பெருந்திவிழா செப்ரெம்பர் முதலாம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மோசடி பேர்வழிகளான பெண்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் விடுதலை

### பாதிக்கப்பட்டோருக்கு பணம் மீளளிப்பு

யாழ்ப்பாணம், செப். 9
காப்புறுதி நிறுவனம் ஒன்றின் உத்தியோகத்தர்கள் என்று கூறி ஒரு வருட காலமாக 21 பேரிடம் பணத்தைப் பெற்று மோசடி செய்த நெல்லியடி, வரணியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து இருவரும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒருநாள் முழுவதும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தியதாகவும், இதன்போத அவர்கள், 21 பேரிடமும் இருந்து பெற்ற பணத்தை திருப்பிக் கொடுத்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
அந்த இரண்டு பெண்களுக்கு எதிராகவும் முறைப்பாடு செய்த 21 பேரும் தமது பணம் கிடைத்த பின்னர் தமது முறைப்பாடுகளை வாபஸ் பெற்றதனால் அந்த இரண்டு பெண்களும் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்படாது விடுவிக்கப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.
நெல்லியடி மற்றும் வரணியைச் சேர்ந்த திருமணமான இரண்டு பெண்களே ஒரு வருடமாக இவ்வாறு மோசடி செய்து வந்துள்ளனர்.
21 பேரிடமும் இருந்து தலா 13 ஆயிரம் ரூபா வீதம் 2 லட்சத்து 73 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளனர்.
ஒரு வருடமாகியும் அதற்குரிய பற்றுச்சீட்டு உட்பட எதுவும் கிடைக்காததனால் சந்தேகம் கொண்ட மக்கள் கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.
பொலிஸார் இரண்டு பெண்களையும் கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர். அதன் போதே அவர்கள் காப்புறுதி நிறுவனத்தில் பணிபுரிவதாகக் கூறி மோசடி செய்து வந்தமை தெரியவந்தது. (ஐ-4)



சிக்காக்கோ வாழ் இந்துக் குழந்தைகளின் அன்பளிப்பான உதவிப் பொருள்கள், பரிசுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் முழங்காவில், முள்ளியவளை, புதுக்குடியிருப்பு வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்கள், சிறுவர்களுக்கு ஹவாய் சுவாமிகள் ரிஷி தொண்டுநாத அடிகள் ஊடாக வழங்கப்பட்டன. (ஒ-11)

# 782 வழி இலக்க பஸ்சேவை சீராகுமா?

யாழ்ப்பாணம், செப்.9

யாழ்ப்பாணம்-காரைநகர் சேவையில் ஈடுபடும் 782 வழி இலக்க இலங்கை போக்குவரத்து பஸ்சேவை சீரின்மையால் பயணிகள் பல்வறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறித்த சேவையில் குறிக்கப்பட்ட நேரத்தில் மட்டும் பஸ்சேவை இடம்பெற்று வந்தது. அதற்கேற்றாற் போல் தினமும் பயணம் செய்யும் பயணிகள் முற்பணத்தைச் செலுத்தி பருவகால சீட்டைப் பெற்றிருந்தனர். எனினும் குறிக்கப்பட்ட நேரத்தில் கூட பஸ் சேவை சீராக இடம்பெறுவதில்லை.

இதன் காரணமாக பருவகாலச் சீட்டுக்கு பணத்தை செலுத்திவிட்டு தனியார் பஸ்களுக்கும் பணம் செலுத்தி பயணம் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவனங்களின் ஊழியர்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.



குறிக்கப்பட்ட நேரங்களில் தனியார் பஸ்களில் அதிகளவு சனநெரிசல் ஏற்படுவதால் பாட சாலை மாணவர்கள் ஏற்றப்படுவதை தனியார் பஸ்களின் நடத்துநர்கள் தவிர்த்துவருகின்றனர்.

இந்த நிலையில் 782 வழி இலக்க பஸ் சேவையை சீரான முறையில் ஏற்படுத்த இலங்கை போக்கு வரத்துச் சபை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மானிப்பாய் வீதியூடாக இ.போ.ச. பஸ்கள் வேறெவையும் சேவையில் ஈடுபடுவதில்லை எனவும் பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (வ-14)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கான கலந்துரையாடல் இன்று

தென்மராட்சி, செப்.9


சாவகச்சேரி சமுர்த்தி சங்கப் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் சந்திரபுரம் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சந்திரபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

கலந்துரையாடலில் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளதாக சந்திரபுரம் (ஜே/315) கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து சமுர்த்திப் பயனாளிகளையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்திப் பயனாளிகளுக்கு ஏற்படும் இடர்கள் குறித்து மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டு உரிய தீர்வுகள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## விருப்பம் எண்டா ஏறுங்கோ...! கிளிநொச்சிக்கு 100 ரூபா தான்

### தனியார் பஸ் நடத்துநரின் பாய்ச்சல்




யாழ்ப்பாணம், செப்.9

"கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 100 ரூபா தான். விருப்பம் எண்டா ஏறுங்கோ. இல்லாட்டால் ஓட்டோ பிடிச்சு சொகுசா போங்கோ" இது தனியார் பஸ் நடத்துநரின் நையாண்டி.

பஸ் கட்டண அதிகரிப்பின் பின்னர் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி வரையான பஸ் பயணத்துக்கு 91 ரூபா என்று தனியார் பஸ் சங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சங்கத்தின் அறிவிப்பை மீறி ஒரு சில நீண்டதூர பஸ்கள் 100 ரூபாவை அறவிட்டு பயணிகளின் பணத்தைச் சூறையாடுகின்றன.

பயணிகள் முரண்படுவார்கள் என்பதால் பயணச் சிட்டையிலேயே யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு 100 ரூபா என்று எழுதி வழங்குகிறார்கள்.

ஆனால் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களில் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி வரையான பயணத்துக்கு 92 ரூபாவே அறவிடப்படுகிறது.

இது தொடர்பில் பயணிகள் நடத்துநர்களிடம் வினவும் போது: "நூறு ரூபா தான், வாறன்டா வாங்கோ. தொல்லை பண்ணாதீங்க. சீ.ரி.பியில் போங்கோ அல்லது ஓட்டோ பிடிச்சுப் போங்கோ..." என்று அடாவடித்தனமாகப் பேசி பயணிகளது வாயை அடக்கி விடுகிறார்கள்.

ஒருசில தனியார் பஸ் நடத்துநர்களின் இத்தகைய செயலால் நாளாந்தம் பயணிப் போரும் வசதி குறைந்தவர்களும் பெரும் பாதிப்பை எதிர்நோக்குகின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா...? (ஒ-14)

## உமையாள்புர விபத்தில் சிக்கிய மற்றொருவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, செப்.9

ஆனையிறவு உமையாள்புரத்தில் அண்மையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் காயமடைந்த மற்றொரு இளைஞன் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வரணி மாசேரியைச் சேர்ந்த ரதீஸ்வரன் ரகுவரன் (வயது-21) என்னும் இளைஞரே சேர்க்கப்பட்டுள்ளவராவார்.

விபத்தின் போது காலில் காயமடைந்த இளைஞர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## யாழ்-விடத்தற்பளை பஸ்சேவை இன்று முதல் நாளாந்தம் 3 தடவை

யாழ்ப்பாணம், செப்.9

யாழ்ப்பாணம் உசன் ஊடாக விடத்தற்பளை வரையான இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் சேவை இன்று திங்கட்கிழமை 3 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று இ.போ.ச. கோண்டாவில் டிப்போ முகாமையாளர் செ.குலபாலச்செல்வம் அறிவித்துள்ளார்.

இதுவரை குறித்த வழி பஸ் சேவை மிருசுவில் உசன் கந்தசுவாமி ஆலயம் வரையே ஈடுபடுத்தப்பட்டு வந்தது. இது தொடர்பாக விடத்தற்பளை பொதுமக்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அரசியல்வாதிகளிடமும் அதிகாரிகளிடமும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதை அடுத்தே பொதுமக்கள் நலன் கருதி விடத்தற்பளை வரை பஸ் சேவையை நீடிக்க இ.போ.சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து விடத்தற்பளைக்கான பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த வழி பஸ் சேவை தினமும் காலை 6.30 மணிக்கும், முற்பகல் 11.30 மணிக்கும், பிற்பகல் 3 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (ஒ-14-9)

## வாக்காளருக்கான விசேட கலந்துரையாடல்


யாழ்ப்பாணம்,செப்.9

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புக் கிளையின் ஏற்பாட்டில் வடமாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடைய கொழும்புப் பிரதேசத்தில் வசிக்கும் வாக்காளர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை 37 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள அக்ஷய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சிறப்புரையாற்றுவார். (வ-14)

## இரை தேடி தோட்டத்துக்குள் வந்தது 5 அடி நீள முதலை

### சாவகச்சேரி பெருங்குளம் பகுதியில்



தென்மராட்சி, செப்.9

இரை தேடி தோட்டத்துக்குள் வந்து ஐந்து அடி நீளமான முதலையை இளைஞர்கள் மடக்கிப் பிடித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி பெருங்குளம் விளை நிலத்தில் இடம்பெற்றது. தோட்டத்தில் விளைந்த பயிரைப் பார்வையிடச் சென்ற உரிமையாளர் பூசணிச் செடிக்குள்ளிருந்து ஏதோ ஊர்ந்து செல்வதை அவதானித்து அது முதலை என்பதை உறுதி செய்து கொண்டார். அதை அடுத்து ஆலயப் பகுதியில் நின்றவர்களை கையசைத்து அழைத்தார். அங்கு விரைந்த இளைஞர்கள் முதலையைச் சுற்றி வளைத்து பிடிக்க முற்பட்ட வேளையில் அங்குள்ள கிணற்றுக்குள் பாய்ந்து விட்டது முதலை.

கிணற்றுக்குள் தடங்களைப் போட்டு சிக்க வைத்து, முதலை வெளியே எடுக்கப்பட்டது. இந்த முதலையை பெரும் எண்ணிக்கையானவர்கள் பார்வையிட்டனர்.

பெருங்குளத்துடன் இணைந்த வயல்களில் காலபோக நெற்செய்கை அறுவடை செய்த பின்னர் சிறுதானியப் பயிர்களும் மரக்கறி வகைகளும் விளைவிக்கப்படுவதால் இந்தப் பகுதிக்குள் கால்நடைகள் எவையும் செல்லாததால் குளத்தில் தங்கியிருந்த முதலை பட்டப் பகலில் ஊருக்குள் வந்த போது பிடிக்கப்பட்டதாகவும் உயிருடன் காணப்பட்ட முதலை உரிய திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## காரைநகரில் 6 உணவகங்களை மூட உத்தரவு

காரைநகர், செப்.9

காரைநகர் பிரதேசத்தில் சுகா தார சீர்கேட்டுடன் இயங்கிய ஆறு உணவகங்களின் உரிமையாளர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன் ஒரு வார காலத்துக்குள் உணவகங்களை உரிய தரத்துக்கு கொண்டுவர வேண்டும் என ஊர்காவற்றுறை நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது.

காரைநகரில் சுகாதார சீர் கேட்டுடன் இயங்கி வந்த 6 உண வகங்களுக்கு எதிராக காரைநகர் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகரால் ஊர் காவற்றுறை நீதிமன்றில் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே ஆறு உணவக உரிமையாளர் க ளுக்கும் தலா இரண்டாயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்து மாறும் ஒருவார காலத்துக்குள் உணவகங்கள் சீரமைக்கப்பட்டு உரிய தரத்தை பேணுமாறும் நீதிவானால் அறிவுறுத்தப்பட்டது. (வ-250)

## வாக்களிக்கும் முறை குறித்த விழிப்புணர்வு வீதி நாடகம்



தென்மராட்சி, செப்.9

எதிர்வரும் 21ஆம் திகதி நடை பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பது தொடர்பான விழிப்புணர்வு வீதி நாட கம் தேர்தல்கள் திணைக்களத்தினரால் தென்மராட்சிப் பிர தேசத்தில் மக்கள் கூடும் இடங்களில் நேற்று நடத்தப்பட்டது.

தேர்தலில் வாக்களிப்பது வாக் காளரின் உரிமை. தேர்தலில் வாக் களிக்கும் முறைகள் உட்பட்ட பல்வேறு வகையான வாக்களிப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மக் களுக்கு நாடகம் மூலம் தெளிவுபடுத்தப்பட்டன. சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இடம் பெற்ற தெரு நாடகத்தைப் பெருமளவு மக்கள் கண்டு களித்தனர். (வ-9)

# இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு பாலம்


பா.ஜ.க.வலியுறுத்து

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில் பாலம் அமைக்கப்பட வேண்டுமென பாரதீய ஜனதாகட்சி தெரிவித்துள்ளது. இவ்வாறு பாலம் அமைப்பதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்தலாம் என கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

உலகின் சுற்றுலாப் பயணிகள், யாத்திரீகர்கள் இந்தப் பாலத்தின் மூலம் நன்மை அடைவார்கள் என பாரதீய ஜனதா கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அனுராக் தாகூர் தெரிவித்துள்ளார். சுவாமி விவேகானந்தரின் 150 ஆம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் எஞ்சியுள்ள தமிழரையும் அழிக்க உதவ முற்படுகிறது இந்தியா

## பாண்டியன் காட்டம்



சென்னை, செப்.9

இலங்கைக்கு, இந்தியா போர்க் கப்பல்களைத் வழங்கக் கூடாது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில தலைவர் தா.பாண்டியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளாவது:-

இந்திய அரசு, இலங்கைக்கு இரண்டு போர்க்கப்பல்களை கட்டி வருவதாகவும், கோவாவில் கட்டப்பட்டு வரும் இரு போர்க் கப்பல்களை தானமாக இந்தியா, இலங்கைக்கு 2017 இல் ஒன் றையும், 2018 இல் அடுத்ததையும் வழங்க சம் மதித்துள்ளதான செய்தி அதிர்ச் சியைத் தருகிறது.

இந்திய அரசு இலங்கை அரசு பற்றி மிகத்தவறான மதிப்பீடுகளின் அடிப் படையில் உதவி வருவது கண்டிக்கத் தக்கது. இது பின்னர் ஆபத்தை விளை விக்கும்.

இலங்கையில் கடந்த அறுபதாண் டுக்கால தமிழின அழிப்புக் கொள்கையாலும், நடவடிக்கைகளாலும் தமிழ் மொழி பேசும் இலங்கைக் குடிமக்கள் லட்சக் கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர். பலலட்சம் தமிழின மக்கள், இலங்கையிலிருந்து துரத்தியடிக்கப்பட்டுள்ளனர். இன அழிப்புப் போரின் இறுதிக்கட்டத்தில் முள்ளிவாய்க்காலில் முப்ப டைகளையும் கொண்டு குண்டுகள் போட்டு அழித்த ரத்தச் சுவடுகள் கூட மறைவதற்குள்.

உலக நாடுகளே, இலங்கை அரசு மீது போர் நெறிகளை மீறியதற்காக, மனித உரிமை களை அழித்ததற்காக விசா ரிக்கப்பட வேண்டும் எனக் கோரி வருகின்றன.

இவ்வாறான நிலைமையில் போர்க் குற்றவாளியை விசாரிக்க வேண்டிய நாடுகளில் ஒன்றான இந்தியா, இலங்கையை நம்பிக்கைக்குரிய நட்பு நாடாகக் கருதுவதுடன் போர்க் கப்பல்களைத் தந்து உதவ முடிவு எடுத்திருப்பது நாம் இலங்கைக்கு ஆயுத உதவி ஏதும் செய்யவே இல்லை- மனிதாபிமான முறையில் உணவு, மருந்து கொடுத்து வருகிறோம் எனக்கூறி வந்தது, பொய் என்பதை நன் கொடையாக ரத்தக் கறை படிந்த இலங்கை அரசுக்கு போர்க்கப்பல்களை வழங் குவதன் மூலம், தன்னைத் தானே அம்பலப்படுத்திக் கொண்டு விட்டது.

இது இந்தியத் தமிழ் மீன வர்களைக் கொல்லவும், மிஞ்சியுள்ள தமிழர்களைப் பூண்டோடு அழித்தொழிக் கவும் உதவும் செயலாகிறது.

இதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டிப்பதுடன் இந்திய அரசு இத் திட்டத்தை உடனே ரத்து செய்ய வேண் டும். இலங்கை நட்பு நாடல்ல எனப் பிரகடனம் செய்ய வேண்டும்.

போர்க்குற்றங்களுக்கு விசா ரணை கோர வேண்டும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கெடுக்கக் கூடாது எனவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொள் கிறது- என்றுள்ளது.

## இலங்கையுடனான உறவை இந்தியா மறுபரிசீலனை செய்ய வேண்டும்

கனிமொழி கூறுகிறார்

சென்னை, செப்.9

இலங்கையுடனான உறவை இந்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தி.மு.க. எம்.பி. கனிமொழி வலியுறுத்தியுள்ளார்.

மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு பேரணி சென்னை மெரினா கடற்கரையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

காயிதே மில்லத், எத்திராஜ் மற்றும் வள்ளியம்மை கல்லூரியைச் சேர்ந்த 1000 இற்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்ட இந்த விழிப்புணர்வு பேரணியை தி.மு.க.வை சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி ஆரம்பித்து வைத்தார். அப்போது, செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி.

தமிழர்களின் நலனை கருத்தில் கொண்டு இலங்கை உடனான உறவை இந்திய அரசு மறுபரிசீலனை செய்ய் வேண்டும் என்றார்.

இலங்கைக்கு போர்க் கப்பல் வழங்குவதை இந்திய அரசு கைவிட வேண்டும் என்று வலியுறுத்திய கனிமொழி, போர்க் கப்பல் வழங்கினால் அது நமக்கே ஆபத்தாக முடி யும்.

இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளவதை பிரதமர் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.






## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியை திருமதி சிவகலா சண்முகராஜா

அவர்களின் அன்புத் தாய்

**நீலாயதாட்சி சிவஞானம்**

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த கவலை அடைவதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்,
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்,
கோண்டாவில்

(31629.14.15.17)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



| அன்னை மடியில் | ஆண்டவன் திருவடியில் |
| --- | --- |
| 27 | 10 |
| 01 | 08 |
| 1941 | 2013 |

**அமரர் சரஸ்வதி சண்முகராசா**

எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (07.09.2013) சனிக்கிழமை காலை 9 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.09.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எமது துயரத்தில் பங்கேற்ற அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

111/11, கலாசாலை வீதி.
திருநெல்வேலி,0774251332

(31530) (23/14)

குடும்பத்தினர்


**தவறிவிட்டது**

பாலசுப்பிரமணியம் புட்கரன் ஆகிய எனது (810261978V) NIC, லைசன்ஸ், இன்சூரன்ஸ் அடங்கிய பேர்ஸ் கல்வியங்காட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். 0729046864

**வாகனம் விற்பனைக்கு / வாடகைக்கு**

Isuzu ELF 250 (NP GE XX XX), Scooty மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
077 3655257

**அறை வாடகைக்கு உண்டு**

நல்லூர் சுற்றாடலில்
தொடர்பு:
077 351 9205
(31627) (4.8.3)



# மக்களை குழப்ப சிலர் பொய்ப் பரப்புரை

## விழிப்புடன் செயற்படுவோம் என்கிறார் விந்தன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்தாலும் மத்திய அரசினதும் மாகாண ஆளுநரினதும் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்கள் பொய்ப் பரப்புரை செய்கின்றனர். இதை யாரும் நம்பக்கூடாது. இது அரசியல் நோக்கம் கொண்ட பொய்ப் பரப்புரையே எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமான கனகரத்தினம் விந்தன் தெரிவித்தார்.

அரியாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில், கிராமத் தலைவர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றுமானால் அரசு அதனை இயங்க அனுமதிக்காது. இதனால் வடக்கின் அபிவிருத்திக்கு பாதிப்பு ஏற்படும். எனவே ஆளும் தரப்புக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என மக்கள் மத்தியில் ஆளுங்கட்சியினர் பரப்புரை செய்து வருவதாக நீங்கள் தற்போது எனது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளீர்கள்.

இது அரசின் பொய்ப் பரப்புரை உத்தி. அத்துடன் மக்களை ஏமாற்றி தமது பக்கத்திற்கு வாக்குகளை திசை திருப்பும் முயற்சியுமாகும். தேர்தல் விதிமுறைகளை மீறி பொய்ப் பரப்புரைகள் செய்பவர்களை மக்கள் நம்பி ஏமாறக்கூடாது.

நாம் இந்த தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணம் வடக்கு மாகாணத்தை கைப்பற்றி ஆட்சியமைத்து இதுவே போதும் எமக்கு என்று காட்டுவதற்கு அல்ல. மாகாண அதிகாரத்தை கொண்டு எமது உரிமைகளுக்காக குரல்கொடுப்பதே. அரசு மாகாண அதிகாரத்தை தரமறுத்தாலும் அதுவும் எமக்குசாதகமானதே. சர்வதேசத்துக்கு இலங்கை அரசின் நடவடிக்கைகள் பற்றி புரியவைப்பதற்கான தேர்தலே இது.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் சிந்திய குருதியும் கண்ணீரும் நிச்சயமாக சுபீட்சத்தைப் பெற்றுத் தரும். - என்றார். (ஐ)

# 13க்கும் மேலாக சென்று தமிழர்களுக்கு தீர்வாம்

13வது அரசமைப்புத் திருத்தத்துக்கும் மேலேசென்று தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்ற அபிலாசையுடனேயே நான் மாகாண சபைத் தோதலில் போட்டியிடுகின்றேன்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடும் புனாவாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் ஆலோசகர் சிவலிங்கம் சதீஷ்குமார் தெரிவித்தார்.



கடந்த வியாழக்கிழமை மாலை முல்லைத் தீவில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடதுசாரி அரசியல் கட்சிகளுக்கென்று அரசியல் கொள்கைகள் உள்ளன. நான் இடதுசாரிக் கொள்கையுடையவன்.

நாம் இனவாதத்தை முழுமையாக எதிர்க்கின்றோம். சாதி.மத.பேதங்களைப் புறந்தள்ளி, சமத்துவத்துடன் எமது மக்கள் அனைவரும் வாழ வேண்டும் என்ற அவாவுடனேயே நாம் அரசியல் செய்கின்றோம்.

தமிழ் மக்களாகிய நாமும் இந்த நாட்டில் சம உரிமைகளுடன் வாழவேண்டும் என விரும்புவது நியாயமானதே.

இடதுசாரி அரசியல் தலைவர்கள் எப்போதும் மக்களின் நலன்களுக்காகவே செயற்படுகின்றனர், போராடுகின்றனர் என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்- என்றார். (ஐ)


வடமாகாணசபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

எமது உயிரை உடைமைகளை உரிமைகளை
நாமே பாதுகாக்க...
4
கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்
B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்
இலங்கைத் தமிழரசுக் கட்சி

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்ட
ஜனநாயக ஐக்கிய முன்னணி
வேட்பாளர்


அருள்ஜெயந்திரன் (சண்ஜெ)

(சண்ஜெய் நிறுவனங்களின் உரிமையாளரும் முன்னாள் பிரபல வர்த்தகர் ச.வே. சண்முகம்பிள்ளையின் (நீர்கொழும்பு) பேரனும், முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ் - கிளிநொச்சி டாக்டர் இ.அருள்பிரகாசத்தின் மகனும்)
X 2
"தமிழர்களின் உரிமைகளை படிப்படியாக வென்றெடுக்கக் கூடிய துணிச்சல் மிக்க ஒரே வேட்பாளர்"
உங்கள் தெரிவு (இரட்டை இலைக்கும்), இல. 2 இற்கும்.
அச்சமில்லாத பிச்சையல்லாத தமிழ்ச் சமூகத்தை உருவாக்க ஒன்றுபடுவோம்

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்ட
தமிழரசுக் கட்சி வேட்பாளர்
இரத்தினலிங்கம் ஜெயசேகரன்

(வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளரும்)
X 6
உண்மையான நேர்மையான மக்கள் சேவையாளனை தெரிவு செய்து வெற்றிபெற வையுங்கள்
இல. 6 ஐத் தெரிவுசெய்து வெற்றிபெற வையுங்கள்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

-யாழ் மாவட்டம்-
வட மாகாணசபைத் தேர்தல் – 2013

தாயகம் தேசியம் சுயநிர்ணய
உரிமை எனும்
உரிமைகளை நோக்கிய
விடுதலைப் பாதையில்
எம் மக்களைத் துணிவுடன்
வழிநடத்திச் செல்ல..
திருமதி. அனந்தி சசிதரன் (எழிலன்)
பிரதம முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம் – கிளிநொச்சி
இணைப்பாளர், காணாமல்போனோர் உறவினர்கள் சங்கம்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
X 1


ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்

சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர், கல்வி,பண்பாட்டு,விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.
அவர்களை ஆதரிப்போம்
X 19
கல்வியின் ஊடாக அரசியல், சமூக பொருளாதார மேம்பாடு

வடக்கு மாகாணசபைத் தேர்தல் - யாழ். மாவட்டம்

தேசியம்... சூழலியம்... சுய நிர்ணயம்
எமது தேசியச் சூழலை நல்லாட்சி செய்யும் அரசியல் அதிகாரம் எம்மிடமே இருக்க வேண்டும்!
நம்பிக்கைக்குரிய தெரிவு
பொ.ஐங்கரநேசன்
M.Sc,PGDJMC
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்டம்

"மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்"
அரசியல் அதிகாரப் பகிர்வுக்காகவும் சமூக சமத்துவத்துக்காகவும்
ஞானசக்தி ஸ்ரீதரன்
(முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்)
X 13

# இராணுவ மயமாக்கலுக்கு வசதியாகவே தற்போது வடக்கில் அபிவிருத்திப் பணிகள்

## தமிழர் ஏமாளிகள் அல்லர் என்கிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், செப்.08
அபிவிருத்தி என்று கூறிக் கொண்டு வெளிநாடுகள் தரும் பணத்தில் பாதைகள் விரிவாக்கப்படுகின்றன. பாலங்கள் கட்டப்படுகின்றன. இவையெல்லாம் தமிழ் மக்கள் மீது கொண்ட அன்பினாலோ அல்லது நமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தினாலோ அல்ல. இராணுவம் உட்பட முப்படைகளும் வேண்டிய போது தாராளமாக சென்று வரவும் இராணுவ மயமாக்கலை மேற்கொள்ளவுமே இந்த அபிவிருத்திகள். இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரான நீதியரசர் விக்னேஸ்வரன்.

வடமராட்சி மாலுசந்தியில் அண்மையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நெப்போலியன் நாட்டின் சுஜானாவில் இருந்தவற்றையெல்லாம் செலவிட்டு பெருந்தெருக்களை எல்லாம் நவீனமயப்படுத்தினாராம். நாட்டு மக்கள் ஆகா நமது மன்னன் நல்ல வேலைகளைச் செய்கின்றார் என மகிழ்ச்சியடைந்தனராம்.

அந்த மகிழ்ச்சி சில காலங்கள் கூட நிலைக்கவில்லையாம். காரணம் நில ஆக்கிரமிப்புக்காக தனது பெரிய படையணியைக் கொண்டு செல்வதற்கே பாதைகள் அகலமாக்கப்பட்டன என்பதை மக்கள் பின்னர்தான் உணர்ந்தனராம். இதனால் பிற்காலத்தில் அந்த நாட்டு மக்கள் அவஸ்தைப்பட்டனரே அன்றி ஆனந்தப்படவில்லை.

இந்த நிலைமைதான் இன்று நம் நாட்டிலும் ஏற்பட்டுள்ளது. அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு வெளிநாடுகள் தரும் பணத்தில் பாதைகள் விரிவாக்கப்படுகின்றன. பாலங்கள் கட்டப்படுகின்றன. இவையெல்லாம் தமிழ் மக்கள் மீது கொண்ட அன்பினாலோ அல்லது நமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தினாலோ அல்ல. இராணுவம் உட்பட முப்



படைகளும் வேண்டிய போது தாராளமாக சென்று வரவும் இராணுவ மயமாக்கலை மேற்கொள்ளவுமே இந்த அபிவிருத்திகள்.

இந்த அபிவிருத்தி நம் மக்களைத் தொடர்ந்தும் அடிமைப்படுத்துமே அன்றி அதனால் மக்களுக்கு நன்மை கிடைக்கப் போவதில்லை.

அரசு திட்டமிட்டு மேற்கொள்ளும் சிங்களக் குடியேற்றங்களால் கலாசார சீர்கேடுகளே ஏற்பட்டுள்ளன. கல்வித் துறையிலும் அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன. அரசு தான் நினைத்ததை செய்து முடிப்பதற்காக நம்மில் பலரைக் கைக்கூலிகளாக வைத்து செயற்படுகின்றது.

இவர்கள்தான் இணக்க அரசியல் பற்றியும் பாதை அபிவிருத்தி பற்றியும் பேசுகின்றனர்.

வடமாகாணம் ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய தமிழர் தாயகம். யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் தமிழர்களை அகற்றிவிட்டு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்கின்றனர்.

கைக்கூலிகளின் துணையுடன் யாழ்ப்பாணத்திலும் கால் பதிக்கத் தயாராகின்றனர்.

இராணுவ பாதுகாப்பு இவர்களுக்கு கை கொடுக்கின்றது. எனவே சிங்கள இராணுவம் தமிழ் மண்ணை விட்டு வெளியேற்றப்பட வேண்டுமானால் வடமாகாண சபையின் அதிகாரத்தை நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கைப்பற்ற வேண்டும்.

நாம் ஏமாளிகள் அல்ல என்பதையும் உணர்த்த வேண்டும்.

அப்போதுதான் இராணுவமே எம் தமிழ் மண்ணை விட்டு வெளியேறு என்று அழுத்தம் கொடுக்க முடியும். அது உங்கள் கரங்களிலேயே இருக்கின்றது- என்றார். (ஐ-02)

# இந்திய- இலங்கை ஒப்பந்தம் அரசுக்கு தூக்குக் கயிறாகியது

## கூட்டமைப்பு வேட்பாளர் ஆனல்ட்



> இது நமது மண் - நமது சொந்த மண். இதை விட்டுக் கொடுக்க நாம் தயாரில்லை என்பதை சர்வதேச அரங்கிற்கு உணர்த்த வேண்டும்.

தமிழ் தலைவர்களை ஒதுக்கி விட்டு இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையில் தன்னிச்சையாகச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இன்று இலங்கை அரசுக்கு சுருக்குக் கயிறாக மாறிவிட்டது. புலி வாலைப் பிடித்தது போல் திக்குமுக்காடுகின்றது இலங்கை அரசு. இவ்வாறு தெரிவித்தார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளராகப் போட்டியிடும் இம்மானுவேல் ஆனல்ட்.

கடந்த வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைஅரசுஎத்தனையோ ஒப்பந்தங்களையும், அறிக்கைகளையும் கிழித்து எறிந்துள்ளது. ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மட்டும் அவர்களால் புறக்கணிக்க முடியவில்லை.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபை அதிகாரங்களை இந்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் திருத்தவோ நீக்கவோ முடியாது. இதன் காரணமாக இதுவரை காலமும் பிற்போடப்பட்டு வந்த வடமாகாண சபைத் தேர்தல் இப்பொழுது நடைபெறவுள்ளது.

எனவே அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரம் உட்பட அனைத்து அதிகாரங்களையும் நாம் பெறவேண்டும்.

இவற்றைப் பெற வேண்டுமானால் வடமாகாண சபையை அறுதிப் பெரும்பான்மையுடன் நாம் கைப்பற்ற வேண்டும்.

இது நமது மண் - நமது சொந்த மண். இதை விட்டுக் கொடுக்க நாம் தயாரில்லை என்பதை சர்வதேச அரங்கிற்கு உணர்த்த வேண்டும்.-என்றார். (ஐ- 2)















# மாவீரர்களை வழிபடுவதற்கு எமக்கு எவருடைய அனுமதியும் தேவையில்லை

## கீதாஞ்சலிக்கு சரவணபவன் எம்.பி. பதிலடி

நாம் வீடுகளில் தீபம் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றோம்.

இதை யாராலும் தடுக்கமுடியாது. இப்படி இருக்கையில் கிளிநொச்சியில் கீதாஞ்சலி அம்மையார் மாவீரர் தினம் கொண்டாட அரசிடம் அனுமதி பெற்றுத் தருவேன் என்கிறார்.

இவர் யார் எமக்கு அனுமதி பெற்றுத்தர? காணாமற் போன தன் கணவரைத் தேட முயற்சிக்காத இவர் வாக்குப் பெறுவதற்காக கலைவிடுகிறார்.

இவரிடம் ஒரு சவால் விடுக்கிறேன்-முடிந்தால் சிங்கள அரசினால் தரை மட்டமாக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களை மீண்டும் கட்டி எழுப்பி மக்கள் வழிபாட்டுக்கு அனுமதிக்க முடியுமா?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.



கடந்த வியாழக்கிழமை தென்மராட்சி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் சக்திமிக்க வேட்டுகளுக்கு சமமானவர்கள். இவர்கள் பெறும் வாக்குகளால் கிடைக்கும் வெற்றி, தமிழனைப் பார்த்து ஏளனம் செய்தவர்கள் வெட்கித் தலைகுனியவேண்டும். அது உங்கள் கைகளிலேயே இருக்கிறது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி.தமிழ் இனம் தாங்க முடியாத துன்பத்தில் ஆழ்ந்திருக்கையில், வெற்றிக் களிப்பில் வெடி கொளுத்தி ஆரவாரமாக கொண்டாடினர். மண்ணைத் தொட்டு முத்தமிட்டுகும்பிட்டனர். தமிழர்களின் வலியில் இன்பம் கண்டனர்.

இவர்களுக்கு பதிலடி கொடுக்கும் வாய்ப்பை நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

1971ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், 70 வீதமான மக்கள் வாக்களித்து 18 பேரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பினோம்.

இதேபோன்றே எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள வடமாகாணசபைத் தேர்தலிலும் 80, 90 வீதம் வாக்களித்து மாகாணசபைக்கான அனைத்து ஆசனங்களையும் கூட்டமைப்பு கைப்பற்றும் வகையில் அணிதிரள்வோம். 22ஆம் திகதி கிடைக்கும் தேர்தல் முடிவின் போது நாமும் வெடி கொளுத்திக் கொண்டாடுவோம்.

அந்த வெடிஓசை நமது வலியின் இன்பம் கண்டவர்களுக்கும், மண்ணைத் தொட்டுக் கும்பிட்டவர்களுக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும். முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்குப் பதிலடியாக அமைய வேண்டும்.

ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், தான் மக்களோடு மக்களாக இருந்து செயற்படுவதாகக் கூறுகின்றார்.

அது உண்மைதான் மக்களோடு மக்களாக நின்று தான் நம்மைக் காட்டிக் கொடுக்கின்றனர். இவர்கள்தான் ஊடகவியலாளர் மீதான படுகொலைகளுக்கும், தாக்குதல்களுக்கும் துணை போகின்றனர்.

தமிழ் மக்களுக்கு நியாய பூர்வமாகக் கிடைக்க வேண்டிய பல்வேறு உதவிகளைத் தடுக்கின்றனர்.

சிங்கள அரசு வடக்குக்கு பொருளாதாரத் தடைவிதித்து துன்புறுத்திய போது ஒரு சோப் துண்டு நூறு ரூபாவுக்கும், மண்ணெண்ணெய் ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்தனர்.

மக்கள் ஒரு பொருளையும் இங்கு கொண்டுவர முடியாத நிலையில், இவர்கள் இராணுவத்தின் பங்களிப்புடன் பொருள்களைக் கொண்டுவந்து கோடி கோடியாகக் கொள்ளை இலாபம் அடித்தனர்.

இவை எல்லாம் ஈ.பி.டி.பி. யினர் மக்களோடு மக்களாக நின்று செய்த சேவைகள்தான் என்பதை எம்மக்கள் மறந்து விடவில்லை.-என்றார். (ஐ-2)



# அழுகிப் போன வெற்றிலையை ஒருபோதும் ஆதரிக்காதீர்கள்

## சொல்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், செப்.9

தமிழ் மக்களின் மங்கலகரமான பொருள்களில் வெற்றிலையும் ஒன்று. அதில் வாடலும் உண்டு. காய்ந்ததும் உண்டு. இவற்றில் நல்லவற்றைத் தெரிவு செய்யுங்கள் என்றார் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.

ஈ.பி.டி.பியில் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுமக்களுடனான சந்திப்பு ஒன்று கடந்த திங்கட்கிழமை சுழிபுரம் காட்டுபுலம் பகுதியில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் போட்டியிடுகின்றனர்.

அவர்களில் சரியானவர்களை நீங்கள் தெரிவு செய்ய வேண்டும். வெற்றிலையில் வாடலும் உண்டு. காய்ந்ததும் உண்டு. அதேபோல் சமுதாயத்திலும் நல்லது கெட்டது உண்டு. எனவே நல்லவற்றைத் தெரிவு செய்யுங்கள். நீங்கள் நினைத்தது நடக்கும்- என்றார். (ஐ-21)






# உரிமைகளைத் தட்டிப் பறிப்பதுதான் அபிவிருத்தியா..? மாகாண அதிகாரத்தால் அடிப்படை தேவைகளை பெறலாம்

## கிளிநொச்சியில் கிழக்கு எதிர்க்கட்சித் தலைவர் தண்டாயுதபாணி



அக்கராயன், செப்.9

தமிழர்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளுக்கு பதில் சொல்லக்கூடிய அளவுக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும் மாகாணசபையில் உள்ள அதிகாரங்களை வைத்து அடுத்த கட்டத்துக்கு நகர்வதிலேயே வெற்றி தங்கியுள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தண்டாயுதபாணி.

கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் . கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் கிளிநொச்சியில் நடைபெறும் இந்தப் பரப்புரைக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றியைப் பெற வேண்டுமென்பதற்காக நானும் பங்கு கொண்டுள்ளேன்.

வடமாகாணசபைத் தேர்தலில் பெறும் வெற்றி வடக்கு தமிழர்களுக்கு மட்டுமல்ல கிழக்கு மாகாணத் தமிழர்களையும் பலமடையச் செய்யும்.

தற்போது அபிவிருத்தி அரசியல் பற்றி அரசதரப்பினர் பேசுகின்றனர். அரசுடன் ஒட்டியிருக்கும் தமிழர்கள் அபிவிருத்தியில் நாட்டமில்லாதவர்கள். அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்தியை தடுக்கிறது என்று கூறிவருகின்றனர்.

அபிவிருத்தி என்ற சொல்லுக்கு அவர்கள் சொல்கின்ற வியாக்கியானம் பாலங்கள், காப்பெற் வீதிகள், கட்டடங்கள், வீடுகள், உத்தியோகங்கள்தான். அபிவிருத்தி என்ற சொல்லின் வியாக்கியானத்தை சரி யாகப் புரிந்து கொள்ளாத அரசினுடைய அடிவருடிகள் தொடர்பாகத் தமிழ் மக்கள் கவனமாக இருக்க வேண்டும்.

அபிவிருத்தி என்பது மக்களு டைய வாழ்வாதாரத்தை மேம் படுத்தி வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, மொழி கலாசாரத்தைமேம் படுத் தும் முன்னேற்ற நடவடிக்கையை குறித்து நிற்கிறது.

இதைவிடுத்து பாலங்களையும் வீதிகளையும் அமைத்துவிட்டு அதற்குப் பதிலாக எமது உரிமைகளைப் பறித்துக் கொள்வது உண்மையான அபிவிருத்தியல்ல.

அபிவிருத்தியின் பலாபலன்களை சுதந்திரமாக அனுபவிக்கக்கூடிய சூழல் உருவானால்தான் அபிவிருத்தி என்று பொருள்படும்.

மாகாணசபையில் ஒன்றுமில்லை என்று கூறுவதை நான் ஏற்கவில்லை. மாகாணசபையிலும் அதிகாரங்கள் உண்டு. நான் மாகாண சபையில் இருந்து வந்து பேசுகிறேன். தமிழர்களின் நீண்டகால அரசியல் கோரிக்கைகள் அபிலாசைகளுக்கு பதில் சொல்லக்கூடிய அளவுக்கு அதிகாரங்கள் இல்லை என்பது உண்மை. ஆனால் அடிப்படை தேவைகளை நிறைவுசெய்யக் கூடிய அதிகாரம் உள்ளது. அதை கையாள்வதில்தான் வெற்றியுள்ளது-என்றார். (ஐ-18)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
அரச மற்றும் உள்ளூராட்சித் துறையில் உள்ளவர்களின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு எனது காத்திரமான பங்களிப்பை வழங்கிடுவேன்
X 7
தம்பி க.மு. தம்பிராசா
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்ட
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X 13
துணிச்சல் மிக்க இளம் சட்டத்தரணி
கே.சஜந்தன்
இருப்பதைக் காப்போம்! இழந்ததை மீட்போம்!
சுயாட்சி வெல்ல வாக்களிப்போம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(C/11220)



பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் மக்கள் பலத்துடன்
வட மாகாணசபைத் தேர்தலில் வவுனியா மண்ணில் ...
எம்.எம்.ரதன் ஆசிரியர்
(தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி இளைஞர் அணி)
வவுனியா மாவட்டம்
X 8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
எங்கள் வாக்கு
எம்.எம்.ரதன்
ஆசிரியருக்கே



வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்டம்
சுதந்திரம் எமது பிறப்புரிமை!
சுயாட்சி எமது கோரிக்கை!!
தமிழ் இனப் படுகொலைகளுக்காக வெளிப்படையான சர்வதேச நீதி விசாரணை தேவை என முக்கிய தமிழர் எம்.கே.சிவாஜிலிங்கம் பகிரங்கமாக வலியுறுத்தும் ஒரே ஆளாக இருப்பதாக அமெரிக்கத் தூதுவர் தனது நாட்டின் வாஷிங்டன் நகருக்கு 15.01.2010 இல் அனுப்பி வைத்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்ததாக விக்கி லீக்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.
X 9
எம்.கே.சிவாஜிலிங்கம்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.

| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | | | | | | | | X | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வோம்
* தேசியம் * தாயகம் * சுயநிர்ணய உரிமை



வடமாகாண சபைத் தேர்தல் 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
கிளிநொச்சி மாவட்டத்தின்
ஒரேயொரு பிரதான பெண் வேட்பாளர்
எமது பெண்கள் ஜனநாயக ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் களமாடியது அபிவிருத்திக்காக அல்ல தமிழினத்தின் அரசியல் விடுதலைக்காக மட்டுமே!
பெண்களின் உரிமைக்கும் சமத்துவத்துக்கும் ஓங்கி ஒலிக்கும் ஒரே பெண் குரல்
X 4
கே. வினுபானந்தகுமாரி (ஆசிரியை)
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)



# தெற்கு பொம்மைகளைப் போல் அரசு வடக்கு மக்களை எண்ணக்கூடாது

## வடமராட்சியில் அரியநேத்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், செப்.9

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மாகாண சபை முதலமைச்சர்களுக்கு எழுதப்படாத விதி ஒன்று உண்டு. அங்கு பதவிக்கு வரும் முதலமைச்சர்கள் ஆமையாகவும் ஊமையாகவும் பொம்மையாகவும் இருந்தே ஆக வேண்டும். ஆனால் வடமாகாண சபை வேட்பாளர்கள் அப்படி அல்லர். புத்திக் கூர்மையானவர்கள் அத்தோடு நேர்மையானவர்கள். இதனால்தான் அரசு மிரண்டு போய் நிற்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன். வடமராட்சி திக்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் தலை எழுத்து தமிழில்தான் எழுதப்பட்டுள்ளது. அது அகர வரிசைப் படுத்தப்பட்டுள்ளது. அதனை எந்த சக்தியாலும் மாற்றிவிட முடியாது.

**தலைவர்கள் மாறலாம். ஆனால் தமிழர்களின் உணர்வுகள் மாறமாட்டா.**



தந்தை செல்வா தலைமையில் அகிம்சைப் போராட்டம், பின்னர் அண்ணன் பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டம். இன்று சர்வதேச அரங்கம் ஏற்றுக் கொண்டுள்ள முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான ஜனநாயக அரசியல் போராட்டம்.

நாம் யாருக்கும் சோரம் போகமாட்டோம். எம்மை எவராலும் விலை கொடுத்து வாங்கவும்முடியாது.

தமிழ்த் தேசியத்துக்காக குரல் எழுப்பிய தலைவர்களைக் கொன்றொழித்தார்கள் சிங்கள ஆட்சியாளர். ஆனால் தமிழ்த் தேசிய உணர்வை இவர்களார் கொல்ல முடிந்ததா? தலைவர்கள் மாறலாம். ஆனால் தமிழர்களின் உணர்வுகள் மாறமாட்டா. இன்று முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையில் மூன்றாம் கட்ட ஜனநாயகப் போராட்டம் ஆரம்பித்துள்ளது. உங்கள் கைகளில் இருக்கும் வாக்குச் சீட்டு என்ற ஆயுதத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெல்லவைப்போம்.-என்றார். (ஜ-2-8)

# இணக்க அரசியலால்தான் இந்தளவுக்கு அபிவிருத்தி

## சர்வதேசமே எம்மை அழித்தது என்கிறார் சந்திரகுமார் எம்.பி

அக்கராயன், செப்.9

நாம் இணக்க அரசியல் அணுகுமுறையைக் கையில் எடுத்திருக்காவிட்டால் வட மாகாணத்தில் இப்படியான அபிவிருத்தி மேம்பாடுகளைக் கண்டிருக்க முடியாது. இணக்க அரசியல் அணுகுமுறை இருந்ததால்தான் எமது மக்களின் மேம்பாடும் பிரதேச அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித் தார். கிளிநொச்சி விவேகானந்தா நகரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் வாக்குப் பலத்தினால் நாடாளுமன்றம் சென்று, அரசுடன் பேரம் பேசி மக்களுக்காகச் செய்யும் அபிவிருத்திப் பணிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கொச்சைப்படுத்துகின்றனர்.

அபிவிருத்தி என்பது சிங்கள அரசிடம் சென்று மண்டியிட்டு பெறும் பிச்சை என்கின்றனர். அல்லது சலுகை அரசியல் என்று கூறுகிறார்கள். எமது கட்சி இணக்க அரசியல் அணுகுமுறையைக் கையில் எடுத்திருக்காவிட்டால் வட மாகாணத்தில் இப்படியான அபிவிருத்தி மேம்பாடுகளைக் கண்டிருக்க முடியாது. இணக்க அரசியல் அணுகுமுறை இருந்ததால்தான் எமது மக்களின் மேம்பாடும் பிரதேச அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளன.

நாமும் எதிர்ப்பு அரசியல் நடத்தியிருந்தால் மக்கள் அபிவிருத்தியைக் கண்டிருக்க முடியாது.

சர்வதேச சமூகம் இலங்கை அரசுடன் இணைந்து போரை நடத்தியது. தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் மட்டும் மோதவில்லை. சர்வதேசத்துடனும் மோதினார்கள். சர்வதேசம் தமிழர்களுக்குத் தந்த பரிசு அழிவுதான்.

முள்ளிவாய்க்காலுக்கு அமெரிக்க கப்பல்கள் வரும், தமிழ்மக்களைக் காப்பாற்றும் என்று கூறப்பட்டபோது அமெரிக்க ஆயுதக் கப்பல்கள் கொழும்புக்குத்தான் வந்தன.-என்றார். (ஜ-18)




















## வடமாகாண சபைத் தேர்தல்-2013
## யாழ் மாவட்டம்

**அன்பார்ந்த அரச மற்றும் உள்ளூராட்சித்துறை அலுவலர்களே!,**

எதிர்வரும் 21.09.2013ஆம் திகதி நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் பட்டயச் செயலாளரும் ஓய்வுநிலை யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளருமான நான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகிறேன்.

உங்களைப் போலவே நானும் ஒரு அரச அலுவலராகச் சேவையாற்றியவன் என்றவகையில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பாகுபாடுகள், அழுத்தங்கள், பழிவாங்கல்கள், பதவியுயர்வு மறுத்தல் போன்ற சகல பிரச்சினைகளையும் நடைமுறையில் அனுபவித்து அறிந்தவன். அரச அலுவலர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இலகுவில் புரிந்து கொள்ளும் அனுபவ ஆற்றல் உள்ளவன்.

1987ஆம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்டு செயலிழந்த வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையின் இடைக்கால நிர்வாக சபையின் பிரதான நிர்வாகியாக நியமிக்கப்பட்ட நாளில் இருந்து மாகாண நிர்வாக முறைமை பற்றிக் கரிசனையுடன் கவனம் செலுத்தி வருபவன்.

உள்ளூராட்சி, கூட்டுறவு துறைகளில் நீண்ட கால அனுபவம் கொண்டவன். இவற்றின் மூலம் வடமாகாணம் சம்பந்தமான வினைத்திறனான செயற்பாட்டிற்குப் பங்களிக்க முடியும் எனத் திடமாக நம்புபவன்.

எனவே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுக்கு நேரேயும் எனது விருப்பு வாக்கு இலக்கமான எட்டுக்கு "8" மேலேயும் புள்ளடியிட்டு நானும் மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்பட வாக்களிக்குமாறு அன்புரிமையுடன் வேண்டுகிறேன்.

அன்புடன்,

**சீ.வீ.கே.சிவஞானம்**
**(ஓய்வுநிலை மாநகர ஆணையாளர்)**






தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

உதயன்
09/09/2013

# பிரதமர் பதவிக்கு ராகுலே பொருத்தம்

## மன்மோகன் சிங் கூறுகின்றார்



புதுடில்லி, செப்.9

"நான் ஒரு திறந்த புத்தக்கம். ராகுல் காந்தியின் கீழ் பணியாற்றுவதற்குத் தயாராக உள்ளேன். பிரதமர் பதவிக்கு ராகுல் காந்தி தான் சரியான தெரிவு"- இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

ஜி-20 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ரஷ்யா சென்றிருந்த பிரதமர் மன்மோகன் சிங் நேற்றுமுன்தினம் இந்தியா திருப்பினார். அப்போது விமான நிலையத்தில் அவரைச் சந்தித்த செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால் மூன்றாவது முறையாகவும் பிரதமராகப் பதவியேற்பீர்களா?" என்று என்னிடம் திரும்பத் திரும்பக் கேட்கப்படுகின்றது. நானும் அதற்குப் பல தடவைகள் பதில் கூறிவிட்டேன்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸ் மேலிடம் எனக்கு எந்தப் பணி கொடுத்தாலும் அதைச் செய்வதற்கு ஆர்வமாகவும். தயாராகவும் இருக்கின்றேன். பிரதமர் பதவிக்கு ராகுல் காந்தி தான் சரியான தெரிவு. நான் ஒரு திறந்த புத்தகம்.

எனது நடத்தை குறித்து யாராவது ஆய்வு செய்தால் அதை நான் தடுக்க மாட்டேன்.

அரசியலைப் பொறுத்தவரை நிரந்தர எதிரியும் கிடையாது. நண்பனும் கிடையாது. மதச் சார்பற்ற எந்தக் கட்சியுடனும் கூட்டணி அமைக்க காங்கிரஸ் தயாராக உள்ளது.

எல்லை தாண்டிய பயங்கரவாதம் எமக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. பாகிஸ்தானிடம் இதுகுறித்துப் பேச்சுக்கள் நடத்துவது தொடர்பில் எதுவும் முடிவு செய்யப்படவில்லை. இரு நாடுகளுக்கும் இடையே சுமுக நிலை தோன்றிய பின்னரே பேச்சுக் குறித்து ஆலோசிக்க முடியும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# இலங்கை அரசு மீது விசாரணை அவசியம்

## வலியுறுத்துகின்றார் ராமதாஸ்

சென்னை, செப்.9

இலங்கையில் நடந்த இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்.


இது குறித்து அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

"இலங்கையில் 2009ஆம் ஆண்டு நடந்த போரில் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான தமிழர்களை இலங்கை அரசு திட்டமிட்டுப் படுகொலை செய்தது. அந்த மிகப் பெரிய இனப் படுகொலையைச் செய்தவர்கள் இதுவரை தண்டிக்கப்படவில்லை.

இலங்கையில்இனப்படுகொலைக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கவும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தரவும் என்னால் ஏற்படுத்தப்பட்ட பசுமைத் தாயகம் அமைப்பு ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை மூலமாக நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையால் சிறப்பு ஆலோசனை அமைப்பாக அங்கீகரிக்கப்பட்ட பசுமைத் தாயகத்திற்கு ஐ.நா. சபையின் கூட்டங்களில் பங்கேற்று கருத்து தெரிவிக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பயன்படுத்தி 2009 ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஐ.நா.மனித உரிமை ஆணையக் கூட்டங்களில் பங்கேற்று ஈழத் தமிழர்களுக்காக பசுமைத் தாயகம் குரல் கொடுத்து வருகிறது.

இந்தநிலையில் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் 24 ஆவது கூட்டம் ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகின்றது. அதில் இலங்கை தொடர்பாகவும் விவாதிக்கப்படும். இலங்கையின் களநிலை தொடர்பாக இலங்கைக்கு சென்று விசாரணை நடத்திய ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம்



பிள்ளை அது குறித்த அறிக்கையை இந்தக் கூட்டத்தில் தாக்கல் செய்யவுள்ளார்.

இந்தக் கூட்டத் தொடரில் பசுமைத் தாயகம் அமைப்பின் பிரதிநிதிகளும் பங்கேற்க உள்ளனர். அங்கு நடைபெறும் விவாதங்களின்போது இலங்கையில் நடந்த இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்பதை அங்குள்ளவர்களுக்குத் தெளிவுபடுத்துவார்கள்" என்று கூறப்பட்டுள்ளது. (ற)

# 4,000 கிலோவில் விநாயகருக்கு லட்டு

ஐதராபாத், செப்.9

இன்று விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படுவதை முன்னிட்டு ஐதராபாத்தில் விநாயகருக்கு 4 ஆயிரம் கிலோ எடையில் மிகப் பெரிய லட்டு தயார் செய்யப்பட்டுள்ளது.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு ஐதராபாத்தில் 56 அடி உயர விநாயகர் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அந்த விநாயகர் சிலை "ஐதராபாத் கணேஷ்' என்று அழைக்கப்படுகிறது. இந்த விநாயகருக்கே இனிப்புகள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று 4 ஆயிரம் கிலோ எடையில் லட்டு தயாரித்துக் கொடுத்துள்ளது.

அந்த லட்டைத் தயாரிக்க 1,600 கிலோ சீனி, 1,000 கிலோ கடலைப் பருப்பு, 900 கிலோ நெய், 200 கிலோ முந்திரிப் பருப்பு, 100 கிலோ உலர் திராட்சை, 50 கிலோ ஏலக்காய் மற்றும் 10 கிலோ பச்சைக் கற்பூரம் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன என்று அந்த நிறுவனம் கூறுகின்றது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் சதுர்த்திக் கொண்டாட்டங்களின் போது இந்த லட்டு பிரசாதமாக வழங்கப்படவிருக்கின்றது. (ற)

# உ.பிரதேசத்தில் வன்முறை பாதுகாப்பில் இராணுவம்



முசாபர்நகர், செப்.9


உத்தரபிரதேச மாநிலம் முசாபர்நகர் மாவட்டத்தில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலில் 12 பேர் உயிரிழந்துள்ளதுடன், 34 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இரு பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடே வன்முறையாக உருவெடுத்துள்ளது. வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்ததை அடுத்து, அங்கு இராணுவத்தினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த உத்தரபிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ்,

"வன்முறைச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் வதந்திகளை நம்பாமல் அமைதி காக்க வேண்டும்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா 20 லட்சம் ரூபா நிவாரண நிதி வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது" என்று தெரிவித்தார். (ற)



## சீமான் - கயல்விழி திருமணம் நடந்தேறியது

நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமானுக்கும், மறைந்த சபாநாயகர் காளிமுத்துவின் மகள் கயல்விழிக்கும் திருமணம் நேற்று சென்னையில் நடந்தேறியது. சென்னை நந்தனம் வை.எம்.சி.ஏ. விளையாட்டு மைதானத்தில் தமிழ் முறைப்படி நடந்த திருமணத்துக்கு பழ. நெடுமாறன் தலைமை தாங்கினார். திருமணத்துக்கு பல்வேறு தமிழர் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், திரைத்துறையினர், பல்துறை பெருமக்கள் வந்திருந்தனர். அவர்களுக்கு மரக் கன்றுகள் நினைவுப் பரிசாக வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ற)



ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நடைபெறவுள்ள 'மிஸ் யூனிவேர்ஸ்' அழகிப் போட்டியில் இந்தியா சார்பாகக் கலந்துகொள்வதற்கு மும்பையைச் சேர்ந்த மானசி மோகே தெரிவு செய்யப்பட்டுள்ளார். 'மிஸ் இந்தியா -2013' அழகிப் போட்டியின் இறுதிச் சுற்றில் வென்று 'மிஸ் இந்தியா - 2013' பட்டத்தை வென்றதன் மூலமே அவர் 'மிஸ் யூனிவேர்ஸ்' போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார். 'மிஸ் யூனிவேர்ஸ்' அழகிப் போட்டி எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. (ற)

# 300 திருமணங்கள் செய்த 'கல்யாண மன்னன்' கைது

ராஜ்நாத்கான், செப்.9

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் 300 பெண்களை திருமணம் செய்த ஒருவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ராஜ்நாத்கான் மாவட்டத்தைச் சேர்ந்தவன் 47 வயதுடைய விஜய் கஜபியே. இவன் பல பெண்கள்ளை ஏமாற்றி திருமணம் செய்துள்ளான் என்று மாவட்ட ஆணையாளருக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் இருந்தன. அதையடுத்து பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டனர். அந்த நபர் இதுவரை 300 திருமணங்கள் செய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்தது. அதையடுத்து அந்த நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில்,

"சத்தீஸ்கர் மாநிலத்தில் கலப்புத் திருமணம் செய்வோருக்கு உதவித் தொகையாக, 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அதனால் வேறு சாதியைச் சேர்ந்த பெண்களை பதிவுத் திருமணம் செய்யும் விஜய், அரசின் உதவித் தொகையைப் பெற்றவுடன் அதில் சிறிது தொகையை செய்த பெண்ணுக்கும், சிறிது தொகையை தனக்கு உதவிய அரசு ஊழியர்களுக்கும் கொடுத்து விட்டு, சான்றிதழை கிழித்து எறிந்து விடுவான்.

பின்னர் வேறு மாவட்டத்திற்கு சென்று மீண்டும் வேறு பெண்ணைத் திருமணம் செய்வான். இப்படியே 300 பெண்களை மணந்து பணத்தை சுருட்டியுள்ளான்.

அதற்குத் தேவையான, பெயர் மற்றும் இருப்பிடச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் ஆகியவற்றை போலியாக தயாரித்துள்ளான் விஜய். அவன் தங்கியிருந்த இடத்திலிருந்து, போலி ரப்பர் முத்திரைகள், கடிதத் தலைப்புகள், சான்றிதழ்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன." என்று தெரிவித்துள்ளனர். (ற)

# இந்திய இராணுவத்தை கச்சதீவில் அமர்த்துக

## மீனவர் ஐக்கிய முன்னணி கோரிக்கை

சென்னை, செப்.9

கச்சதீவை மீட்டு அங்கு இந்திய இராணுவமையத்தை அமைத்து மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று இந்திய மீனவர் ஐக்கிய முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

தூத்துக்குடியில் நடைபெற்ற அந்த முன்னணியின் பொதுக் கூட்டத்தின்போதே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் சுபாஸ் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கும்போது,

"இந்திய மத்திய அரசு கச்சதீவை மீட்டு அங்கு இந்திய இராணுவமையத்தை அமைக்க வேண்டும். அதன் மூலம் மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். மீனவர்கள் வாழ்வாதரத்திற்காக 700 நாள்கள் அகிம்சை முறையில் போராட்டம் நடத்தும் கூடங்குளம் மீனவர்களுக்கு ஆதரவு தெரிவிப்போம்.

**இந்திய மத்திய அரசு கச்சதீவை மீட்டு அங்கு இந்திய இராணுவ மையத்தை அமைக்க வேண்டும். அதன் மூலம் மீன வர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும்.**

ஒட்டு மொத்த மீனவர்களின் வாழ்வாதாரங்களை பாதிக்கும் சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை உடனே நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துவதுடன் இவற்றை இன்று நடைபெறும் மாநில பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும் திட்டமிட்டுள்ளோம்" என்று தெரிவித்தார். (ற)




சிறந்த அரச சேவையை வழங்குமாறு வலியுறுத்தி பிரேஸிலின் ரியோடி ஜெனிரோவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்ற முற்பட்ட பொலிஸாருடன் இடம்பெற்ற மோதல்களை அடுத்து பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிரேஸிலின் சுதந்திர தினக்கொண்டாட்டங்களுக்கு இடையூறை ஏற்படுத்தியிருந்தன என்று பொலிஸார் கூறுகின்றனர். ஆனால் பொலிஸார் அத்துமீறி தாக்குதல்களை மேற்கொள்கின்றனர் என்று பொதுமக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

ஆஸி. பொதுத் தேர்தல்

## ஆளும் கட்சிக்குத் தோல்வி

மெல்பேர்ன், செப்.9
ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியை தோற்கடித்து லிபரல் கட்சி வெற்றி பெற்றுள்ளது.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்களிப்புகளின் பின்னர், வாக்கு கணக்கெடுக்கப்படத் தொடங்கியது முதலே ஆளும் தொழிலாளர் கட்சி பின்னடைந்த நிலையிலேயே காணப்பட்டது. எதிர்க்கட்சிகளே அதிக இடங்களைக் கைப்பற்றி வந்தன. இறுதியில் எதிர்க்கட்சியான லிபரல் கட்சி பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றது. அதனையடுத்து புதிய பிரதமராக லிபரல் கட்சி தலைவரான டோனி அபட் பதவியேற்கவுள்ளார்.
கடந்த ஆறு ஆண்டு காலமாக கெவின் ரூட் தலைமையிலான தொழிலாளர் கட்சி ஆட்சியில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)



புதிய பிரதமராக லிபரல் கட்சி தலைவரான டோனி அபட் பதவியேற்கவுள்ளார்.

## பாகிஸ்தானை தவிருங்கள்

### அமெரிக்க பிரஜைகளுக்கு எச்சரிக்கை

வோஷிங்டன், செப்.9
பாகிஸ்தானுக்கான பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு தமது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது அமெரிக்கா.
இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை விடுத்துள்ள அறிக்கையில்,
"பாகிஸ்தானுக்கு மிகவும் அவசர காரியங்களுக்கு மட்டுமே பயணங்களை மேற்கொள்ளுங்கள். பிற காரணங்களுக்காக, குறிப்பாக, சுற்றுலா செல்வதை அமெரிக்கப் பிரஜைகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஜனநாயகமல்ல அமெ. இலக்கு

### தகுந்த பாடம் புகட்டுவோம் என்கிறது சிரியா

டமாஸ்கஸ், செப்.9
சிரியா மீதான அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைக்கு ஜனநாயகமோ, சீர்திருத்தமோ காரணம் அல்ல என்பதை நாம் அறிவோம். அவர்களுக்குத் தகுந்த பாடம் ஒன்றைப் புகட்டும் முடிவிலேயே நாம் உறுதியாக இருக்கின்றோம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது சிரியா.
நாட்டின் தற்போதைய நிலை குறித்து இந்தியாவுக்கான சிரியத் தூதர் ரியாத் காமல் அப்பாஸ் விளக்கமளித்தார். அதன்போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார். அவர் மேலும் இது தொடர்பாகக் கூறும்போது,
"சிரியாவில் நடந்து வரும் சம்பவங்களின் நோக்கமானது, அங்கு ஜனநாயகத்தை ஏற்படுத்துவதோ, சீர்திருத்தங்களை மேற்கொள்வதோ அல்ல. ஜனாதிபதி பஷார் அல் அஸாத்தின் ஆட்சியை அகற்ற அமெரிக்கா செய்து வரும் சதியாகும்.
நாங்கள் அமெரிக்கக் கொள்கையை விரும்பவில்லை. போராடி எங்கள் மக்களைக் காப்போம். எங்கள் நாட்டை விட்டுக் கொடுக்க மாட்டோம். எங்களின் இயற்கை வளங்களைக்கட்டுப்படுத்த அமெரிக்கா விரும்புகிறது. மத்திய கிழக்கில் அமெரிக்கா விரும்பும் ஒரே விடயம் எண்ணெய் மற்றும் இஸ்ரேலின் பாதுகாப்பு ஆகியவைதான்.
சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டனவா என்பதைக் கண்டறிய நேரில் வந்து பார்க்குமாறு சர்வதேச நாடுகளை கேட்டுக் கொள்கிறோம். இந்த விவகாரத்தில் ஆதாரம் காட்டுமாறு அமெரிக்காவுக்கு சவால் விடுக்கிறேன்.
ஈராக் விஷயத்திலும் இதே பொய்யைத்தான் அமெரிக்கா கூறியது. 10 ஆண்டுகளுக்குப் பின் அது தவறு என்று அமெரிக்காவே ஒப்புக்கொண்டது. ஆனால் சிரியா மீது தாக்குதல் நடத்தினால் அமைதியாக இருக்கவும் மாட்டோம். ஓடி ஒளியவும் மாட்டோம்" என்று தெரிவித்தார். (ற)

## பகிரங்கமாக மன்னிப்பு கோரவேண்டும் அமெ.

### உளவு பார்த்தமை தொடர்பாக பிரேஸில்

பெர்லின், செப்.9
தமது நாட்டு ஜனாதிபதியின் தகவல்களை உளவு பார்த்தமை தொடர்பாக அமெரிக்கா பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அதிரடியாக அறிவித்துள்ளது பிரேஸில்.
பிரேஸில் ஜனாதிபதி தில்மா ரவுசெப்பின் தொலைபேசி உரையாடல்கள், மின்னஞ்சல் தகவல்களை அமெரிக்க உளவுநிறுவனம் கண்காணித்தது என்று பிரேஸில் குற்றஞ்சாட்டியுள்ளது.
இதுகுறித்து பிரேஸில் உளவுத் துறை உயர் அதிகாரிகள் கூறுகையில்,
"பிரேஸில் ஜனாதிபதி தில்மா ரவுசெப் மற்றும் மெக்சிகோ ஜனாதிபதி என்ரிக் பெனா நியோட்டோ ஆகியோரின் தொலைபேசி உரையாடல்களை அமெரிக்க தேசிய உளவு நிறுவனம் கண்காணித்துள்ளதுடன், பிரேஸில் ஜனாதிபதியின் மின்னஞ்சல்களையும் அமெரிக்க உளவு நிறுவனம் உளவு பார்த்துள்ளது.
இவ்வாறு செய்தது ஏன்? என்பதற்கு அமெரிக்கா முழு விளக்கம் அளிக்க வேண்டும். அத்துடன் இது தொடர்பாக பகிரங்கமாக மன்னிப்பும் கேட்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளனர்.
அதேவேளை, அடுத்த மாதமளவில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைச் சந்திப்பதாக இருந்த நிகழ்ச்சி நிரலையும் ஜனாதிபதி தில்மா ரத்து செய்துள்ளார் என்று பிரேஸில் ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ற)

## தந்தத்துக்காக யானைகள் கொலை

வாங்கே, செப்.9
சிம்பாப்வே, வாங்கே தேசிய பூங்காவில் தந்தத்திற்காக 41 யானைகள் நஞ்சூட்டப்பட்டு கொல்லப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதுகுறித்த விவரங்களை வெளியிட மறுத்த வாங்கே தேசிய பூங்காவின் பேச்சாளர்,
"இந்த விடயம் குறித்த உண்மையை கண்டறிவதற்கான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன" என்று தெரிவித்தார்.
ஆசியாவில் தந்தங்களுக்கு காணப்படும் அதிக கேள்வி காரணமாக, ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் யானைகள் அதிகளவில் கொல்லப்படுகின்றன, (ற)

## ஐ.நா. அனுமதித்தாலே தாக்குதல் – பிரான்ஸ்


மொஸ்கோ, செப்.9
ஐ.நாவின் அனுமதி இன்றி சிரியாவுக்கு எதிரான தாக்குதலில் பிரான்ஸ் பங்குபெறாது என்று அறிவித்துள்ளார் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டே.
சிரிய அரசு உள்நாட்டுப் போரில் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றது என்று தெரிவித்து அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் சிரியா மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு வருகின்றன. இந்நிலையில் ஐ.நாவின் அனுமதி இன்றி தாக்குதல் நடத்தக்கூடாது என ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் வலியுறுத்தியிருந்தார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டே,
"ஐ.நாவின் அறிக்கை மற்றும் அமெரிக்க செனட்டரின் ஒப்புதல் பெறாமல், சிரியா மீதான தாக்குதலில் பிரான்ஸ் பங்கேற்காது. அதுவரை பொறுமையாக இருப்போம்" என்று தெரிவித்துள்ளார்.
ஜி20 மாநாட்டிற்கு முன்பாக கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து சிரிய அரசப்படைகள் மூன்று முறை இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருக்கின்றன என்று பிரான்ஸ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## 'டிரோன்' தாக்குதலில் 6 தீவிரவாதிகள் சாவு

காபூல், செப்.9
அமெரிக்க ஆளில்லா விமானம் (டிரோன்) ஆப்கன் எல்லையில் நடத்திய தாக்குதலில் 6 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.
ஆப்கன் எல்லைப் பகுதியான வசிரிஸ்தான் பகுதியிலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலைத் தொடர்ந்து சி.ஐ.ஏ.வின் உளவு விமானங்கள் அப்பகுதியில் தாழ்வாகப் பறந்து நிலைமைகளை அவதானித்தன என்று உள்ளூர் பொதுமக்கள் தெரிவித்தனர்.
இதுவரை அமெரிக்கா குறித்த பகுதியில் 400 முறை ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது. அதில் போராளிகள் அல்லாத பலரும் கொல்லப்படுகின்றனர் என்றும் மனித உரிமை அமைப்புகள் கூறு கின்றன. (ற)

## விருந்தால் வந்தது வினை: 14 மாதங்கள் தொடர் விக்கல்

லண்டன், செப்.9
ஒரு நாள் அல்ல.. இரு நாள் அல்ல.. 14 மாதமாக விடாத விக்கலால் அவஸ்தைப் பட்டு வருகின்றார் ஒருவர்.
அயர்லாந்தைச் சேர்ந்தவர் 35 வயதான டேனியல் கிளவின். அவர் 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் விருந்தொன்றில் கலந்து கொண்டார். விருந்து ஆட்டம், பாட்டம், மது என்று நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது.
விருந்தில் எல்லாம் இலவசம். ஆசை யாரைத் தான் விட்டது. டேனியலும் கிடைத்த மது வகைகளை ஒன்றுடன் ஒன்று கலந்து புதுவகைப் பானங்களைத் தயாரித்து போதையேற்றிக் கொண் டிருந் தார்.
நகைச்சுவை நடிகர் வடிவேலு பாணியில் போதையில் செவ்வாய் கிரகம் சென்று கொண்டிருந்த டேனியலை கிழே இறக்கியது ஒரு விக்கல்.
விக்கலை நிறுத்துவதற்கு இன்னுமொரு சுற்று மதுவை குடித்து விட்டு சற்று மதுவுக்கு இடைவேளை விட்டு களைப் பாறினார் டேனியல். ஆனால் விக்கல் நின்ற பாடில்லை. விடாது விக்கல் வரத் தொடங்கியது. மூச்சு விடவும் சிரமமானது டேனி யலுக்கு. அப்போது தான் விபரீதத்தை உணர்ந்தார் அவர்.
மெல்ல விருந்தில் இருந்து கழன்ற அவர் விழுந்தடித்துக் கொண்டு தமது தனது குடும்ப வைத்தியரிடம் ஓடினார். அவரும் வழமைபோல இரு மாத்திரைகளைக் கொடுத்து 'சாப்பாட்டுக்கு முன்னர் இது.. சாப்பாட்டுக்குப் பின்னர் இது" என்று கூறி டேனியலை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.
அவரின் வார்த்தைகளை நம்பி நிம்மதியாக வீடு திரும்பிய டேனியல் அந்த மாத்திரைகளை உட்கொண்டு விட்டு, விக்கல் நிற்கும் என்று காத்திருந்தார். இன்றுவரை காத்திருக்கிறார் அதுவோ



நிற்பதாக இல்லை.
செக்கனுக்கு 7 முறை விக்கல்கள். சாப்பிட முடியாது. தூங்க முடியாது படாதபாடு படுகின்றார் மனிதர். பெரும் பெரும் வைத்தியர்களை எல்லாம் பார்த்துவிட்டார். எத்தனை வைத்திய பரிசோதனைகள் இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் செய்த அவர்கள் எல்லாம் 'இது சின்க்ரோனஸ் டயாப்ராக்மாடிக் ஃப்ளட்டர்' என்று வாயில் நுழையாத நோய் பெயரை சொல்லி அனுப்பி விட்டனரே தவிர விக்கல் நிற்பதற்கு எதுவும் செய்யவில்லை.
"வயிற்றையும் மார்பையும் பிரிக்கும் தசையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மருத்துவர்களின் கண்காணிப்பில் தான் இருக்கின்றார். நாங்களும் அனைத்து முயற்சிகளையும் செய்து பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றோம். இதுவரை டேனியலுக்கு 53 லட்சத்துக்கு மேற்பட்ட முறை விக்கல் வந்திருக்கும்" என்று தெரிவிக்கின்றனர் அவரைக் கவனிக்கும் மருத்துவக்குழுவினர்.
டேனியலுக்கு தற்போதுள்ள பிரச்சினை என்னவென்றால், விக்கல் சத்தத்தால் மனைவியின் தூக்கம் பாதிக்கப்படுகின்றது என்று தனியான அறையில் இருப்பது தானாம். (ற)

ஓம் சித்திவிநாயகர் துணை



# வடலியடைப்பு - புதறானை திருவருள்மிகு
# ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
## விஜய வருஷ திருதிய தின லக்ஷார்ச்சனை
## மஹா கணபதி ஹோமம்,
## நவோத்திர (109) கலச மஹா சங்காபிஷேக
## சிறப்பு மலர் - 09.09.2013

### நிகழ்ச்சி நிரல்

**காலம்: 07.09.2013 முதல் 09.09.2013 வரை**

**07.09.2013** காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாடு, பஞ்சமுக விநாயகருக்கு விஷேட அபிஷேக பூஜைகளுடன் பெருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து அர்ச்சனையும், ஹோமம், தர்ப்பணமும் நடைபெற்றன.

இன்று **09.09.2013** திங்கட்கிழமை காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பித்து மூலமூர்த்திக்கு நவோத்திர கலச மகா சங்காபிஷேகமும், விஷேட பூசைகளும் இடம்பெற்று லக்ஷார்ச்சனைப் பூர்த்தியும் மகா கணபதி ஹோமம், வஸுதாரா ஹோமம் இடம்பெற்று விஷேட தீபாராதனைகளுடன் இனிதே நிறைவுறும்.

மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் பஞ்சமுக விநாயகர் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையிலே வீதியுலாவும் இடம்பெறும். அச்சமயம் விசேட நாதஸ்வர, தவில் கச்சேரியும் நிகழவுள்ளது.

### மகா கணபதி ஹோம பலாபலன்கள் எல்லா அடியவர்களுக்கும் கிடைக்கட்டும்



சைவ சமயத்தவராகிய நாம் எமது ஆலய கிரியை வழி பாட் டிலே அக்னி வழிபாட்டுக்கே முக்கியத்துவம் கொடுக் கின்றோம். இறைவனை,நாம் அக்னி வடிவமாக ஹோம குண்டத்தி ஆவாஹிறித்து அவருக்குப் பல் வகையான உபசாரங்கள் தீபாராதனை களை ஆராதித்து வழிபடுகின்றோம்.

அந்த வகையில் வடலி யடைப்பு- புதறானைப்பதி யிலே ஊரின் நடுநாயமாக விக்கினங்களைத் தீர்ப்பவனாக வீற்றிருக்கும் ஸ்ரீசித்தி விநாயகருக்கு வருடாந்தம் ஆவணி மாத சதுர்த்தியிலே இடம்பெற்றுவரும் லக்ஷசார்ச்சனையும், மகா கணபதி ஹோமமும் இம் முறையும் விமர்சையாக இடம்பெற்றுவருகின்றது.பல்வேறு சமித்துக்கள், பழ வகைகள், பலகாரவகைகள், பால், தயிர், இளநீர், பசுநெய், மூலிகை வகைகள் முதலிய வற்றால் விநாயகருக்கு சமர்ப்பணம் செய்யும் இக் கைங்கரியத்தை உபயம் ஏற்று செய்து வரும்அன்பர் சு.தெய்வேந்திரம் குடும்பத்தின ருக்கும், தர்மபரிபாலன சபையினருக்கும், மீளா அடியவர்களும் எல்லாம்வல்ல சித்தி விநாயகரின் திருவரு ளும், சிவப்பிரம்மஸ்ரீ சிவா. நித்தியானந்த சிவாச்சாரியாரின் குருவருளும் கிடைக்க நல்லாசிகளும் வாழ்த்துக்களையும் தெரிவித்துப் பிரார்த்திக்கின்றேன்.

(பிரதமகுரு) கிரியாகலாபமணி, கிரியாலங்காரவாருதி
*சிவப்பிரம்ம ஸ்ரீ சிவா நித்தியானந்த சிவ தாண்டவ
சிவாச்சாரியார்* வடலியடைப்பு, சங்கானை.

### திருவருளோடு குருவருளும் கிடைக்கட்டும்



வடலியடைப்பு புதறானை ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தான விஜய வருட திருதியதின லக்ஷார்ச்சனையும் லக்ஷ ஹோமமும் மஹா கணபதி ஹோமமும் நடைபெறும் பொழுது வெளிவருகின்ற சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவ தையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்.

மேற்படி தேவஸ்தானத்தின் முன்னாள் பிரதம குருவாக திகழ்ந்த சங்கானை சிவஸ்ரீ சிவ நித்தியானந்தக் குருக்கள் அவர்களின் வழிநடத்தலின் கீழ் கடந்த பல வருடங்களாக இந் நிகழ்வு நடைபெறுவது யாவரும் அறிந்ததே.

பரோபகரமான பலாபலன்களை வேண்டி இந் நிகழ்வை முன்னெடுத்து வரும் உபயகாரர்கள், ஆலய அறங்கா வலர்கள் மற்றும் ஊரவர்கள் எல்லோருக்கும் ஸ்ரீசித்தி விநாயகப் பெருமானின் திருவருளும் குரு முதல்வர் சிவஸ்ரீ. சிவ நித்தியானந்தக் குருக்கள் அவர்களின் குருவரு ளும் என்றென்றும் நிறையப்பெற வேண்டி எல்லாம் வல்ல ஐயன் ஐயப்பன் மலர் தாள் வழுத்தி எமது பரிபூரண ஆசிகளை வழங்கு வதில் அக மகிழ்வடைகிறேன்.

*"சர்வே ஜனஹா ஸு ஹினோ பவந்து"*

**ஐயப்பதாசக்** குருக்கள்

### பஞ்சமுக விநாயகர் திருவருள் எம்மக்கள் அனைவருக்கும் கிடைக்கட்டும்



சீரும் திருவும் பொலியும் யாழ்ப்பாணத் திருநகரில் வளம் மிகு ஊராம் வடலி யடைப்புப் பதியில் வேண்டுவார் வேண்டுவதை தந்தருளும் குலதெய் வமாம் புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் சந்நிதியில் வருடந்தோறும் ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு வெகு கோலாகலமாக இடம்பெற்று வரும் இலட் சார்ச்சனை, மகா கணபதி ஹோமம் இந்த ஆண்டும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. விநாயகரை வேண்டி எம்பெருமானது பற்பல நாமாவளிகளால் ஆராதித்து அவருக்கு பிரியமான அறுகம்புல், மோதகம், தேங்காய், பழவகை, கரும்பு இன்னும் பல மூலிகை வகைகளால் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் இப்பெருவிழாவை காண நாம் கொடுத்து வைத்தவர்கள். எம் ஆலயத்தில் வீற்றிருக்கும் பஞ்சமுக விநாயகர் தோற்றம் மிகவும் அற்புதமானது. மிகவும் கம்பீரமுடையவர். கணபதி ஹோமத்தை நடத்தி வைக்கும். அந்தணப் பெரியோர்க்கும் உபயகாரர் சு. தெய்வேந்திரம் அவர்கட்கும் எம்மூர் மக்கட்கும் ஸ்ரீசித்தி விநாயகர் நல்லருள் பாலிக்கவும். நாட்டு மக்கள் சுபீட்சமாக வாழவும் இறையருள் வேண்டி அவன் திருப்பாதம் இறைஞ்சுகின்றேன்.

*"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"*

**இறைபணியில்**

**நவரட்ணராசா, பரிபாலன சபை (தலைவர்)**

அனுசரணையாளர்கள்


**நிதி ஸ்ரோர்ஸ்**
**NITHI STORES**
மிதிவண்டி உதிரிப்பாகங்கள், இரும்புப்பொருள் கள், பெற்றோமக்ஸ் உதிரிப்பாகங்கள், பிளாஸ்ரிக் கதிரைகள், மின்சார உபகரணங்கள், P.V.C குழாய்கள் மற்றும் பொருத்துக்கள் விற்னையாளர்.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**TASTY LAND**
**Restaurant**
Parameshwara junction,
Jaffna.

**கலைமகள் விலாஸ்**
சைவ உணவகம்
பொன்னாலை வீதி,
சங்கானை.

**கணேஸ் ஸ்ரோர்ஸ்**
பலசரக்குப்பொருள்களை
மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**நவகுமரன்ஸ் மருந்துக்கடை**
கோயில் அபிஷேகப்
பொருள்கள், மருந்துச்
சரக்குகள் விற்பனையாளர்
யாழ் வீதி,மானிப்பாய்.

**ஸ்ரீ அம்பாள் குறோசரிஸ்**
**SRI AMBAL GROCERIES**
எங்களிடம் ஆலய அபிஷேகப்
பொருள்களை தரமானதாக
பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**ஸ்ரீமுருகன் புத்தகசாலை**
&
**நியூ அக்ரோ சென்ரர்**
சித்தன்கேணி வீதி,
- பண்டத்தரிப்பு.

**சுப்ரா உணவகம்**
மெயின் வீதி,
சங்கானை.

# அச்சுவேலித் தொழிற்பேட்டையில் முதற்கட்டமாக 22 தொழிற்சாலைகள்

யாழ்ப்பாணம், செப்.9

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் இந்திய அரசின் நிதியுதவியுடன் 22 தொழிற்சாலைகள் முதல் கட்டமாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்காக 25 இற்கும் மேற்பட்ட தொழில் அதிபர்கள் இடம் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளனர்.

கடந்த போர்க் காலச் சூழலில் முற்றாகச் சேதமடைந்த கைத்தொழில் பேட்டையை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு இந்திய அரசு முன்வந்துள்ள நிலையில் முதற் கட்டமாக 22 தொழிற்சாலைகளை நிர்மாணிக்க தொழில் அதிபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


கைத்தொழில் பேட்டை மத்திய நிலையத்தால் தொழிற்சாலைகளுக்கான நீர்விநியோகம், மின்சார விநியோகம், உட்கட்டுமானவீதிஅமைப்பு, பாதுகாப்பு, போக்குவரத்து சுகாதார வசதிகள் சகல தொழிற்சாலைகளுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ள நிலையில் அந்தந்த தொழிற்சாலைகளின் தொழில் அதிபர்கள் நிபந்தனைகளுக்கு ஏற்ப தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்தி மற்றும் பொருள் தயாரிப்புகளில் ஈடுபட முடியும்.

இதற்கான முன் ஆயத்தமாக இந்திய அரசின் நிதியுதவியுடனும் கைத்தொழிற் பேட்டை மத்திய நிர்வாக நிலையமும் இணைந்து உட்கட்டுமானப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதே வேளை கைத்தொழில் பேட்டையில் தொழிற்சாலைகள் மீளச் செயற்படும் போது 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் மதிப் பீடு செய்யப்பட்டுள்ளது. (வ-14-11)

# வன்னியிலிருந்து வாழைக்குலைகள்

ஏராளமாக குடாநாட்டுக்கு



யாழ்ப்பாணம், செப்.9

யாழ்.குடாநாட்டில் வாழைப் பழத்துக்கு தற்போது ஏற்பட்டுள்ள கிராக்கியை அடுத்து வன்னியில் இருந்து வியாபாரிகளால் பெருமளவு வாழைக் குலைகள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

தற்போது முக்கிய ஆலயங்களின் வருடாந்த திருவிழாக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வந்த நிலையில்தான் வாழைப் பழத்துக்கு பற்றாக்குறை நிலவியதோடு அவற்றின் விலையும் சடுதியாக அதிகரித்தது.

குறிப்பாக நல்லூர்க் கந்தன் ,செல்வச்சந்நிதி ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களின் திருவிழாக் காலங்களில் வாழைப்பழத்துக்கு பெரும் பற்றாக்குறை நிலவியதோடு பக்தர்களும் அவற்றைப் பெறுவதில் சிரமப்பட்டனர்.

தொடர்ந்து துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் போன்ற சிறப்பு மிக்க ஆலயங்களில் திருவிழாக்கள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

எனவே வாழைப்பழத்துக்கு இந்தமாதம் வரைக்கும் பற்றாக்குறை ஏற்படலாம். அவற்றின் விலையும் அதிகரித்தே காணப்படும் என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர். (வ-17)

# போரால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர் விவரம் இதுவரை திரட்டப்படவில்லை

## தமிழ்க் கல்வியாளர் ஒன்றியம் கவலை

அச்சுவேலி, செப்.9

"போர் முடிவடைந்து நான்கு வருடம் நிறைவடைந்த போதிலும் காணாமற்போன மற்றும் இறந்த ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்களின் விவரங்கள் திணைக்கள ரீதியில் திரட்டப்படவும் இல்லை. பாதிக்கப்பட்டோரின் சட்ட பூர்வ உரிமையாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நட்டஈடு மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை" என தமிழ்க் கல்வியாளர் ஒன்றியம் கவலை தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டோருக்கு கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் அது தொடர்பான புதிய சுற்றறிக்கையை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட வேண்டும் என ஜனாதிபதி மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு திறைசேரியில் உயர் அதிகாரியிடம் மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் அதிகாரிகளை நேரில் சந்தித்து நிலைமையை விளக்கி பேச்சு நடத்தியுள்ளது.

**2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த வகையில் பாதிப்புக்கு உள்ளாகியவர்களுக்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2006/4 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிவாரணங்கள் சில வழங்கப்பட்டிருந்தன.**

குறித்த விடயம் தொடர்பாக தமிழ்க் கல்வியாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் நிர்வாகச் செயலாளருமான எஸ்.சரவணபவனந்தன் தகவல்தெரிவிக்கை யில்:

போர் முடிவடைந்து நான்கு வருடம் நிறைவடைந்த நிலையிலும் போரால் இறந்த மற்றும் காணாமற்போன, வேலை இழந்தவர்களுக்கு தகுந்த முறையில் நட்டஈடோ, அவர்களது சட்ட பூர்வ உரித்தாளர்களுக்கு ஓய்வூதியமோ மற்றும்வேலை இழந்தவர்கள்மீண்டும் வேலையில் இணைந்து கொள்வதற்கான வசதியோ செய்யப்படவில்லை.

போரால் இறந்த மற்றும் பாதிப்புகளுக்கு உள்ளாகியவர்களின் விவரங்கள் திணைக்கள ரீதியில் இதுவரை திரட்டப் படவில்லை. இது மட்டுமல்ல திரட்டுவதற்கு பூர்வாங்க ஏற்பாடுகள் தானும் மேற்கொள்ளப்படவில்லை. இவை கவலை அளிக்கின்றது.

2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த வகையில் பாதிப்புக்கு உள்ளாகியவர்களுக்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல் கள் அமைச்சின் 2006/4 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிவாரணங்கள் சில வழங்கப்பட்டிருந்தன. குறித்த சுற்றறிக்கை சில ஆண்டுகளில் காலாவதியாகிவிட்டது.

இது தொடர்பாக அண்மைக் கால நிலைப்பாடு மற்றும் களநிலைக்கு அமைய புதிய சுற்றறிக்கையை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டு அதன் பிரகாரம் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய விவரம் மற்றும் வசதிகள் செய்யப்பட வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக மனுவை அனுப்பி வைத்திருப்பதுடன் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் திறைசேரிச் செயலாளர் மற்றும் அதிகாரிகளை நேரில் சந்தித்து நிலைமைகளை விளக்கி பேச்சு நடத்தியுள்ளோம். மேற்படி விடயம் நியாயமானது என கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் இதுவரை காரியம் கைகூடவில்லை எனத் தெரிவித்தார். (வ-11)

# பிரதான வீதிகளின் அகலிப்பு பணிகள்

## ஒக்ரோபருக்குள் நிறைவுபெறும்

யாழ்ப்பாணம், செப்.9

யாழ்.குடாநாட்டில் பிரதான வீதிகளின் அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் யாவும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் நிறைவடைந்து விடும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் எஸ்.சுதாகர் தெரிவித்தார்.

குறிப்பாக பருத்தித்துறை வீதி, கே.கே.எஸ்.வீதி, பலாலி வீதி ஆகிய வீதிகளின் புனரமைப்புப் பணிகள் யாவும் நிறைவுறும் தறுவாயில் உள்ளன.

பருத்தித்துறை வீதி தற்போது கல்வியங்காட்டு சந்தியில் இருந்து முத்திரைச் சந்தி வரையான பகுதி துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே புனரமைக்கப்பட்ட வீதிகளுக்கு தற்போது வீதிக் குறியீடுகள் அமைக்கப்படு கின்றன.

அதனை விட முக்கிய சந்திகளில் விபத்துக்களை தவிர்ப்பதற்கு விசேடமான சுற்று வட்டங்களும் நிர்மாணிக்கப்படுகின்றன. (வ-17)

# அரச திணைக்களங்களில் தேர்தல் பரப்புரைக்கான அனுமதி இறுக்கம்



வலி.வடக்கு, செப். 9

யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களின் தலைவர்கள் தமது திணைக்களங்களின் உள்ளே அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை அமைப்புக்களின் வேட்பாளர்களை கடந்த காலங்களைப் போல் அனுமதி வழங்கும் நடைமுறைகள் இலகுபடுத்தப்படாமல் கடுமையாக இருந்தமையால் திணைக்களங்களுக்கு பரப்புரைக்குச் சென்றவர்கள் பலர் ஏமாற்றத்துடன் திரும் பும் நிலை கடந்த வாரம் இடம் பெற்றது.

நாளை திங்கட்கிழமை அரச ஊழியர்களுக்கான தபால் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ள நிலையில் நேற்று முன்தினம் அரச ஊழியர்களுக்கான இறுதி நிமிட தேர்தல் பரப்புரை மேற்கொள்வதற்கு பல இடங்களிலும் வேட்பாளர்கள் முயன்றபோதிலும் அதிகளவில் சாத்தியப்படாத நிலைமையே காணப்பட்டது.

இதன் காரணத்தால் அரச ஊழியர்கள் அலுவலகங்களுக்கு கடமைக்கு சமுகமளிக்கும் நேரத்திலும் மற்றும் வீட்டுக்கு திரும்பும் நேரத்திலும் தமது தேர்தல் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (வ-86)

# காருக்கு தீ வைப்பு; இதுவரை எவரும் கைதாகவில்லை

வலி.வடக்கு, செப். 9


வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த கார் ஒன்று தீயிடப்பட்ட சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இதுவரை குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லையென யாழ்ப்பாணம் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம் . எம். ஜெப்ரி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரம் பருத்தித்துறை வியாபாரி மூலை அல்வாய் வடக்கில் உள்ள கார் ஒன்று வீட்டுக்கு வெளியே நிறுத்தப் பட்டிருந்த நிலையில் இனம் தெரியாதவர்களால் தீயிடப் பட்டு எரிந்து சாம்பலாகியது.

சுமார் 23 லட்சம் ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ள நிலையில் குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் தீவிரமாக விசாரணையை மேற்கொண்டு வருவதாகவும் இதுவரை சந்தேக நபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார். (வ-86)



# புனரமைக்கப்படாத நிலையில் நுணாவில் - பருத்தித்துறை வீதி

தென்மராட்சி, செப்.9

தென்மராட்சிப் பிரதேசத்தில் பிரதான வீதிகளில் ஒன்றாகக் காணப்படும் நுணாவில் - பருத்தித்துறை வீதி நீண்ட காலமாக திருத்தப்படாமல் பல இடங்களில் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் குறித்த வீதியைப் பயன்படுத்துவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

794, 765 ஆகிய மார்க்க பஸ் சேவைகளுடன் பல்வேறு வாகனங்கள் குறித்த வீதியூடாகவே பயணிக்கின்றன.

கனகன்புளியடிச் சந்தியிலிருந்து பிரிந்து செல்லும் ஐந்து வீதிகளில் ஒன்றான நுணாவில் வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

மட்டுவில், கல்வயல், சரசாலை, பருத்தித்துறை, வேம்பிராய், வரணி, மீசாலை வடக்கு, கொடிகாமம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது போக்குவரத்துத் தேவைக்கு குறித்த வீதியையே பயன்படுத்துகின்றனர்.

ஏ-9 வீதியிலிருந்து நுணாவில் சந்தி ஊடாகப் பிரிந்து செல்லும் வீதி கனகன்புளியடி சந்தி ஊடாக மீசாலை, புத்தூர் சந்தியில் ஏ-9 வீதியுடன் இணைவதால் கொழும்பிலிருந்து வரும் வாகனங்கள் இந்த மார்க்கத்தில் தமது பயணங்களை மேற்கொள்கின்றன.

கனகன்புளியடிச் சந்தியிலிருந்து பிரிந்து செல்லும் ஐந்து வீதிகளில் நுணாவில் சந்திக்குச் செல்லும் வீதி தவிர்ந்த ஏனைய வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

3 கிலோ மீற்றர் தூரமான குறித்த வீதியில் இருமருங்குகளும் உடைந்து சேதமடைந்து காணப்படுவதுடன் பல இடங்களில் குன்றும் குழியுமாக காணப்படுவதால் வாகனங்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதி காப்பெற் வீதியாக மாற்றப்படின் ஏ-9 வீதியின் பிரதான மாற்றுப் பாதையாக அமையுமென தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றில் எல்லை வீதியாகக் காணப்படுகின்ற போதிலும் இது வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# பறிமுதல் செய்த ஹன்ரர் வாகனத்தை நீதிமன்றில் பாரப்படுத்தாத பொலிஸார்

யாழ்ப்பாணம், செப்.9

வரணி வடக்கு பிரதேசத்தில் சட்ட விரோதமாக பனை மரத்தினை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட ஹன்ரர் வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட போதும் இதுவரை நீதிமன்றில் பாரப்படுத்தப்படாதுள்ளது.

**ஒருவார காலம் கழிந்தும் பொலிஸாரால் ஹன்ரர் வாகனம் நீதிமன்றில் பாரப்படுத்தப்படவில்லை.**

கடந்த 26 ஆம் திகதி வரணி வடக்கு பகுதியில் தனியார் காணியொன்றில் சட்ட விரோதமாக பனை மரத்தைத் தறித்த ஒரு குழுவினர் அவற்றை ஹன்ரர் வாகனத்தில் ஏற்றிச் செல்ல முற்பட்டனர். இதனையடுத்து பொது மக்களால் வழங்கப்பட்ட இரகசிய தகவல்களின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் பனை மரத்தை ஏற்றிச் செல்ல முற்பட்ட குழுவினர் தப்பிச் சென்ற நிலையில் அவ்விடத்தில் இருந்து ஹன்ரர் வாகனத்தை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

எனினும் ஒருவார காலம் கழிந்தும் பொலிஸாரால் ஹன்ரர் வாகனம் நீதிமன்றில் பாரப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் காணி உரிமையாளர் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-14-122)

உதயன்
09/09/2013

## கொக்கட்டிச்சோலை ஈஸ்வரனுக்கு கொடியேற்றம்



மட்டக்களப்பு.செப்.9
மட்டக்களப்பு, கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ச)

## மட்டு. ஆலயங்களில் திருடிய நால்வர் அதிகாலை சிக்கினர்

### அவர்களில் இருவர் கிளிநொச்சி வாசிகள்; ஒருவர் யாழ். வாசி




மட்டக்களப்பு,செப்.9
மட்டக்களப்பு,களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள குருக்கள்மடம், செல்லக்கதிர்காமர் ஆலயத்திலும், மாங்காடு பிள்ளையார் ஆலயத்திலும் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் 4 பேரை நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை களுவாஞ்சிக்குடி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள குருக்கள்மடம், செல்லக்கதிர்காமர் ஆலயமும் மாங்காடு பிள்ளையார் ஆலயமும் உடைக்கப்பட்டு ஆலயங்களிலிருந்த தங்கநகைகள் திருடப்பட்டிருந்தன.
இந்தச் சந்தேகநபர்களிடமிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் தங்கநகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.
கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் கிளிநொச்சியையும், ஒருவர் யாழ்ப்பாணத்தையும், மற்றொருவர் வவுனியாவையும் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர். (ச)


> சந்தேகநபர்களிடமிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் தங்க நகைகள் கைப் பற்றப்பட்டுள்ளன.

## அட்டாளைச்சேனையில் காற்றுடன் மழை

### முறிந்து வீழ்ந்தன மின்கம்பங்கள்




அம்பாறை,செப்.9
அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மழையுடன் கூடிய சுழல் காற்றினால் ஏழு மின்கம்பங்கள் முறிந்து விழுந்துள்ளதுடன் இருவீடுகளின் கூரைகளும் காற்றினால் அள்ளிச்செல்லப் பட்டுள்ளன.
திடீரென ஏற்பட்ட இந்த இடரினால் அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டுப் பிரதேசத்தின் பிரதான வீதியில் அமைந்துள்ள 11,000 மின்வலு சக்தி கொண்ட கம்பிகளை இணைத்துச் செல்லும் ஏழு மின்கம்பங்கள் முறிந்து விழுந்துள்ளன.
அதனையடுத்து இலங்கை மின்சார சபையின் ஊழியர்களினால் திருத்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. (ச)



சம்மாந்துறை, அலவக்கரைப் பிரதேசத்துக்குள் சனிக்கிழமை நுழைந்த காட்டு யானைகள் அந்தப் பிரதேசத்திலுள்ள வீடுகளை சேதப்படுத்தியுள்ளன.

## கிழக்குப் பல்கலை வெளிவாரி பட்டதாரிகளுக்குச் சான்றிதழ்

### 28 இல் வழங்கல்



மட்டப்களப்பு,செப்.9
கிழக்கு பலக்லைக்கழகத்தின் வெளிவாரி பட்டதாரிகளுக்கான பட்டச் சான்றிதழ்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி வழங்கப்படவுள்ளன என்று கிழக்கு பலக்லைக்கழகத்தின் பதிவாளர் எம்.மகேசன் தெரிவித்தார்.
87 வெளிவாரி பட்டதாரிகளுக்கான பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.
இந்த சான்றிதழ்கள் கலைப் பிரிவைச் சேர்ந்த 34 பட்டதாரிகளுக்கும், வியாபார விரிவாக்கம் பிரிவைச் சேர்ந்த 19 பட்டதாரிகளுக்கும், வணிகப் பிரிவைச் சேர்ந்த 2 பட்டதாரிகளுக்கும், கிழக்கு பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகத்திலுள்ள விஞ்ஞான முகாமைத்துவ பட்டதாரிகள் 22 பேருக்கும், அதே வளாகத்திலுள்ள கலைப் பிரிவைச் சேர்ந்த 10 பட்டதாரிகளுக்கும் வழங்கப்படவுள்ளன என்று கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதிவாளர் கூறினார். (ச)

## விபத்தில் இருவர் படுகாயம்

மட்டக்களப்பு.செப்.9
வெருகல் பொலிஸ் பிரிவிலுள்ள இலங்கைத்துறை முகத்துவாரப் பகுதியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.
படுகாயமடைந்தவர்கள் உடனடியாக வெருகல் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று வெருகல் பிரதேச வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.
இந்த விபத்து தனியார் பஸ் மோட்டார் சைக்கிளுடன் மோதியே இடம்பெற்றுள்ளது. இந்தச்சம்பவம் தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## சாராயம் விற்ற நபர் மாட்டினார்



அம்பாறை.செப்.9
அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்ததாகக் கூறப்படும் ஒருவரை மருதமுனைக் கடற்கரையில் சனிக்கிழமை மாலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
இது தொடர்பில் கிடைத்த தகவலைத் தொடர்ந்து மருதமுனைக் கடற்கரையில் திடீர் சோதனையை மேற்கொண்டதாக கல்முனைப் பொலிஸார் கூறினர்.
இதன்போது 10 போத்தல்களில் அடைக்கப்பட்ட சாராயத்தை விற்பனைக்கு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ச)

## பொலிஸ் சார்ஜன்ட் மீது லஞ்சக் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,செப்.9
லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மட்டக்களப்பு, காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.
காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றைக் கையாள்வதற்காக நபர் ஒருவரிடமிருந்து இரண்டாயிரம் ரூபாவை லஞ்சமாக பெற்ற வேளையே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இந்த பொலிஸ் சார்ஜன்ற் முறைப்பாட்டாளர்களிடமிருந்து லஞ்சம் பெறுவதாக ஏற்கெனவே லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு அதிகாரிகளுக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## போதைப்பொருள் ஒழிப்புக்கு விழிப்புணர்வு வேலைத்திட்டம்

மட்டக்களப்பு,செப்.9
இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றன.
இந்த வேலைத்திட்டம் கொழும்பில் உள்ள மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு தகவல் நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர், யுவதிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.
இந்தநிகழ்வில் போதைப்பொருள் பாவனையை குறைத்து சமூக மட்டத்தில் சிறந்த சமூகத்தினை ஏற்படுத்தும் வகையில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (ச)

> போதைப்பொருள் பாவனையை குறைக்கவே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

## உள்ளூராட்சி வாரத்தையொட்டி மட்டக்களப்பில் பல நிகழ்வுகள்

மட்டக்களப்பு,செப்.9
உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகர சபையால் இன்று திங்கட்கிழமை முதல் 15 ஆம் திகதி வரை நடமாடும் சேவை, வருமான மேம்பாட்டு தினம், மக்கள் பயன்பாட்டுத்தினம், மரம் நடுகை, கல்வி மற்றும் நூலக அபிவிருத்தி, விளையாட்டு மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.
நடமாடும் சேவையில் சோலைவரி செலுத்துதல், காணி ஆவணப் பெயர் மாற்றங்கள், நில அளவை வரைபடம், வியாபாரப் பதிவுகள், நாய்களுக்கான பதிவுகள், விசர் நாய்க்கடிகளுக்கான தடுப்புசி ஏற்றல் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். (ச)

## கிழக்குப் பல்கலைக்கழகத்தன் இரண்டாவது சர்வதேச மாநாடு



மட்டக்களப்பு.செப்.9
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது சர்வதேச மாநாடு எதிர்வரும் 12ஆம்,13ஆம் திகதிகளில் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது என்று துணைவேந்தர் கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்தார்.
2013 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மாநாடு, போருக்குப் பின்னரான மீட்சியில் அறிவியலும் தொழில்நுட்பமும் எனும் தலைப்பில் நடைபெறவுள்ளது.
இந்த மாநாட்டில் பங்காளதேஷின் டாக்கா பல்கலைக்கழக அரங்கியல்துறை பேராசிரியர் ஐசயத் ஜமில் அகமட் கலந்து கொள்வார்.
6 அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், 12 ஆம் திகதி மாலை கலாசார நிகழ்வுகள் மட்டக்களப்பு நகரில் நடைபெறவுள்ளன.
இந்த மாநாட்டு நிகழ்வுகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் சானிகா ஹிருபுருகம, உயர்கல்வி அமைச்சின் செயலர் கலாநிதி சுனில் ஜயந்த நவரெட்ண ஆகியோர் கலந்து கொள்வர்.
2006ஆம் ஆய்வு மாநாடு முதல் தடவையாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டதுடன், அது தேசிய அளவில் நடத்தப்பட்டிருந்தது.
இந்த முறை குறித்த மாநாடு சர்வதேச அளவில் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மணல் அகழ்ந்த அறுவர் கைது

திருகோணமலை.செப்.9
திருகோணமலை, ஹொரவப் பொத்தானை, நெளு ஓயாவில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே அவர்கள் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் விசேட அதிரடிப் படை தெரிவித்துள்ளது.
சந்தேகநபர்கள் மணல் அகழ்வுக்காகப் பயன்படுத்திய உபகரணங்களையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர்கள் ஹொரஸ் பொத்தானை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ச)

# இன்று காலை முதல் கடல் கொந்தளிக்கும்



கொழும்பு.செப்.9
புத்தளம்.காலி ஊடாக மாத்தறை வரையான கடற்கரைக்கு அப்பாலுள்ள ஆழ்கடல் மற்றும் ஆழமற்ற கடற் பிராந்தியங்கள் இன்று திங்கட்கிழமை காலை 6 மணியிலிருந்து கொந்தளிப்பாக இருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தக் கடற் பிரந்தியங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
இதேவேளை, நாட்டில் மேல்.தென்.சப்ரகமுவ.மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் மழையுடன் கூடிய வானிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது. (ச)

# இலங்கை—சீனாவுக்கு இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

## அடுத்த ஆண்டில் கைச்சாத்து

கொழும்பு.செப்.9
2014 ஆம் ஆண்டில் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.
இரு நாட்டுத் தலைவர்களினால் ஏற்கனவே சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்து இணக்கம் காணப்பட்டுள்ளது.
சீனா- இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை அடுத்த ஆண்டில் கைச்சாத்திடப்படும் என்று சீனாவுக்கான இலங்கைத் தூதர் ரஞ்சித் உயன்கொட தெரிவித்தார்.
இந்த உடன்படிக்கையின் பின்னர் வரிச் சலுகைகளுடன் சீனாவுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்று



அவர் கூறினார்.
இதன் மூலம் இலங்கை ஏற்றுமதியாளர்கள் நன்மை அடைவார்கள் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.
உலகின் மிகப் பெரிய சந்தையைக் கொண்டுள்ள சீனாவுடன் வர்த்தக உறவுகளைப் பேணுவது நாட்டுக்கு பல வழிகளில் நன்மை பயக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

> ” உடன்படிக்கையின் பின்னர் வரிச் சலுகைகளுடன் சீனாவுடன் வர்த்தக நடவடிக் கைகளில் ஈடுபட முடியும்.

# பொலிஸாருக்கு எதிரான குற்றச்சாட்டு விசாரணைக்கு

கொழும்பு.செப்.9
பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்யப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. பொலிஸார் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.
இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்ற சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி தெரிவித்தார்.



தனிப்பட்ட குரோதம் காரணமாகவா அல்லது குற்றச் செயல்களில் ஈடுபட்டதன் காரணமாகவா முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து விசாரணை செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.
குற்றச் செயல்களில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தேர்தல் பரப்புரை நடவடிக்கையில் உத்தியோகத்தர்கள்

## உடனடியாக நீக்கிவிடுமாறு தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவு

கொழும்பு.செப்.9
தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள மத்திய கலாசார நிதியத்தின் வாகனங்களையும், உத்தியோகத்தர்களையும் உடனடியாக அந்த நடவடிக்கையிலிருந்து நீக்கிக்கொள்ள வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்ததேசப்பிரிய உத்தரவிட்டார்.
ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் தேர்தல்கள் ஆணையாளரிடம் தெரிவித்த முறைப்பாட்டிற்கு அமையயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.



மத்திய கலாசார நிதியத்தின் வாகனங்களும் உத்தியோகத்தர்களும் யாப்பாஹுவ, தம்புள்ள ஆகிய பகுதிகளில் தேர்தல் பரப்புரைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளனர்.
தேர்தல்கள் ஆணையாளரின் உத்தரவு குறித்து மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் மற்றும் கலாசார மற்றும் கலை விவகார அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு தொலைபேசி மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
நிதியத்தின் வாகனங்களை தேர்தல் பரப்புரைக்கு பயன்படுத்திய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார். (ச)

பொதுநலவாய மாநாட்டையொட்டி

# மாணவர்களுக்கு பரிசுகளுடன் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம்

கொழும்பு.செப்.9
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் போட்டியில் வெற்றியீட்டுபவர்கள் வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, சித்திரம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை பொதுநலவாய மாநாடு மற்றும் அதனுடன் ஒத்ததாக இளைஞர் பேரவை, மக்கள் பேரவை, வர்த்தகப் பேரவை ஆகியன இடம்பெறவுள்ளன.
இவற்றுடன் தொடர்புபட்டதாகவே பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.



இதுதொடர்பிலான முழு விவரங்களும் உள்ளடக்கப்பட்ட சுற்றறிக்கை கல்வி அமைச்சினால் அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
அதனடிப்படையில் கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்தப்படும் என்று கல்வி அமைச்சர் கூறினார்.
மாணவர்களின் வயது அடிப்படையில் போட்டிகள் மூன்று கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்படும். கல்வி வலயத்துக்குட்பட்ட போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி நடத்தப்படும்.
மாகாண மட்டத்திலான போட்டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறும். அதில் வெற்றி பெறுபவர்கள் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்ற முடியும் என்று அவர் தெரிவித்தார்.(ச)

> “ போட்டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறும்.



சீரற்ற கால நிலையால் நீர்கொழும்பு, பலகத்துறை பிரதேச கடற்பகுதியில் ஏற்பட்ட கொந்தளிப்பால் எமில்டன் ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்து ஏத்துக்கால பிரதேசத்தின் ஆற்றுப் பகுதியை அண்மித்த வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

# திருட்டைத் தடுப்பதற்கு யானைகள் பதிவு

கொழும்பு.செப்.9
யானைத் திருட்டை தடுக்கும் முதல் கட்ட நடவடிக்கையாக யானைக்களை பதிவு செய்வதற்கு வன ஜீவராசிகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
அதற்காக 10 லட்சம் ரூபாவை செலுத்தி, இதுவரை பதிவு செய்யப்படாத யானைகளை பதிவு செய்வதற்கு ஒரு வருடம் பொது மன்னிப்பு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் காமினி விஜிதமுனி சொய்ஸா தெரிவித்தார்.
யானை - மனித முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும், காடுகளை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றை பார்வையிடும் மக்களுக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்று அவர் கூறினார்.



யானைக்குட்டிகள் திருடப்படுவதை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
யானைகளுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக 10 லட்சம் ரூபா அறவிடப்படவுள்ளது.
இதன் மூலம் அரசுக்கு வருமானம் கிடைக்கும். விமர்சனங்களை நாங்கள் பொருட்படுத்தப் போவதில்லை என்று அவர் தெரிவித்தார்.
அனுமதி பத்திரங்கள் இன்றி சட்டவிரோதமாக யானைகளை வளர்க்கும் நபர்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்து வருகின்றன. அதனைத் தடுக்கும் முகமாக குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# பரப்புரையில் மீண்டும் பஷீர்

கொழும்பு.செப்.9
கட்சித் தலைமையுடன் ஏற்பட்ட முரண்பாடுகள்காரணமாக தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை புறக்கணித்துவந்த முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் அமைச்சருமான பஷீர் சேகுதாவுத் தற்போது மு.காவின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் மேடையேற ஆரம்பித்துள்ளார்.
மத்திய மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு அக்குறனை, கசாவத்தையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளார்.
கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸிற்குள் கட்சியின் தலைமை மற்றும் கட்சியின் விமர்சனத்துக்குள்ளாகியிருந்த அமைச்சர் பஷீர் சேகுதாவூத், புத்தளம் மாவட்டத்துக் கான முஸ்லிம் காங்கிரஸின் பரப்புரைக்கு பொறுப்பாக கட்சியினால் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் புத்தளம் மாவட்ட பரப்புரைக் கூட்டங்களில் பங்குகொள்ளவில்லை.
இந்த நிலையில், முஸ்லிம் காங்கிரஸ் அவரை மாத்தளை மாவட்டத்துக்குப் பொறுப்பாக நியமித்துள்ள நிலையில் அவர் கண்டி மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் மேடையேறியுள்ளார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தீதும் நன்றும் பிறர் தர வாரா; வடக்குத் தேர்தலுக்கும் அது பொருந்தும்!

இன்னும் இரண்டு வாரங்களில் நடைபெற உள்ள மாகாணசபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்றும் நாளையும் இடம்பெற உள்ளது. தேர்தல் கடமைகளில் ஈடுபட உள்ளவர்களுக்காக இந்த விசேட ஏற்பாடு செய்யப்படுகிறது.

அரச ஊழியர்கள் அரசுக்கு விசுவாசமாகச் செயற்பட வேண்டும் என்பது விதிமுறை. ஆனால் அவர்கள் தமக்கு விருப்பமான வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் சுதந்திரம் தேர்தல் விழுமியங்களில் ஒன்றாகும்.

அதனை ஊன்றி வெளிப்படுத்தும் விதத்தில், வடக்கின் உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.அச்சுதன், தேர்தல் கடமைகளில் ஈடுபட உள்ள ஊழியர்களுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பது எவருக்குமே தெரிய வரமாட்டாது; யாரும் கண்டுபிடித்துவிட முடியாது. அதனால் எவ்வித, எவ்வகையான அச்சமும் இன்றி அரச ஊழியர் தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தலாம் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வாக்காளர்களுக்கு உள்ள பிரதான உரிமையை மற்றவர்கள் கபளீகரம் செய்வதற்கோ, அன்றி வெவ்வேறு வடிவங்களில் பயமுறுத்தும் யுக்திகளைப் பயன்படுத்தி மாசுற வைப்பதற்கோ அரச அலுவலர்களான வாக்காளர்களும் ஏனைய வாக்காளர்களும் இடம் கொடுக்கக்கூடாது.

வாக்காளர் ஒருவர் வாக்களிப்பதனை நவீன தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் கண்டறியும் வல்லமை தமக்கு உண்டு என்று மிரட்டல் பாணியில் அதிக வாக்குகள் திரட்டுவதற்காக சட்டம் ஒழுங்கை மீறும் தரப்புகள் குள்ள நரிக் கோலம் பூணக் கூடும். ஆனால் அது போன்ற ஜனநாயக விரோதக் கும்பல்களைப் புறந்தள்ள வேண்டிய பொறுப்பும் ஜனநாயகக் கடமையும் வாக்காளர்கள் எல்லோருக்கும் உண்டு. அதனை அவர்கள் மனதில் இருத்தி உறுதியுடன் செயற்பட வேண்டும்.

இலங்கையில் நடைபெற உள்ள மாகாண சபைகள் மூன்றுக்குமான குட்டித் தேர்தல் சுயாதீனமாகவும் நேர்மையானதாகவும் நடத்தப்பட வேண்டும் என்று கொழும்பின் (அரசின்) நெருங்கிய நட்பு நாடுகளில் ஒன்றான ஜப்பான்.- அதன் அரசு சார்பில் கொழும்பில் உள்ள தூதுவர்- தெரிவித்திருக்கிறார்.

அதே வகையில்-

வடமாகாண சபைத் தேர்தல் அழுத்தமோ அச்சுறுத்தலோ இன்றி நடத்தப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியமும் நேரகாலத்துடன் வலியுறுத்தி உள்ளது.

தேர்தல் சுதந்திரமானதாகவும், நேர்மையானதாகவும் நடத்தப்பட வேண்டும். அரச தரப்பைச் சேராத தரப்புகள் சுதந்திரமான முறையில் பிரசாரம் செய்யவும் அச்சம் இன்றிச் செயற்படத்தக்க சூழலை ஏற்படுத்தவும், உருவாக்கவும் வேண்டும் என்று ஒன்றியம் வலியுறுத்தி உள்ளது.

மறுபுறத்தில்-

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நீதியாகவும் நியாயமாகவும் நடத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தி உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

வாக்காளருக்கு அச்சுறுத்தலோ அழுத்தமோ இருக்கக் கூடாது. தேர்தல் சுதந்திரமாக நடத்தப்பட வேண்டும்; நடைபெற வேண்டும்.

அங்கு ஆளும்தரப்பு சார்பாக அரசியல் கட்சிகள் சுதந்திரமான முறையில் பிரசாரம் செய்யக் கூடிய சூழலை உருவாக்க வேண்டும் என்றும் ஒன்றியம் அழுத்திக் கூறியுள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அரச தரப்பின் செயற்பாடுகள், சட்டத்துக்கு உட்பட்டு செவ்வனே நடைபெறுமா என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு கருதுகிறது என்று கொள்ளவும் இடமுண்டு.

வடக்கு தேர்தலில் தாம் வென்றிட வேண்டும் என்ற இலக்குடன் ஆள்வோர் அரச இயந்திரத்தைப் பயன்படுத்தக் கூடும் என்ற சந்தேகத்தின் பேரிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு கூறுகிறதோ என்றும் கருதலாம் அல்லவா?

வடக்கின் கள நிலவரம் நீதியான தேர்தலுக்கு வகை செய்யுமா என்ற சந்தேகம் ஐரோப்பிய ஒன்றியத்தைப் போலவே அக்கறை உள்ள ஏனைய தரப்புகளிடமும் உண்டாக இடமுண்டு.

வெளியாரின் கருத்தும், மதிப்பீடும் தன்னை எதுவும் செய்துவிடாது என்ற வன்மத்துடன், தேர்தல் குறித்து எவருக்கும் பொறுப்புக் கூற வேண்டிய தேவை தனக்கு இல்லை என்று அரசு செயற்பட முனையக் கூடும்.

ஆனால், வடக்குத் தேர்தலைச் சுத்தமாகவும் சுதந்திரமாகவும் நடத்துவது அதன் தார்மிகப் பொறுப்பு என்பதனைப் புறந்தள்ள முடியாதே. தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில், ஏனோதானோ என்றும் சகல துறைகளிலும் நினைத்தவை எல்லாவற்றையும் செயலாக்கலாம் என்றும் கருதுவது உகந்ததா என்பதனை அலசி ஆராயக் கூடாதா?

தீதும் நன்றும் பிறர் தர வாரா என்ற கனியன் பூங்குன்றனாரின் தமிழ் முதுமொழி எப் போதும் பிழைத்ததே இல்லை.

# நவிப்பிள்ளைக்கு அரசின் பதில் எழுத்து மூலம் வழங்க ஏற்பாடு

## தயாரிக்கும் வேலையில் வெளியுறவு அமைச்சு

*சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து*

■ கோகுலன்

கேள்வி கோரப்படாமலே பெரும் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் சீன கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன; நவிப்பிள்ளையின் இலங்கை வருகையை முறையாகக் கையாளாமை குறித்து வெளியுறவு அமைச்சின் மீது கடும் கண்டனம், எதிர் விளைவுகளும் சாத்தியம்.

அமைச்சரவையின் கடந்த வியாழக்கிழமைக் கூட்டத்தின்போது வெளியுறவு அமைச்சு கடும் கண்டனத்துக்குள்ளானது. அந்த வார இறுதியில் சனிக்கிழமையன்று நவிப்பிள்ளை தமது பயணத்தை முடித்துக் கொண்டு புறப்படுவதற்கு முன்னர் ஊடகவியலாளர் கூட்டத்தில் உரை நிகழ்த்தியபோது அங்கு ஓர் அமைச்சர் அவை உறுப்பினரும் பிரசன்னமாய் இருப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்காமை குறித்து அமைச்சர் விமல் வீரவன்ச பிரச்சினை கிளப்பினார். அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் உண்மைகளை சரி செய்திருக்க முடியும். அதேசமயம் அரச தரப்பின் நிலைப்பாட்டை எடுத்து வைத்திருக்க முடியும் என்று அவர் வாதிட்டார். இந்தக் கருத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஏற்றுக் கொண்டார். வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மன்னிப்புக் கோரும் நிலையில் காணப்பட்டார். நவிப்பிள்ளையால் கிளப்பப்பட்ட எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடுத்த நாளே தாம் பதில் அளித்துவிட்டதாக அவர் கூறினார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவாற்றுவதற்காக கடந்த வாரம் பீரிஸ் சென்றிருந்தபோது லண்டனில் வைத்து தாம் வெளியிட்டிருந்த கருத்துக்களையே அவர் சுட்டிக்காட்டினார். அங்கு இலங்கை தூதரகத்தில் வைத்து ஊடகங்களுக்கு வழங்கிய கருத்துரையில் நவிப்பிள்ளை கிளப்பியிருந்த பிரச்சினைகளுக்கு அவர் பதிலளித்திருந்தார் என்று இலங்கைத் தூதரகம் தெரிவித்திருந்தது. ஆனால் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் பீரிஸ் கூறியிருப்பது போல் பெரிதாக ஒன்றும் வெளியாகியிருக்கவில்லை . பிள்ளையின் அறிக்கைக்கு வழங்கப்பட்டிருந்த அளவுக்கு இதற்கு பரப்புரை வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது பெரும் மாறுபாடாக காணப்பட்டது.

புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் கொழும்பில் வைத்து ஐ.நா.தூதரகத்தில் நவிப்பிள்ளை ஓர் ஆறுபக்க அறிக்கையை வெளியிட்டிருந்தார். அதன் பின்னர் கேள்விகளுக்கு விடையளித்தார். அவைகளில் முக்கியமான ஒன்று: இலங்கையானது எதேச்சாதிகாரத்தை நோக்கிய திசையில் அதிகரித்த வேகத்தில் நகர்ந்து கொண்டிருப்பதற்கான அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளனவென்று அவர் கூறியிருந்தமையாகும். வெளிப்படையான மீள் கட்டுமானங்கள் மட்டும் மீள் நல்லிணக்கத்தையும், கௌரவத்தையும் , நிலையான அமைதியையும் கொண்டு வந்துவிடமாட்டாது. உண்மை, நீதி போரின்போது மக்கள் அனுபவித்த துன்பங்களுக்கான பரிகாரம் காண்பதற்கு தெளிவானதும் இன்னும் பரிசுத்தமானதுமான அணுகுமுறை தேவையாகும். இந்த வகையில் எமது பணிமனையின் உதவிகளை நாம் வழங்குவோம் என்ற எனது முன்னைய நிலைப்பாட்டை நான் மீண்டும் வலியுறுத்தியுள்ளேன் என்று நவிப்பிள்ளை கூறியிருந்தார். தம்மைச் சந்தித்த பொதுமக்கள் அதிகாரிகளால் கண்காணிக்கப்படுவது குறித்தும் அவர் ஊடகவியலாளர்களிடம் எடுத்துக் கூறியிருந்தார்.

அமைச்சரவையில் வீரவன்ச கூறிய கருத்தை அனுசரித்து ஜனாதிபதியின் மனித உரிமைகளுக்கான சிறப்புத் தூதுவர் மஹிந்த சமரசிங்க கருத்து தெரிவிக்கையில், அரச சார்பில் பிள்ளையின் பயணத்துக்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்ட வெளியுறவு அமைச்சே அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டின்போதும் ஓர் அமைச்சர் பிரசன்னமாயிருப்பதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டியதும் அதன் பொறுப்பாகும் என்று கூறினார்.

இதுபோன்று முன்னொரு சமயம் ஐ.நா பிரமுகர் ஒருவர் வருகை தந்த போது தாம் கூறிய கருத்து அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் நடத்திய ஊடக கருத்தரங்கில் தாம் கலந்து கொண்டதாக சமரசிங்க நினைவுபடுத்தினார். இது வெளியுறவு அமைச்சின் செயலாளருக்கு தெரிந்திருக்கும் என்றும் குறிப்பிட்டார். அவ்வாறான நடைமுறை இருப்பதை அமைச்சர்கள் வெளியுறவு அமைச்சருக்கு சுட்டிக் காட்டியிருக்க வேண்டியது அவர்களின் பொறுப்பு என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஆனால் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் பங்கேற்றுச் செயற்படுவதை அந்த அமைச்சு எப்போதே கைவிட்டுவிட்டது. பல்வேறு சமயங்களிலும் அரசே அவசர முடிவுகளை எடுக்கும்படியாக அது கைவிட்டுவிட்டுள்ளது.

நவிப்பிள்ளையுடனான ஒரு சந்திப்பின் போது ஐ.நா.வை சிறுபான்மையோர் பிரச்சினையில் தலையிடும்படியாக ஓர் அமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார் என்பதை அமைச்சர் சம்பிக்க ரணவக்க எடுத்துக் கூறினார். ஆனால் அமைச்சரின் பெயரை அவர் வெளியிடவில்லை. அம்மாதிரிப் பிரச்சினைகளை அவர்கள் ஏன் அமைச்சரவைக் கூட்டங்களில் கிளப்புகிறார்கள் இல்லையென்று ராஜபக்ஷ கேட்டார். இதையடுத்து சமாதான வாழ்வு பற்றி ஆராய்வதற்காக அரசு தரப்புத் தலைவர்கள் , சமயத் தலைவர்களின் பிரதிநிதிகள் போன்றவர்களின் கூட்டமொன்றை நடத்தலாம் என்ற யோசனையை விமல் வீரவன்ச முன் வைத்தார். இது ஒரு நல்ல யோசனை என்று ஜனாதிபதி கூறினார். ஆனால் உறுதியான முடிவு எதுவும் இதுபற்றி எடுக்கப்படவில்லை.

அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது போக நவிப்பிள்ளையின் கருத்துக்களுக்கு எழுத்து மூலமான விடையளிக்கும் அறிக்கையொன்றையும் வெளியுறவு அமைச்சு தயாரித்து வருவதாகத் தெரிகின்றது.

ஐ.நா.வின் உயர்மட்ட பிரதிநிதியொருவர் வருகை தந்திருந்த வேளையில் பலதரப்பட்ட மட்டங்களில் தவறான நிலைமைகள் கையாளப்பட்டுவிட்ட நிலையின் காரணமாக இப்போது இந்த அறிக்கை தயாராகிவருவதாகத் தெரிகின்றது.

ஆயுதப்போர் தொடர்பாக விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்ற நவிப்பிள்ளையின் கருத்துக்களுக்கு விடையளிப்பதாகவே இந்த அறிக்கை அமையும் என்று தெரிகின்றது.

நவிப்பிள்ளையின் கருத்து உண்மைக்கு நேர்மாறாக இருப்பதாகவும் முன்னுக்குப் பின் முரணாக இருப்பதாகவும் இந்த அறிக்கையில் கூறப்படவிருக்கின்றது. ஆரம்பத்தில் சர்வதேச விசாரணையொன்றுக்கு அவர் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த விடயத்தில் ஐ.நா.மனித உரிமை சபையில் அவர் மேற்கொண்டிருந்த நிலைப்பாட்டில் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கையை நியாயப்படுத்துவதாக இருந்தது. உண்மைகளைக் கண்டறியும் குழு நியமிக்கப்பட்டதன் பின்னரும் அதே கோரிக்கையை விடுத்திருந்தார்.

ஆணைக்குழுவின் அறிக்கை எப்படியிருக்கும் என்பதாக முன்கூட்டியே அவர் தீர்மானித்திருந்தார். அவரது இப்போதைய நிலைப்பாடானது நம்பகமான விசாரணையொன்று இலங்கை அரசினாலேயே நடத்தப்பட வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதானது கடந்த வாரம் கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது என இந்த அறிக்கையில் கூறப்படவிருக்கிறது.

வெளியுறவு அமைச்சர் பீரிஸ் நவிப்பிள்ளையின் ஊடகவியலாளர் மாநாட்டின் போது அங்கு இருந்திருக்க வேண்டும் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ விரும்பியிருந்திருக்கலாம். ஆனால் பிள்ளையை சந்தித்த பிறகு அவர் விடுத்திருந்த அறிக்கையானது கோபமூட்டுவதாகவும் நட்பை வெளிப்படுத்தாததுமாக இருந்தது. இது அவர் நாட்டைவிட்டுச் செல்லுமுன்பே வெளிவந்த விடயம். அதனால் அவர் விவரமான பதிலறிக்கையொன்றை விடுக்க வேண்டியதாயிற்று என்று அரச தலைவர்கள் கருதுகிறார்கள். இது தான் நீண்டதொரு ஆரம்ப உரையை பத்திரிகையாளர் மாநாட்டில் நிகழ்த்தும்படியாகிவிட்டது. இனிவரும் செப்ரெம்பர் 20 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமை மாநாட்டில் அவர் உரை நிகழ்த்தும்போது தமது இலங்கை வருகை குறித்து வாய் மூலமான அறிக்கையை சமர்ப்பிக்கவிருக்கிறார். இன்றைய தினம் ஜெனிவாவில் ஆரம்பமாகும் மனித உரிமைச் சபையின் மாநாடு செப்ரெம்பர் 27 ஆம் திகதி வரை நடைபெறும். அந்த மாநாட்டுக்கான இலங்கைப் பிரதிநிதிகளின் குழு இனிமேல் தான் தீர்மானிக்கப்படவிருக்கின்றது.

### பொதுநலவாய அமைச்சர்கள் மாநாடு

கொழும்பில் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கு முன்பதாக அந்த நாடுகளின் அமைச்சர்கள் செயற்குழுவானது செப்ரெம்பர் 26 ஆம் திகதி நியூயோர்க்கில் கூடவிருக்கிறது.

இதற்கு முன்னதாக ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்துக்கு செல்லும் பொதுநலவாய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூடிக் கலந்துரையாடவிருக்கிறார்கள். கடந்த வெள்ளியன்று சனல்-4 நோ பயர் சோன் ஆவண பட வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றபோது அதில் பொதுநலவாய செயலகத்தின் பேச்சாளர் றிச்சர்ட்டும் கலந்து கொண்டிருந்தார். ஆவணங்கள் வெளியிடுவதற்கான ஷாட்பரி அவனியுவிலுள்ள குர்சன் என்ற பகுதியில் இது இடம்பெற்றது. ரோலிங்ஸ்டோன் புகழ் அணியின் ஷக்ஜகரின் முன்னாள் மனைவி பியாங்காவும் இதில் கலந்து கொண்டவர்களில் இன்னொருவர். நிக்காராகுவாவில் பிறந்த இவர் இப்போது மனித உரிமை செயற்பாட்டாளர். கலந்து கொண்ட இன்னுமொரு முக்கியஸ்தர் ஒருசமயம் இலங்கையில் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராக இருந்தவரான டேவிட் கிளாட்ஸ்டோன். இவர் இலங்கையில் இருந்தபோது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட்டார் என்பதற்காக விரும்பத்தகாத மனிதர் என்ற முறையில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவால் வெளியேற்றப்பட்டவர். இலங்கையில் நடைபெற்ற ஒரு தேர்தலின் போது வாக்குச் சாவடி ஒன்றுக்குள் சென்று அங்கிருந்த அதிகாரிகளுடன் அவர் பேசியதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்.

சனல்-4 ஆவணப்படத்தை இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறும் போதும் திரையிடுவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக கூறப்படுகின்றது.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட இன்னொரு விடயம்கேள்வி கோரப்படாமலே பலகோடி டொலர் பெறுமதியான கட்டுமானத்திட்ட ஒப்பந்தம் ஒன்று சீனக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருப்பது பற்றி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கிளப்பிய விடயமாகும். இதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இந்தத் திட்டத்தில் வேறு எவரும் அக்கறை காட்டிக் கொள்ளாததன் காரணமாகவே சீனக் கம்பனிக்குவழங்கப்பட்டது என்று கூறினார்.

# ஆவணிச் சதுர்த்தி விரதத்தை அனுட்டித்து அவனியில் நல்ல வண்ணம் வாழ்வோமாக

இன்று
09.08.2013
ஆவணிச்
சதுர்த்தி



விநாயகப் பெருமானை நோக்கி அனுட்டிக்கின்ற விரதங்களில் ஆவணிச் சதுர்த்தி விரதம் முக்கியமானதொன்றாகக் கொள்ளப்படுகின்றது. ஆவணி மாதப் பூர்வபக்கச் சதுர்த்தி விசேடம் நிறைந்ததாகிறது. ஒவ்வொரு மாதந்தோறும் வரும் சதுர்த்தி விரதத்தை அனுட்டிக்க முடியாவிட்டாலும் ஆவணிச் சதுர்த்தியன்றாவது விநாயகரை வேண்டி அனுட்டிப்பது மேலானது.

ஆவணிமாத வளர்பிறை சதுர்த்தி தொடங்கி புரட்டாதி மாத வளர்பிறை சதுர்த்தி தினம் வரை அனுஷ்டிக்க வேண்டிய விரதம். தினமும் கணபதிக்கு எளிய முறையில் பூஜை செய்து எளிய வகையான உணவுண்டு கடைப்பிடிக்க வேண்டிய விரதம் இது. பார்வதி, முருகன் போன்றோர் இந்த விரதத்தை அனுஷ்டித்துப் பலன் பெற்றனர் என விநாயகர் புராணம் கூறுகின்றது.

விநாயகப் பெருமானை மெய்யன்போடு வழிபாடு செய்பவர்களின் விக்கினங்கள் அழிந்து போகின்றன. விநாயகப் பெருமானை தொடர்ந்து வழிபாடு செய்பவர்களுக்கு திரிகரண சுத்தி ஏற்படுகின்றது. அதனால் எந்தக் கருமத்தையும் வெற்றிகரமாக தொடங்கி முடிக்கக் கூடியதாக இருக்கின்றது.

குறிப்பிட்ட ' திதி ' யின்போது கணபதியை குறிப்பிட்ட வடிவில் வழிபாடு செய்தால் நினைத்த வரத்தை அடையலாம் என புராணங்கள் விரித்துரைக்கின்றன. 'அமாவாசை' திதியின்போது நிருத கணபதியாகவும், 'பிரதமை' திதியின்போது பாலகணபதியாகவும், 'துதியை', திதியின்போது தருண கணபதியாகவும், 'திருதியை' திதியின்போது பக்தி கணபதியாகவும், 'சதுர்த்தி' திதியின்போது வீர கணபதியாகவும், 'பஞ்சமி' திதியின் போது சக்தி கணபதியாகவும், 'சஷ்டி' திதியின்போது விஜய கணபதியாகவும், 'சப்தமி' திதியின்போது சித்தி கணபதியாகவும், 'அஷ்டமி' திதியின்போது உச்சிஷ்ட கணபதியாகவும், 'நவமி' திதியின் போது விக்கின கணபதியாகவும், 'தசமி' திதியின்போது ஷிப்ர கணபதியாகவும், 'ஏகாதசி' திதியின்போது ஹேரம்ப கணபதியாகவும், 'துவாதசி' திதியில் லக்ஷ்மி கணபதியாகவும், 'திரையோதசி' திதியின்போது மகா கணபதியாகவும், சதுர்த்தசி திதியின் போது விஜய கணபதியாகவும் , பௌர்ணமியில் நிருத்திய கணபதியாகவும் வழிபட்டால் விநாயகப் பெருமானின் அனுக்கிரகத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

சிந்தூரன் என்ற கொடியவனை சங்காரம் செய்து தேவர்களை காத்தருள அவதரித்த திருநாளே ஆவணிச் சதுர்த்தி ஆகும்.

விநாயகப் பெருமானுக்கு பிடித்தமான பத்திரங்களில் 'அறுகம்புல்' சிறப்பானது. வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் போன்ற முக்கனிகளையும் அவல்,அப்பம் , மோதகம், கொழுக்கட்டை, வடை, பொரி உருண்டை, எள் என்பனவற்றையும் நிவேதனப் பண்டங்களாகப் படையல் செய்து கணேச அஷ்டகம் பாடி அவருக்கு வழிபாடு செய்ய சகல ஐஸ்வரியங்களும் கிடைக்கும்.

இவ்வாறாக ஆவணிச் சதுர்த்தி விரதத்தை அனுட்டிப்பவர்கள் நல்லருட் கடாட்சம் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழும் பேற்றைப்பெறுவர். ஆகவே ஆவணிச் சதுர்த்தி விரதத்தை நாமும் நோற்று நல்ல கதி அடைவோமாக.

**காரை. எம்பி. அருளானந்தம்**

# ஏமாற்றம் விளைவித்த வியாபாரப் பின்னடைவு

சோபனா



பத்தடிக்கு வாடகை பத்தாயிரத்தை கட்டிப்போட்டு, பத்து நாளைக்கு பத்தாயிரம் கூட உழைப்பில்லாமல் வறுத்துக் கொட்டின கச்சானை எப்படி விற்கிறது? கச்சான், கடலை வியாபாரி விஜயாவின் வார்த்தைகளில் ஏமாற்றம் தொனித்தது. அவரது ஆதங்கம், இந்த முறை அவர்களது கச் சான் வியாபாரத்தில் மந்த நிலை இருந் ததை வெளிப்படுத்தியது.

நல்லூர் ஆலயச் சூழலில் வழமையை விட இந்தத் தடவை வியாபார நிலையங்கள் தாராளமாக ஆகா, ஓஹோ என்கிற அளவுக்கு, மழைக்கு முளைத்த காளான்களாக தலைதூக்கியிருந்தன. தென்னிலங்கைசார் விற்பனை நிலையங்கள் உட்பட உள்ளூர் விற்பனை நிலையங்களும் ஆலய சூழலின் சுற்று வீதிகளில் அதிக அளவில் இடம்பிடித்திருந்தன.

வருடாந்த கந்தன் திருவிழாவில் தமது வாழ்வில் சிறிய அளவாவது வசந்தம் வீசாதோ என்ற நப்பாசையில் சிறு வியாபாரிகள் தமது விற்பனைக் கூடங்களைப் பெறுவதற்கு போட்டா போட்டி போட்டு யாழ்.மாநகர சபையில் கேள்வி கோரல் அடிப்படையில் இடம் பிடித்திருந்தனர்.

அடிக் கணக்கில் நில அளவுக்கு ஏற்பவும் வீதியின் நிலமைக்கு ஏற்றாற் போலவும் வாடகைப் பணம் மாநகர சபையால் நிர்ணயிக்கப்பட்டு அறவிடப்பட்ட நிலையில் வாடகைப் பணம், தமது விற்பனைப் பொருள்களுக்கான முதலீடு என்பவற்றின் அடிப்படையில் கணிசமான இலாபத்தை வியாபாரிகளால் இந்தத் தடவை பெற முடியவில்லை என்பதே யதார்த்தம்.

"நான் 11 வருடமா நல்லூரிலை பெருந் திருவிழாக் காலத்திலை கச்சான் கடை போடுகிறனான். அப்ப 7 ஆயிரத்து 500 ரூபா நிலவாடகை கட்டினம். கடைகள் குறைவாக இருந்ததால ஓரளவுக்கு நல்ல வருமானம் கிடைச்சது. இப்ப வாடகைப் பணத்தையும் கூட்டி, கடைகளையும் கூட்டினதால வியாபாரம் பெரிசா இல்லை. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேணும் என்ற மாதிரி அடுக்கடுக்கா கடையள். ஒரே கடையில் எதிர்பார்க்கிற இலாபம் எங்க இருந்து கிடைக்கப் போகுது? வாடகைப்பணம் கட்டினதுதான் மிச்சம். இந்த வருஷம் பெரிசா இலாபம் கிடைக்கேல்லை. நல்லூர் கந்தன் கைவிட்டுட்டார்" கச்சானைச் சரையில் போட்டுக் கொண்டே தனது வியாபார நிலையையும் சொல்லி முடித்தார் கச்சான் வியாபாரி ஒருவர்.


காலாகாலமாக நல்லூரையே நம்பி பரம்பரை பரம்பரையாக கடைகளைப் போடும் வியாபாரிகளும் நல்லூரில் இருந்தனர். இவர்கள் குறிப்பாக யாழ். மாநகர சபை எல்லைக்குள் இருப்பதால் ஏனைய ஆலயங்களை விட நல்லூரையே நம்பி வாழ்கின்றனர். குடாநாட்டில் எந்த ஆலயத்துக்கும் இல்லாத சிறப்பு, பெருமளவான பக்தர்களின் வருகை நல்லூர் ஆலயத்துக்கான தனிச் சிறப்பு. இந்தத் தருணங்களை சிறுதொழிலாளர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

கச்சான் வியாபாரி அதே இடத்தில் வைத்து உடனடியாக கச்சான் வறுத்து விற்பனை செய்வதுடன் அதற்கான கூலி ஆள்களும் கூடவே எந்த நேரமும் இருக்க வேண்டிய நிலைமை, போடுகிற முதலுக்கு ஏற்ப இலாபம் கிடைக்காத நிலையில் அவர்களால் எவ்வாறு வியாபாரம் செய்ய முடியும்? மாநகர சபை தனது வருமானத்துக்கு சாதகமாக வியாபாரிகளின் விற்பனை நிலைமையைக் கருத்தில் கொள்ளாமல் அடிக்கணக்கில் நிலவாடகையை நிர்ணயித்துப் பெறுவதிலேயே குறியாக இருக்கிறது.

நல்லூர் ஆலயத்தின் 25 நாள் திருவிழாக் காலத்தில் ஆலயத்தின் பின் வீதியில் பத்தடிக்கு 10 ஆயிரம் ரூபா எனவும், சில கடைகளின் வியாபார தன்மையைப் பொறுத்து வாடகைப் பணத்தை நிர்ணயிக்கிறது மாநகர சபை.

லட்சக் கணக்கில் வாடகைப் பணம் செலுத்தி வியாபார நிலையங்களை நடத்தியவர்களும் உள்ளனர். சில கடை முதலாளிகள் வாடகைப் பணத்தை மீறி அள்ளுகொள்ளையாக வருமானத்தை தேட வாய்ப்பும் கிட்டியது. ஆனால் சிறு வருமானத்தை நம்பி வந்தகடலை வியாபாரம் போன்ற சிறு வியாபார முயற்சியாளர்கள் தமது முயற்சிக்குப் போட்ட முதலுக்கும் ஏற்ற இலாபம் ஈட்ட இயலாது போனதென்னமோ உண்மைதான்.

தென்னிலங்கைசார் வியாபாரிகளும் நான் முந்தி நீ முந்தி என ஆலய சூழலில் வியாபார முயற்சிகளில் இறங்கியதால் உள்ளூர் வியாபாரிகள் கணிசமான இலாபத்தைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டது. பக்தர்கள் தமது தேவைக்கு ஏற்ப கண்ணுக்கு குளிர்ச்சியானதும் முன் வீதிகளில் காணப்பட்ட பொருள்களையும் வாங்கிச் செல்வதில் ஆர்வம் காட்டி இருந்தனர். ஆடைவகைகள், அணிகலன்கள், பான்சிப் பொருள்கள், வீட்டு உபகரணப் பொருள்கள், உணவுப் பொருள்கள் என்பவற்றின் விற்பனை நிலையங்களே பெருமளவில் அமைந்திருந்தன. போட்டி வியாபாரத்தால் சிறு வியாபாரிகளால் இலாபம் ஈட்ட முடியாதநிலை.



எனினும் கடந்த வருடங்களில் இடம் பெற்ற திருவிழாக்கால வியாபாரத்தைவிட இந்த வருடம் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் ஆலய சூழலில அதிகம் விற்பனை செய்யப்பட்டிருந்தன. இலை மறைகாயாக இருந்த சிறுதொழில் முயற்சியாளர்கள் இதனால் நன்மை பெறக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டது.

யாழ்.மாநகர சபையால் திட்டமிடப்பட்டு கடைகளுக்கான இடங்கள் சரியாக அமைத்துக் கொடுக்கப்படாத காரணத்தாலேயே தமது வியாபாரம் இந்த முறை சூடுபிடிக்கவில்லை என வியாபாரிகள் குறைகூறுகின்றனர்.

மாநகரசபை தனது வாடகை வரிப் பணத்தை வசூலிப்பதில மட்டும் குறியாக இருந்தது. சுகாதார ஒழுங்கு நடவடிக்கைகள் ஊழியர்களால் சரியாக நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அவர்கள் கூட தமது கூலிப் பணத்தை வியாபாரிகளிடமிருந்து பெற வேண்டிய நிலையிலேயே இருந்தனர்.

கேள்வி கோரல்கள் முடிவடைந்த பின்னர், பிரதான வீதிகளில் முன்னுக்கு முன்னுரிமை அடிப்படையில் சில கடைகள் புதிதாக அமைக்கப்பட்டிருந்ததாகவும் வியாபாரிகள் குறை கூறியிருந்தனர்.

ஒட்டு மொத்தத்தில் நல்லூரின் பெருந் திருவிழா இந்த முறை மாநகர சபைக்கே பெருமளவில் வருமானத்தை ஈட்டிக் கொடுத்துள்ளது; வியாபாரிகளுக்கு அல்ல.

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும். நீண்டநாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**கடகம்:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்பு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை தவிர்த்துவிட்டு சேமிக்கத் தொடங்குவீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்:** நீண்டநாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்பு கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கோபம் குறையும்.

**கன்னி:** வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. யாருக்கும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். உத்தி யோகத்தில் மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள்.

**நாளை**

ஆவணி-25 செவ்வாய்க்கிழமை 10.09.2013
திதி: பஞ்சமி பி.ப. 02.26 வரை
நட்சத்திரம்: சுவாதி மு.ப.08.42 வரை
சுபநேரம்: 10.33 - 12.03 வரை
இராகுகாலம்: 03.03 - 04.33 வரை

**துலாம்:** எதிர்மறை எண்ணங்கள் வரக்கூடும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். உத்தி யோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்துப் போகும்.

**விருச்சிகம்:** மன நிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். இள வயது நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் மிகுதிகளை அதிரடியாகப் பெறுவீர்கள்.

**தனுசு:** ஆடம்பரமான செலவுகளை குறைப்பீர்கள். மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும்.அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**மகரம்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். சிலரின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிடாதீர்கள்.

**மீனம்:** நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 1 | | | | | |
| | 5 | | 8 | | | 7 | 4 | |
| | 9 | | 4 | 6 | | 5 | 8 | |
| | 6 | | | | 8 | | | |
| 7 | 2 | 1 | 6 | | 3 | 8 | 9 | 4 |
| | | | 9 | | | | 7 | |
| | 3 | 9 | | 4 | 1 | | 2 | |
| | 1 | 6 | | | 9 | | 3 | |
| | | | | | 6 | 1 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 7 | 4 | 6 | 5 | 9 | 2 | 3 |
| 6 | 9 | 4 | 2 | 3 | 8 | 7 | 5 | 1 |
| 5 | 2 | 3 | 7 | 1 | 9 | 4 | 6 | 8 |
| 7 | 3 | 6 | 8 | 5 | 4 | 2 | 1 | 9 |
| 8 | 5 | 1 | 9 | 2 | 3 | 6 | 7 | 4 |
| 2 | 4 | 9 | 1 | 7 | 6 | 8 | 3 | 5 |
| 9 | 1 | 2 | 3 | 4 | 7 | 5 | 8 | 6 |
| 4 | 7 | 5 | 6 | 8 | 1 | 3 | 9 | 2 |
| 3 | 6 | 8 | 5 | 9 | 2 | 1 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Knowledge Universe®

Knowledge Universe Sri Lanka

After A/L

கே.யுவின் தொழிற்கல்வி உண்மையாகவே தொழில் தரக்கூடியதா ?
நேரில் வருகை தாருங்கள் எமது கல்வி ஆலோசகர்களுடன் பேசுங்கள்.

KU Education
Creating Employable Graduates

15 Years in Sri Lanka
4 Years in Jaffna

Faculty of Para Medicine

மருத்துவத்துறையில் தகுதி வாய்ந்த வைத்திய அதிகாரிகளின் தலைமையின் கீழ் நடாத்தப்படும் முன்னணி தனியார் மருத்துவக்கற்கைகள் பீடம்.

Faculty of Medicine KU Education

Faculty of Business & IT

Free Career Guidance by MBA Professionals

Pharmacy Course - 2 Years(Part time)

Government Approved Programme
Lectures by Medical Doctors

அரச மருந்தாளராகப்பணியாற்றவும் சொந்தமாக மருந்தங்களை நடாத்தவும் உதவும் ஒரே சிறந்த கற்கை நெறி. மாணவர்களின் நன்மை கருதி வெளிநாட்டுத்தேவைகளுக்கான மேலதிக சான்றிதழும் வழங்கப்படுகிறது.(Entry :A/L Bio/Maths-3 passes)

CMA -Pre-Nursing (மருத்துவ உதவியாளர்)

6 மாதங்களில் அடிப்படைக்கல்வித்தகுதி உடைய அனைவரும்(O/L) கற்று உடனடியாக வேலை பெறக்கூடிய மருத்துவப்பயிற்சிநெறி. மருந்தகங்கள்,ஆய்வு கூடங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் உடன் வேலைவாய்ப்பு உண்டு. தனித்துவமான துறைகளை தெரிவு செய்வதன் மூலமாக உங்கள் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துங்கள்.

நூற்றுக்கணக்கான தொழில் வாய்ப்புக்களை வடக்கில் மருத்துவத்துறையில் வழங்கிய கே.யு வின் பயிற்சி நெறி.

கணினி பழுது பார்த்தல் பயிற்சி நெறி.

உங்கள் கம்பியூட்டரை நீங்களே திருத்துங்கள் 1+2 Months

உடனடியாகத் தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தரக்கூடிய மற்றும் அன்றாட வாழ்விற்குத்தேவையான பயிற்சி நெறி. உங்கள் கம்பியூட்டரை முழுவதும் அறிந்து கொள்ளுங்கள். எல்லையற்ற செயன்முறைப்பயிற்சி. தொழில் பயிற்சி (மாணவர் விரும்பின்)வழங்கப்படும். திறமையானவர்க்கு உடன் தொழில்வாய்ப்பு

(Only Degree Holders with Exp Teaching at KU)

15 வருடம் அனுபவம் வாய்ந்த நிபுணரின் பயிற்சி

ஸ்போக்கண் இங்கிலீஷ் - i-Spoken

KU's International Spoken English 3 Months

யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக நவீன கல்வி உத்திகளைப்புகுத்தி ஆங்கிலத்தை விரும்பிப்படிக்கும் ஒரு பாடநெறியாக உருவாக்கி இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் தேடிவந்து கற்கும் அளவிற்கு வெற்றியடைந்த சிறப்புப்பயிற்சி நெறி.சர்வதேச ஆங்கிலப்பரீட்சைகளிற்கு தோற்றவுள்ளவர்களுக்கும் ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்க விரும்புபவர்களுக்கும்

முழுநேர ஆங்கில விரிவுரையாளர்
தனிப்பட்ட மற்றும் சிறு குழு வகுப்புக்கள்.

IELTS@KU Education

- IELTS Coaching Class
- English for IELTS
- KU's i-Spoken
- ESOL Courses

நிலைத்திருக்கும் கல்வித்தரம்.

Authorized IELTS Centre

Visit: http://edu.kugroup.info/ielts

தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

A1/A2/B1/B2/C1/C2 - English for UK Visas

ஆங்கிலத்தில் மிகவும் பின்தங்கியவர்களும் எமது தனிப்பட்ட வகுப்புக்களின் மூலம் சித்தியடைந்து வெளிநாடுகளிற்கு செல்ல முடியும்.மெதுவாகக்கற்கும் மாணவர்க்கென வடிவமைக்கப்பட்ட விசேட கற்பித்தல் முறை எமது நிறுவனத்தை முழு இலங்கைக்குமான நிறுவனமாகத் தரம் உயர்த்தியுள்ளது.

Certificate in Business Management
Certificate in Marketing
Web Design / PC Networking
Certificate in Office Management

எமது பயிற்சி நெறிகள் பற்றிய முழு விபரங்களையும் இணையத்தில் பார்வையிடலாம்: http://edu.kugroup.info

விபரங்களுக்கு அழைக்கவும் :0213208342 / 0777302882 .இல 75,கோவில் வீதி(லாவா வைத்தியசாலை மேல்மாடி),யாழ்ப்பாணம்.

City & Guilds APPROVED CENTRE

Knowledge Universe Sri Lanka

i-Spoken™ Rapid learning

http://edu.kugroup.info/courses.html

KU Education Gold Status Centre Gold

KU Education

Learn English Online
Online Learning Centre

Official IELTS Exam Registration Centre in Jaffna

Multimedia Class Rooms

## குடிதண்ணீர் நெருக்கடிக்குள் புத்துவெட்டுவான் கிராமம்

துணுக்காயிலுள்ள புத்துவெட்டுவான் கிராமத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுவதால் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் சுமார் 500 மீற்றர் தூரத்திலுள்ள ஆலயக் கிணறு ஒன்றுக்கு குடிதண்ணீர் பெற நடந்து செல்ல வேண்டிய அவல நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போரின்போது இங்கு அமைந்திருந்த சுமார் 15 கிணறுகள் அழிக்கப்பட்டதாலும் தற்போது நிலவும் வறட்சி காரணமாகவும் குடிதண்ணீர் நெருக்கடி இந்தக் கிராமத்தில் ஏற்பட்டுள்ளது.

சுமார் 79 குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் மீள்குடியமர்ந்துள்ளன. இந்தக் கிராமத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாக நீண்ட காலமாகவே மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## துணுக்காய்ப் பிரதேசத்தின் வயல்களில் கட்டடங்கள்

அக்கராயன், செப்.9

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வயல் நிலங்களில் வீடுகள், கட்டடங்கள் ஆகியவற்றை அமைப்பது தொடர்பான முறைப்பாடுகள் பிரதேச செயலகத்தில் தெரிவிக்கப்பட்டு வருவதை அறிய முடிகின்றது.

விதிகளின் பிரகாரம் வயல் நிலங்களில் நிரந்தரமாக வீடுகள், கட்டடங்கள் என்பவற்றை அமைக்க முடியாது. ஆனால் மீள்குடியமர்வின் பின்னர் பல குடும்பங்கள் வயல் நிலங்களில் வீடுகளை அமைந்துள்ளன.

மேட்டு நிலங்களில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்ட நிலையில் வசதி படைத்த சிலர் வயல் நிலங்களிலும் வீடுகள், கட்டடங்கள் ஆகியவற்றை அமைப்பது தொடர்பான முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்து வருவதாக துணுக்காய்ப் பிரதேச செயலகத்தினர் தெரிவிக்கின்றனர். (க-18)

## தொற்று நோய்கள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

அக்கராயன், செப்.9

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை காலத்தில் ஏற்படும் தொற்று நோய்கள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிமனையினர் இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி ஒரு மீள்குடியமர்வு மாவட்டமாக இருப்பதால் அடிப்படை வசதிகள், பாதுகாப்பான வாழ்விடம் என்பன இல்லாத நிலையிலேயே மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு தொற்று நோய்கள் இலகுவாக ஏற்படக்கூடிய நிலையுள்ளதால் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**டெங்கு, மலேரியா, வயிற்றோட்டம் உட்பட பல்வேறு நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.**

டெங்கு, மலேரியா, வயிற்றோட்டம் உட்பட பல்வேறு நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக பாதுகாப்பான குடிதண்ணீர் தொடர்பாகவே கூடுதல் விளக்கம் அளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# ஒட்டுசுட்டான் அபிவிருத்திக்கு தனி பிரதேச சபை அவசியம்

### வலியுறுத்துகின்றனர் பிரதேச மக்கள்

முல்லைத்தீவு, செப். 9


புதுக்குடியிருப்பு பிரதேச சபையிலிருந்து பிரிந்து ஒட்டுசுட்டான் பிரதேச சபை அமையாதவிடத்து ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் அபிவிருத்தி பின்தள்ளப்பட்ட நிலையே காணப்படுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னைய காலங்களில் ஒட்டுசுட்டான் தனியான கிராம சபையாக இயங்கிய போது உள்ளூர் வீதிகள், பொதுக் கிணறுகள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டன. தற்போது அவையாவும் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றன. சுமார் 618 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதும், 27 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதுமான இந்தப் பிரதேசத்தில் சுமார் 5, 483 பேர் வசித்து வருகின்றனர். புதுக்குடியிருப்பு 16 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது. இந்த இரு பகுதிகளும் இணைக்கப்பட்டதால் வளப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் தமது சேவைகளைப் பெற முடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இதனை கிராம மட்ட அமைப்புக்கள் மூலமும் ஊடகங்கள் மூலமும் பலமுறை தெரியப்படுத்தியதனைத் தொடர்ந்து இங்கு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் ஒட்டுசுட்டான் தனியான பிரதேச சபையாக அமைக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஒட்டுசுட்டான் பிரதேசம் அதிகமான வருவாயைப் பெற்றுக் கொடுக்கின்ற போதிலும் இங்கு எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படுவதில்லை. சந்தை வசதிகள் உள்ளூர் வீதிகள், பொதுக் கிணறுகள், மலசல கூடவசதிகள் என எவையும் செய்யப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

குறிப்பாக பொது இடங்கள் மற்றும் பிரதான மக்கள் கூடும் இடங்களில் மலசல கூடம், குடிதண்ணீர், பஸ் தரிப்பிடம் என்பன இதுவரை அமைக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

இதனால் தற்போது தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தெருவோரங்களில் தரித்து நிற்பதும், சுகாதாரத்துக்கு இடையூறுகள் விளைவிப்பதும் தினமும் இடம்பெறுகின்றன. சிலர் அண்மையில் உள்ள வீடுகளுக்குள் நுழைந்து காலைக் கடன்களை முடிப்பதையும் காண முடிகின்றது. எனவே இந்தப் பிரதேசம் அபிவிருத்தி காண வேண்டுமென்றால் ஒட்டுசுட்டான் தனியான பிரதேச சபையாக அமைவது கட்டாயமாகும் என இந்தப் பிரதேச மக்கள் வலியுறுத்திக் கூறியுள்ளனர். (க-500)

## கைவிடப்பட்ட வாகனங்கள்....



இறுதிப் போரின்போது பொது மக்களால் கைவிடப்பட்ட பல வாகனங்கள் வவுனியா கச்சேரி வளாகத்தில் காணப்படுகின்றன. இந்த வாகனங்களை உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கு உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று வாகன உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்த வாகனங்கள் மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் உருக்குலைந்த நிலையில் பழைய இரும்பாக மாறிவிடும் நிலையில் உள்ளன. (க-402)

## கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம் மல்லாவியில் நாளை

மல்லாவி, செப். 9

வடமாகாண சபைத் தேர்தலையொட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் மல்லாவியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டம் நாளை 10 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் மல்லாவி சிவன் ஆலய முன்றலில் மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.தனிநாயகம் தலைமையில் ஆரம்பமாகும்.

முல்லைத்தீவு மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெறவிருக்கும் இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், செயலாளரான மாவை சேனாதிராசா, முதலமைச்சர் வேட்பாளரான சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், எஸ். வினோநோகராதலிங்கம், எஸ். ஸ்ரீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான த.சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, துணுக்காய்ப் பிரதேச சபைத் தலைவர் வி.இராசரத்தினம் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்வாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கூட்டம்

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான அங்குரார்ப்பணக் கூட்டங்கள் ஒக்ரோபர் மாதம் 16, 18 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான கூட்டம் ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி கரைச்சி பிரதேச சபை மண்டபத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கான கூட்டம் 18 ஆம் திகதி கரைதுறைப்பற்று பிரதேச சபை மண்டபத்திலும் சங்கத்தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் எஸ்.புண்ணியமூர்த்தியும் முல்லை மாவட்ட இணைப்பாளர் எஸ்.பற்குணராஜாவும் மேற்கொண்டுள்ளனர். (க-115)

# போர் முடிவுற்ற நிலையிலும் கூட அபிவிருத்தி காணாத கிராமங்கள்

முல்லைத்தீவு, செப். 9

நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவிலுள்ள எல்லைக் கிராமங்களான மருதோடை, ஊஞ்சல்கட்டி, பெரியகுளம், ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு ஒலுமடு ஆகிய கிராமங்கள் போதிய அபிவிருத்தி செய்யப்படாமையால் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் அங்கு வசிக்கும் மக்கள் காணப்படுகின்றனர்.

குறிப்பாக மருதோடைக் கிராமம் மிகவும் பின்தங்கிய விவசாயக் குடும்பங்களைக் கொண்டது. இந்தக் கிராமம் காடுகள் பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதால் மக்கள் அச்சத்துடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. பகல் இரவு வேளைகளில் யானைகள் இந்தக் கிராமத்துக்குள் வருவதால் மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர். அத்துடன் அவர்களால் செய்கை பண்ணப்பட்ட பயிர்களும் நாசமாக்கப்படுகின்றன.

இவர்கள் பயணிக்கின்ற வீதிகள் கூட காடுகள் மண்டிக் காணப்படுகின்றன.

இதனால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் மின்சாரம் கூட வழங்கப்படாததால் இவர்களின் நிலை பரிதாபகரமாக மாறியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. (க-500)

### அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சையில்

## குறைந்தளவானோர் தோற்றியதால் பரீட்சை ஏற்பாட்டாளர்கள் கவலை

நெளுக்குளம், செப். 9

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கென நடத்தப்பட்ட பரீட்சையில் குறைந்தளவானோர் பங்கு பற்றியமை தொடர்பாக பரீட்சை ஏற்பாட்டாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சை வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது. வவுனியா மாவட்டத்தில் சுமார் 60 அறநெறி பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 1000 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். ஆனால் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இவர்களுக்கான பரீட்சையில் சுமார் 50 வீதத்தினரே தோற்றினர். பெற்றோர்களும் உரிய ஒத்துழைப்பை வழங்கி தனியார் கல்வி நிலையங்களும் இந்தப் பரீட்சை நேரத்தில் வகுப்புக்களை நடத்தாது விடுமுறை வழங்கியிருப்பின் சுமார் 85 வீதமான மாணவர்களாவது பரீட்சைக்குத் தோற்றியிருப்பார்கள் எனப் பரீட்சை ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்து கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்தப் பரீட்சை இலங்கை முழுவதும் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## பஸ் சேவை சீரில்லை

வவுனியா, கணேசபுரம், சமயபுரம் ஆகிய பகுதிகள் ஊடான பஸ் சேவை சீராக இடம்பெறாததால் நூற்றுக்கணக்கான மக்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கணேஸ்வரா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், மருத்துவமனைக்குச் செல்வோர், பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் ஆகியனவற்றுக்கும் சந்தைக்கும் செல்பவர்கள் எனப் பலர் இந்தச் சீரில்லாத பஸ் சேவையால் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-402)

# அடிப்படை வசதிகள் போதாததால் கிளிநொச்சி நகர மக்கள் சிரமம்

அக்கராயன், செப்.9

கிளிநொச்சி நகரில் பாதுகாப்பான கிணறுகள், மலசலகூட வசதிகள் இல்லாத நிலையில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள பல குடும்பங்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளன.

கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி நகரம் தொடர்ச்சியான போர் அழிவுகளை எதிர்கொண்டு வந்துள்ளது.

இந்த நிலையில் மீள்குடியமர்வின் பின்னர் பல குடும்பங்களுக்கு வீடுகள், மலசலகூடங்கள் என்பன வழங்கப்பட்டபோதிலும் பல குடும்பங்கள் பாதுகாப்பான கிணறு, மலசலகூடங்கள் ஆகியவற்றைப் பெறாத நிலையில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

இந்த நெருக்கடிகள் தொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அதிகாரிகளுக்கு மனுக்களை அனுப்பி வருகின்றன.

மேலும் கிளிநொச்சி நகரில் வசிக்கின்ற பல குடும்பங்கள் ஏனைய அடிப்படை வசதிகளும் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

உதயநகர் கிழக்கு கிராமத்தில் 623 குடும்பங்கள் மீள்குடியமர்ந்த நிலையில் பல குடும்பங்களின் கிணறுகள் கட்டப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. மேலும் மலசலகூட வசதிகளும் இந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை. மழை பெய்வதால் இந்தக் குடும்பங்கள் பெரும் இடர் களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## ஈரப்பெரியகுளம் பகுதியில் வாராந்த சந்தை

வவுனியா, செப். 9

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் வாராந்த சந்தைக்கான புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.


வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் இவ்வாராந்த சந்தைக் கட்டடம் விற்பனையாளர்களுக்கும் நுகர்வோருக்கும் பெரும் நன்மை தரக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நீண்ட காலப் போர் காரணமாக ஈரப்பெரியகுளம் பகுதியில் வர்த்தக நடவடிக்கைகள் குறைந்து காணப்பட்டன. தற்போது இந்தச் சந்தை இயங்கத் தொடங்குமேயானால் தொடர்ந்து இங்கு வர்த்தக நடவடிக்கைகள் அபிவிருத்தி காணுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டி வீதிக்கு அருகில் இவ்வாராந்த சந்தை அமைக்கப்படுவதால் விற்பனையாளர்களும், நுகர்வோர்களும் பொருள்களை விற்பனை செய்வதற்கும் கொள்வனவு செய்வதற்கும் இலகுவாக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-421)

# சமூகமும் பெண்களும்

அகல்யா



இன்றைய கால கட்டங்களில் பெண்களுக்கு விடுதலை என்று குரலெழுப்புவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டு செல்கிறதே தவிர எதற்கு எதிலிருந்து விடுதலை என்பது மக்கள் மத்தியில் சரியாக எடுத்துக் கூறப்படவில்லை. நாம் வாழும் இச் சமூகம் அநீதியானது என்பதை நாம் ஏற்றுக் கொண்டு அந்த அநீதிகளினை ஆராய்ந்து அதை ஒழிப்பதன் மூலம் தான் நாம் விடுதலை அடையமுடியும். இவ் அநீதிகள் எவையும் எம் மீது பொறிக்கப்பட்டவையல்ல. வரலாற்று ரீதியாக ஏற்பட்ட பொருளாதார. கலாசார அரசியல். சமூக மாற்றங்களின் விளைவே. பெண்கள் ஆண்களினை போன்று கல்வி பயில்கிறார்கள். வேலை செய்கிறார்கள் இதை விட என்ன வேண்டும்? என்ன விடுதலை வேண்டும்? என்று கூறுபவர்களும் உண்டு.

எமது சமூக அமைப்பில் குடும்பம் முக்கிய பங்கு வகிக்கின்றது இக் குடும்பங்களில் நிலவும் பாகுபாடுகளும் பிற்போக்கு தனமான கருத்துக்களுமே ஒரு பெண் தன்னிச்சையாக நம்பிக்கையோடு செயற்படுவதை தடுக்கின்றது. பெண்ணானவள் பிறந்தது முதல் இறப்பு வரை தந்தை. அண்ணன். கணவன் என்று யாரையாவது சார்ந்து வாழும் நிலைக்கு தள்ளப்படுகிறாள். இதனால் பெண் தனித்து வாழும் தன்மையை இழந்து கொள்கிறாள். எமது சமூகத்தில் பெண்களாக பிறப்பதே ஒரு சாபக்கேடாக நோக்கப்படுகிறது. சாதாரண விளையாட்டு பொருள்களில் கூட பாகுபாடு காட்டப்படுகிறது ஆண் பிள்ளைகளுக்கு துப்பாக்கி, கார் போன்ற பொருள்களினையும் பெண் பிள்ளைகளுக்கு பொம்மை. சட்டி. பானை போன்ற பொருள்களையும் வாங்கிக் கொடுக்கிறார்கள். உணவு விடயத்தில் கூட பெண்களுக்கு வீட்டில் அடக்கு முறை காணப்படுகின்றது அதாவது வீட்டிலுள்ள ஆண்கள் உண்ட பின்னே பெண்கள் உண்ண வேண்டும் என்னும் நிலை காணப்படுகின்றது.

ஒரு பெண்ணானவள் எப்பவும் ஓர் ஆணுக்கு அடங்கித் தான் வாழ வேண்டும் என்ற நிலை காணப்படுகின்றது. ஆண் என்பவன் எதை சொன்னாலும் பெண் என்பவள் எதிர்த்து கதைக்காமல் அதற்கு கீழ் படிந்து வாழ்ந்தால் தான் அவள் ஒரு நல்ல பெண் என எமது சமூகம் நோக்குகின்றது. அப் பெண் அவர்கள் கூறுவதற்கு எதிர்த்து கதைத்தால் அவளை சரியில்லா பெண்ணாக எமது சமூகம் நோக்குகின்றது. காதல் செய்யும் உரிமை ஆண் பெண் இருவருக்குமே காணப்படுகின்றது ஆனால் குடும்பங்கள் பல இவ் உரிமையை பெண்ணுக்கு கொடுக்க மறுக்கின்றது. திருமணம் என்பது சில பெண்களுக்கு ஓர் அடக்கு முறையிலிருந்து இன்னோர் அடக்க முறைக்கு செல்லும் ஒரு வாயிலாகவே விளங்குகின்றது. மற்றும் அச்சம். மடம் .நாணம் .பயிர்ப்பு என்பவை பெண்களுக்கு இருப்பது தான் அழகு என்று எமது சமூகம் பெண்களினை அடக்கிவைக்க கூறுகின்றது. பெண் என்பவள் எப்பவும் சத்தமாக கதைக்க கூடாது. சிரிக்ககூடாது பொம்பிளை சிரிச்சா போச்சு புகையிலை விரிச்சா போச்சு என்னும் பழமொழியும் பெண்களினை அடக்கும் நோக்கோடு கூறப்படுகிறது. வெளியில் ஆண் துணை இன்றித் திரியக்கூடாது. எப்பவும் ஓர் ஆணையே சார்ந்து வாழ வேண்டும் என்று எமது சமூகம் எதிர்பார்க்கின்றது.

பெண்களின் திறமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒரு தளமாகவே இன்று அதிகமான திருமணங்கள் காணப்படுகின்றன. இன்றைய பொருளாதார அமைப்பு முறை பெண்கள் தொழிலுக்கு செல்வதை கட்டாயப்படுத்தி இருக்கின்ற போதும் ஊதியம் பெறும் தொழிலை கவனிப்பதோடு ஊதியம் பெறாத வீட்டு தொழிலையும் அவளே சுமக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. மற்றும் பெண்ணின் வாழ்க்கையானது கணவன் இறப்பதுடனே முடிகிறது. விவாகரத்து .மறுமணம் என்பன சட்டரீதியாக கொடுக்கப்பட்ட போதும் சமூக ரீதியாக ஏற்றுக் கொள்வது அரிதாகவே காணப்படுகின்றது. மற்றும் பாலியல் வன்முறை பெண்கள் குடும்பத்தில் எதிர்நோக்கும் பெரும் பிரச்சினையாக காணப்படுகின்றது விரும்பியோ விரும்பாமலோ பெண்ணானவள் தனது கணவனின் ஆசைகளுக்கு இணங்க வேண்டிய சமூக சூழல் காணப்படுகின்றது. ஆண் என்ன பிழை செய்தாலும் அவனை ஏற்று பெண்ணானவள் வாழவேண்டும் என எமது சமூகம் எதிர்பார்க்கிறது அவ்வாறு அவள் வாழாவிடின் அவள் மீது தேவையில்லா குற்றங்களை சமூகம் சுமத்துகின்றது. இவ்வாறு எமது சமூகத்திலுள்ள பல பெண்கள் பல்வேறுபட்ட ஒடுக்கு முறைகளுக்குள் தள்ளப்படுகிறார்கள். எனவே இவ் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக கிளர்ந்து நாம் எமது உரிமைகளினை பெற்று யாரையும் சார்ந்து வாழாது சுயமாகச் சிந்தித்து எமக்குள் ஒரு தன்னம்பிக்கையினை வளர்த்து நாம் ஒரு முழுமையான விடுதலை அடைவதன் மூலம் தான் சமூகமும் விடு தலையை பெறமுடியும்.

# எம்மை நாமே செதுக்க வேண்டும்

சு.சிவாஜினி

“ நாம் நிலைகுலைந்து போகும் பட்சத்தில் எமது அடுத்த கட்ட வெற்றிக்கான பாய்ச்சலை நோக்கி எந்த வீச்சான செயற்பாட்டையும் செய்ய முடியாது. மாறாக வாழ்க்கைப் பயணமானது எந்தவொரு குறித்த இலக்கையும் அடைய முடியாமல் ஓர் ஊனமான நிலையிலேயே இருக்கும்.

மனிதப் பிறவியெடுத்த நாம் அனைவரும் நினைப்பது போன்று மகிழ்வான வாழ்க்கை எல்லோருக்கும் கிடைக் கின்றதா? அல்லது அவ்வாறு கிடைத்து விட்ட வாழ்விலும் நிறைவான மகிழ்வு கிடைக்கின்றதா? என்று எம் மனதில் கேள்வி எழுகின்ற போது கிடைக்கின்ற விடைகள் வெறும் பூச்சியமே!

உண்மையில் எமக்கு இருக்கின்ற நிலையானது யாரால் உருவானது. அதன் உயர்வு தாழ்வுக்கு யார் பொறுப்பு? எம் வாழ்வுக்கு நாமேதான் பொறுப்பு. எம் வாழ்வின் உயர் வுகள். தாழ்வுகள், இன்ப துன்பம் யாவும் எமது செயல் களைப் பொறுத்ததே. வீணாக ஏன் துன்பப்பட வேண்டும். "வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான்" இதுவே யதார்த்தம். நாம் பாவல் கொட்டையை விதைத்து விட்டு அதே இடத் தில் சுரக்கொட்டை முளைக்கும் என்று நினைப்பது சரியா? அது விண் மடமைத்தனம்.

இன்றைய சமுதாய வாழ்வு நிலையும் அப்படியே. எமது வாழ்வு எனும் சோதனைக் களத்தில் பரீட்சை எழுதுபவர் கள் நாமே. நாம் எழுதிய படியே வெற்றி தோல்வி வரும். நானே எழுதிவிட்டு ஏன் விதியையும் இறைவனையும் நோக வேண்டும். எந்தத் தயார்படுத்தலும் இல்லாமல் சீரான கற்கையும் இல்லாமல் எப்படி பரீட்சையில் வெல்வது. அதுபோன்றே எமது வாழ்க்கையும் ஒரே போர்களமே. அந்தப் போர்களத்தில் போராளிகளாக இருக்கின்ற நாம் அனைவரும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் எத்தனையோ எதிர்ப்புக்களைச் சந்திக்கின்றோம்.

எத்தனை தடைகளை எதிர்கொள்கின்றோம். அத்தனை யும் தீர வேண்டுமானால் கண்ணீர் வடித்து மூலையில் சுருண்டு படுத்தால் முடியுமா? முடியாது. எதிர்த்து நின்று போராட வேண்டும். இந்த நடைமுறை பிழை. இப்படிப் போனால் இப்படியான நிலை வரும். இதை மாற்றிச் செயற்படுவோம் என்று பலவிதமான தீர்க்கமான முடிவுகள் எடுக்கும் திறன் எம்மை முட்டிமோதும் பிரச்சி னைகள். தடைகள் வரும் போது உருவாக வேண்டும். அப்படி உருவாகாமல் இருந்தால் அந்த நிலைக்கு நாமே தான் பொறுப்பு.

குறிப்பாக எத்தனையோ சந்தர்ப்பங்களில் நாம் வீணாக கலங்கி துன்பப்படுகின்றோம். எந்த விதமான முடிவும் எடுக்கும் திறன் குன்றி மிகவும் பரிதாபமான நிலைக்கு ஆளாகி வருகின்றோம். உண்மையில் நெருக்கடி வரு கின்ற போதுதான் நாம் நிலைகுலையாமல் இருக்க வேண்டும். நாம் நிலைகுலைந்து போகும் பட்சத்தில் எமது அடுத்த கட்ட வெற்றிக்கான பாய்ச்சலை நோக்கி எந்த வீச்சான செயற்பாட்டையும் செய்ய முடியாது. மாறாக வாழ்க்கைப் பயணமானது எந்தவொரு குறித்த இலக்கையும் அடைய முடியாமல் ஓர் ஊனமான நிலையிலேயே இருக்கும்.


இன்று குறிப்பாக எமது சகோதரிகள் எந்த துக்கத் தையோ. தோல்வியையோ எதிர்த்து நின்று போராடி ஒரு சவால் மிக்க வாழ்வை வாழத் துணிவற்ற பெண்களாக வெறும் அலங்காரப் பாவைகளாக. ஆடம்பரப் பொருள் களுக்கு அடிமையானவர்களாக வாழ்ந்து கொண்டி ருப்பது தாங்க முடியாத வேதனையே. சாஸ்திரங்கள் பெண் இனத்தை மூடி மறைத்ததால் அந்த ஆத்திரத்தில் பாரதிக்கும் மீசை துடித்ததடா. வீடாளும் பெண்கள் நாடா ளும் காலம் எப்போ என்றான் மகாகவி பாரதி. பெண் இனத் தின் மகா சக்திக்கு ஈடாக எது இவ்வுலகில். ஆனால் நம் கண்மணிகள் புரியாத வெகுளிகளாக வாழ்ந்து வீணான வலையில் வீழ்ந்து தம் வாழ்வை நரகமாக்குவது ஏனோ? இந்த நிலை மாறும் நாள் எப்போது? எம்மை நாமே செதுக்க வேண்டும். வெறும் உளி கொண்டல்ல உறுதி எனும் வீரியம் பாய்ச்சி உலுக்கி எழுப்பும் உளி கொண்டு செதுக்கு.



# பழுதடைந்த மோசமான பஸ்கள் சேவையில் கண்டும் காணாமல் இருக்கும் பொலிஸார்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.9
பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடிய நிலையில் பாவனைக்கு உதவாத பழுதடைந்த தனியார் பஸ்களைச் சேவையில் இருந்து இடை நிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் இருந்து உள்ளூர் மற்றும் வெளியூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களில் பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் சில குறிப்பிட்ட பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதனால் பயணிகள் உயிராபத்துக்களைச் சந்திப்பதுடன் இடைநடுவில் பஸ்கள் பழுதடைந்து நிற்பதால் தாமதித்த பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.
அதுமட்டுமல்லாமல் பஸ்களில் பயணிக்கும் போது புகை வெளியேறுவதால் சூழல் மாசுபடும் நிலையும் ஏற்படுகிறது.
பழுதடைந்த பஸ்களை சேவையில் இருந்து இடைநிறுத்தப் போவதாக பொலிஸாரால் அறிவித்தல் வழங்கப்பட்ட போதும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் உரிய முறையில் பஸ்களைச் சீர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக பயணிகள் மட்டுமே அசௌகரியங்களை எதிர்கொள்ள



வேண்டியுள்ளது.
பாவனைக்கு உதவாத பஸ்கள் சேவையில் ஈடுபடுவதால் பயணிகள் சேவையின் போது பஸ்கள் நீண்ட தூரம் பயணிக்க முடியாமல் இடைநடுவில் நிறுத்தப்படுவதுடன் திடீர் விபத்துக்களையும் சந்திக்க நேரிட்டுள்ளது. இதனால் பயணிகள் தாமதித்த பயணத்தையும் உயிராபத்துக்களையும் எதிர்நோக்குகின்றனர். எனவே பாவனைக்கு தகுந்த பஸ்களை மட்டும் சேவையில் ஈடுபடுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-14)

## தென்மராட்சி கிழக்கு விவசாயிகளுக்கான உரமானியப் பதிவு

தென்மராட்சி, செப்.9
தென்மராட்சி தெற்கு மறவன்புலோ மற்றும் தனங்கிளப்பு கமக்கார அமைப்புக்களின் எல்லைக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான காலபோக நெற்செய்கை உரமானியம் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
மறவன்புலோ கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான பதிவுகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை மறவன்புலோ பொது நோக்கு மண்டபத்திலும், தனங்கிளப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான பதிவுகள் நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் அமைப்பின் தலைவர் சதானந்தன் வீட்டிலும் இடம்பெறவுள்ளன.
நெற்செய்கையாளர்கள் தாம் நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள நெல்வயல்களுக்குகைதடி கமநல சேவைகள் நிலையத்தில் செலுத்திய வரிக்கான பற்றுச்சீட்டையும் கொண்டு வருமாறு அமைப்புகளின் தலைவர் அறிவித்துள்ளார். (வ-9)

## மக்கள் வங்கிக் கிளை கைதடியில் திறப்பு

தென்மராட்சி, செப். 9
சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையின் மற்றொரு சேவை நிலையம் கைதடியில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.
கைதடிப் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க கைதடிச் சந்தியில் உள்ள கட்டடத்தில் நாடளாவிய வங்கி வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டதாக இந்தச் சேவை நிலையம் இயங்கவுள்ளது.
மக்கள் வங்கியின் சேவை நிலையங்கள் இரண்டு ஏற்கனவே பளை, கொடிகாமம் ஆகிய நகரப் பகுதிகளில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.
இதேவேளை கைதடி நகர்ப் பகுதியில் இயங்கவுள்ளது மூன்றாவது சேவை நிலையம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-9)

## தீவக வலயக் கல்வி அலுவலக தொ.பே.இலக்கம் மாற்றம்



யாழ்ப்பாணம், செப்.9
தீவக வலயக் கல்வி அலுவலக தொலைபேசி இலக்கங்கள் மாற்றப்படவுள்ளதாகவும் இனி வரும் காலங்களில் பின்வரும் புதிய தொலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்தி வலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன்குயின்ரஸ் அறிவித்துள்ளார்.
வலயக் கல்விப் பணிப்பாளர் 021 221 1518, திட்டமிடல் பிரிவு 021 221 1519, நிதிப் பிரிவு 021 221 1520, கோட்டக் கல்வி அலுவலகம் (வேலணை) 021 221 1521, கோட்டக் கல்வி அலுவலகம் (ஊர்காவற்றுறை) 021 221 1619 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். (வ-7)

## தரம் - 5 பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள் வெளியாகும்



யாழ்ப்பாணம், செப்.8
நாடளாவிய ரீதியில் நடைபெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைந்ததால் இந்த மாத இறுதிக்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.
தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மதிப்பீட்டுப் பணிகள் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் நிலையில் யாழ். மாவட்டத்திலும் 20 குழுக்கள் ஊடாக வேம்படி மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மதிப்பீட்டுப் பணிகள் இன்றுடன் முடிவடையவுள்ளன.
எனினும் இந்த மாத இறுதி அல்லது அடுத்த மாத முற்பகுதியில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ-14-11)

# சிங்களத்தில் உரையாடும் போக்குவரத்து பொலிஸார்

## வாகனச் சாரதிகள் திண்டாட்டம்


யாழ்ப்பாணம், செப்.9
குடாநாட்டில் வீதிப்போக்குவரத்துக் கடமையில் உள்ள பொலிஸார் சிங்கள மொழியில் மட்டும் உரையாடுவதால் வாகனச் சாரதிகள் தம் மீது சுமத்தப்படும் குற்றங்களை மறுத்துரைக்க முடியாது தண்டப் பணங்களைச் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளனர்.
போக்குவரத்து விதிமுறை மீறல்கள் மற்றும் பாதுகாப்பை வழங்குவதற்காக கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் உரையாடக் கூடியது அவசியமாகும். இந்த நிலையில் குடாநாட்டில் பிரதான வீதிகளில் கடமையில் உள்ள பொலிஸார் வாகனச் சாரதிகளது விதிமுறை மீறல்களை அவதானித்து தமக்கு விளங்கிக்கொண்ட விதத்தில் குற்றத்துக்கான பற்றுச்சீட்டை சிங்கள மொழியில் மட்டும் எழுதி வழங்குகின்றனர். இதனால் சாரதிகள் தம் மீதான குற்றச்சாட்டை மறுக்க முடியாமல் பொலிஸாரால் விதிக்கப்படும் தண்டப் பணத்தை மட்டும் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.
இருமொழிக் கொள்கை முறையில் தமது மொழி உரிமை மீறப்பட்டுள்ளதாக சாரதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.
சாரதிகளால் நிகழ்த்தப்படுகின்ற குற்றத்துக்கு மேலதிகமாக அதிக தண்டப்பணம் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (வ-14)

# அ.அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை

### கரவெட்டிப் பிரதேச மக்கள் விசனம்

நெல்லியடி, செப்.9
கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் நடமாடும் சேவை நடைபெற்றது. இதில் புதிய அடையாள அட்டைகள் வழங்குதல், பெயர் திருத்தம், பதிவுத் திருமணச் சான்றிதழ் போன்ற சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.
குறித்த சேவை நடைபெற்று ஒரு மாத காலம் ஆகிய போதும் இன்னமும் அடையாள அட்டைகள் வராததையிட்டு அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
தற்போது நடைபெறவிருக்கும் வடமாகாண சபைத் தேர்தலுக்கு அடையாள அட்டைகள் முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் அவை வந்து சேராவிட்டால் புகைப்படம் எடுத்து கிராம சேவகரின் கையொப்பம் பெற வேண்டிய சிரமங்களும் ஏற்படவுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
எனவே உடனடியாக தமது அடையாள அட்டைகளைப் பெற்றுத் தருவதில் சம்பந்தப்பட்டவர்களை அக்கறைசெலுத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-422)

# நயினாதீவு-குறிகாட்டுவான் இடையேயான கடற்பாதை சேவை இம்மாத இறுதியில்



யாழ்ப்பாணம், செப். 9
நயினாதீவு- குறிகாட்டுவான் துறைமுகங்களுக்கு இடையிலான கடற்பாதைச் சேவை இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் எஸ்.சுதாகர் தெரிவித்தார்.
இந்த மாத முற்பகுதியில் சேவை இடம் பெறும் என முன்னர் தெரிவிக்கப்பட்ட போதும் பாதைக்கான இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக குறிப்பிட்டபடி சேவை இடம் பெறவில்லை.
தற்போது பாதைக்கான பாகங் கள் யாவும் பொருத்துவதற்கான நடவடிக்கை இடம் பெற்று வருகின்றன. பாதைக்கென புதிய இயந்திரம் விரைவில் வந்து சேரும் எனவும் இரண்டு வாரத்தில் சேவை ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை பாதை இயந் திரம் பொருத்தும் பணிகள் பூர்த்தியடைந்ததும் முதலில் பரீட்சார்த்தமாக வெள்ளோட் டம் விடப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-7-17)

## சர்வதேச லயன்ஸ் மாவட்ட ஆளுநர் வருகிறார் சாவகச்சேரிக்கு

தென்மராட்சி, செப்.9
சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ எதிர்வரும் 12 ஆம் திகதி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்துக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.
அன்றைய தினம் இரவு 7 மணிக்கு சாவகச்சேரி நகர சபை மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட ஆளுநர் மற்றும் லயன் சீமாட்டி ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.
இந்த நிகழ்வில் கழகத்தின் நலனோம்புத் திட்டங்கள் மாவட்ட ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்படுமென கழகத்தலைவர் லயன் பி.தளிர்ராஜ் அறிவித்துள்ளார். (வ-9)

## வீதியால் சென்ற பெண்ணின் சங்கிலி அபகரிப்பு

வலி.வடக்கு, செப்.9
வீதியால் சென்ற பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் பறித்தெடுத்துச் சென்ற சம்பவம் ஒன்று சுன்னாகம் பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.
உடுவில் பகுதியில் இடம்பெற்ற இந்தத் திருட்டு சம்பவத்தில் இரண்டு பவுண் நிறையுடைய சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியே பறித்தெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.
இது குறித்து சுன்னாகம்பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப் பாட்டைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86)

## பாரதி விழா

வலி.வடக்கு, செப்.9
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றம் நடத்தும் மகாகவி பாரதி விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் வாழ்த்துரையை கல்லூரி அதிபர் நோயல் அ.விமலேந்திரன் வழங்குவதுடன் பிரதம விருந்தினராக சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் கலந்துகொள்ளவுள்ளார்.
பாரதி பாடல்கள், நாடகங்கள், நடனம் என்பவற்றுடன் கல்லூரி ஆசிரியர்களின் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது. (வ-86)



## விண்ணப்பிக்கலாம்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தினால் ஆங்கிலச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த கற்கை நெறிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ந)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15.08.1941



மறைவு
19.09.2012

### அமரர் செல்லர் கந்தசாமி

கடந்த 19.09.2012 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் ஓராண்டு நினைவஞ்சலி இன்று (09.09.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆக்லேன், உடுவில்.
சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(39470) (3.6.11)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
13.05.1935

விண்ணில்
06.09.2012

### அமரர் கமலாவதி குணரத்தினம்

பெரிய பரந்தன், டி-6 ஐ முகவரியாகக் கொண்டவரும் 06.09.2012இல் சிவபதம் அடைந்தவருமான எமது அன்புத் துணைவியார், அன்புத் தெய்வம் அமரர் கமலாவதி குணரத்தினம் அவர்களது முதலாம் ஆண்டுத் திதி 10.09.2013 செவ்வாய்க்கிழமை அபரபக்க ஷஷ்டித் திதியில் வருவதால் அன்றைய தினம் அன்னாரின் ஆத்மசாந்திக்கான நிகழ்வு எமது இல்லமான டி-6 பெரிய பரந்தன், உருத்திரபுரம் வீதி என்னும் இடத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர் - இ. குணரத்தினம்
(பார்குணம்)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(37519) (7.6.3)



## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
21 . 05 . 1981

உதிர்வு
25 . 08 . 1998



### செல்வி நாகேந்திரம் நிஷாலினி(சுகி)

திதி: விநாயகர் சதுர்த்தி(09.09.2013)

நெஞ்சினிலே நீ சுமந்தாய் கனவுகள்– கோடி
வஞ்சகரை உறவென்று எண்ணினாய்– நாடி
பிஞ்சு உனக்கு நஞ்சு வலை விரித்தனர் தேடி
தஞ்சமென நினைத்த மாலி சந்தியானும்
வஞ்சம் செய்துவிட்டான்– கூடி
உனது ஆத்மா சாந்தியடையப்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"சுகிஸ் தான்"
அல்வாய் தெற்கு, அல்வாய்.

உனது பிரிவால் என்றென்றும் வாடி நிற்கும்
உறவினர்கள், குடும்பத்தினர்.

(39493)(4.3.6)


## சமய சந்நிதிகளில்

பரந்தன் பன்னங்கண்டிப் பிள்ளையார் ஆலய ஆவணிச் சதுர்த்தி விழாவில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வருவார்.
இரவு சிறப்பு நிகழ்வுகளாக தேவாரமாலை, கீர்த்தனாஞ்சலி, நாட்டியாஞ்சலி என்பன இடம்பெறும். (ந)

★ ★ ★

வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலய அலங் காரத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும் திரு விழாவில் தினமும் மாலை 4.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து பூசை கள் நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி வலம் வருவார்.
முன்னதாக நாளை திங்கட் கிழமை விநாயகர் சதுர்த்தி திருவிழா மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ந)

★ ★ ★

வதிரி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம ஸ்ரீ பாலமுருகன் திருக்கோயி லில் புனராவர்த்தன சம்பு ரோஷண மகாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்திப் பெருவிழா எதிர் வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கு நடைபெற வுள்ளது.
இந்தக் கும்பாபிஷேகத்தை சிவாகம கும்பாபிஷேக கிரியா திலகம் சிவஸ்ரீ. பாலகிருஷ் ணக் குருக்கள் நடத்தி வைப்பார். (ந)

★ ★ ★

இருபாலை, கோப்பாய் தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலய விநாயகர் சதுர்த்தி விசேட தீர்த்தவாரி இன்று காலை 6 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது. இதில் பக்தர்கள் தீர்த்தவாரி செய்யலாம். மாலை 4 மணிக்கு விசேட அபிஷேகமும், மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம் பெற்று கற்பகப் பிள்ளையார் வீதியுலா வருவார். (ந)

★ ★ ★

வண்ணை அங்குச பாச (கீரிப்பிள்ளையார்) விநாயகர் ஆலயத்தில் இன்று ஆவணிச் சதுர்த் தித் திருவிழா பிற்பகல் 4 மணிக்கு ஆரம்ப மாகவுள்ளது. தொடர்ந்து பூசைகள் நடைபெற்று வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று பெருமான் உள்வீதியுலா வருவார். (ந)

★ ★ ★

வடமராட்சி - புலோலி சித்தி புத்தி சமேத முறாவிற் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெற வுள்ளது. (ந)

★ ★ ★

யாழ்ப்பாணம் நல்லூர் சீரடி சாயிபாபாவின் வருடாந்தத் திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாயி நாதர் அர்ச்சனையும் ரதபவனியும் இடம் பெறும். மாலை 6.30 மணிக்கு ஆலயத்திலிருந்து புறப்படும் ரத பவனி நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, நக்கா வீதி, கோவில் வீதி, நாவலர் வீதி வழியாக ஆலயத்தை வந்தடையும்.
18 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறும் ரதபவனி பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும். இந்த ரதபவனி மருதடி வீதி, நக்கா வீதி, இராசாவின் தோட்டம் வீதி, நாவலர் வீதி ஊடாக ஆலயத்தை வந்தடையும்.
மறுநாள் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை ஆலயத்துக்கு அருகில் உள்ள ஞானவைரவர் ஆலய திருமஞ்சனக் கிணற்றில் தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (ந-8)

## விபத்தில் காயம்

ஆலய வழிபாட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணை அவ்வழியே வந்த வாகனம் மோதி விட்டு தப்பி யோடியது.
ஏ-9 வீதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பெண் பளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து சாவகச்சேரி வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ந-9)

## பெரும்போக நெற்செய்கையில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

யாழ். குடாநாட்டில் விவசாயி கள் பெரும்போக நெற் செய்கையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த இரு நாள்களாக பெய்து வரும் மழையை பயன்படுத்தி விவசாயிகள் தமது வயல்நிலங்களை உழுது சீர் செய்யும் பணி களில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ். குடாநாட்டில் இந்த முறை குறைந்தது 12 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப் பரப்பில் பெரும் போக நெற் செய்கையை மேற் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக விவசாய திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இதற்கென விவசாயிகளுக்கு விதை நெல்லை குடாநாட்டு விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் ஊடாக விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ந-17)

## விபத்தில் இரு படையினர் உட்பட மூவர் காயம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கு நாச்சிமார் கோவிலடிக்கு அண்மையாக இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு படையினர் உட்பட மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகிய சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
பலாலி வீதிவழியாக வந்த மோட்டார் சைக்கிள் லீவில் வீட்டுக்குச் செல்வதற்காக பஸ் ஏற நடந்து வந்த இரு படையினரை மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் தலையில் காயம் அடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் படையினர் இருவரும் காலில் பலத்த காயங்களுடன் பலாலி இராணுவ வைத்திய சாலையில் அனு மதிக் கப்பட்டுள்ளார்கள். இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவரான குரும்ப சிட்டியைச் சேர்ந்த இராசரத்தினம் சங்கர் (வயது-33) என்பவரே மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-86-36)


## கொக்குவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் ச.தயாபரன்
அவர்களின் பாசமிகு தந்தை

### நாகலிங்கம் சண்முகலிங்கம்

01.09.2013 சிவபதமடைந்து விட்டார். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(31626) (4.6.3)



## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் சூர்யா மருந்தக உரிமையாளர்
வே.குருபரன்
அவர்களின் பாசமிகு தாய்

### திருமதி இரத்தினசிகாமணி வேலும் மயிலும்

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அச்சுவேலி

த.யோகநாதன் (யோகா) நண்பர்கள்
எர்.நாகலிங்கம் நண்பர் (லக்கி பேக்கரி)

(சி/11948)(4.6.3)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
12.06.1961

உதிர்வு
12.09.2012

அமரர்

### கருணானந்தம் ரங்கநாதன்

(முன்னாள் சாரதி,
யாழ்.மாவட்டச் செயலகம்)

*அறிவில் ஆற்றலில் பாசத்தில் சிறந்த*
*உள்ளத்தில் உயர்ந்து பலர் போற்ற வாழ்ந்து*
*என்றும் எங்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த*
*எங்கள் குடும்பத் தெய்வத்தின்*
*ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி!

36/9, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(31559)(3.6.11)

# கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III க்கு ஆள்களை தெரிவு செய்வதற்கான திறந்த நிலை போட்டிப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.
நாடளாவிய ரீதியில் சகல விண்ணப்பதாரிகளுக்கும் கொழும்பில் பரீட்சை நடைபெறவுள்ளது. மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைத் திணைக்களம் அனுமதி அட்டைகளை அனுப்பிவைத்துள்ளது.
இலங்கை கல்வி நிர்வாக சேவை திறந்த நிலை ஆள் சேர்ப்புக்கு 30 வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்படும் ஆளணியில் 25 வீதமானோர் திறந்த நிலை போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். (ந-11)





மணமகன்
துரைராஜா கிரிகரன்
மணமகள்
லோகானந்தி ஆனந்தநாதன்

இன்று (09.09.2013) திங்கட்கிழமை லண்டனில் உள்ள ஸ்ரீகனக துர்க்கை அம்மன் திருமண மண்டபத்தில் திருமண பந்தத்தில் இணையும் கிரிகரன் லோகானந்தி இருவரும் தம்பதியினராகப் பல்லாண்டு காலம் நீடூழிவாழ வாழ்த்துகின்றோம்.

துரைராஜா (குடும்பத்தினர்)
நண்பர்கள்.
உரும்பிராய் கிழக்கு.
(31568) (45.6.3)


## மனனப் போட்டி புதன்கிழமை

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின், யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த திருக்குறள் மனனப்போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டி ஒ.எல்.ஆர். பாடசாலையிலும், நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டி கலட்டி மெ.மி.பாடசாலையிலும், கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டி நாவலர் வித்தியாலயத்திலும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா அறிவித்துள்ளார். (ந)

## நீச்சல் தடாகத்தில் இளைஞர் காயம்

தென்மராட்சி, செப்.9
நீச்சல் தடாகத்தினுள் பாய்ந்தவருக்கு தலையில் அடிபட்டு காயமேற்பட்டது.
இந்தச் சம்பவம் சனிக்கிழமை கைதடி நுணாவிலில் உள்ள நீச்சல் தடாகத்தில் இடம்பெற்றது.
உயரத்தில் இருந்து நீருக்குள் பாய்ந்தபோது தலையில் அடிபட்டதாக தெரிவிக்கப்பட்டது.
நுணாவில் மத்தியைச் சேர்ந்த பரமேஸ்வரன் சங்கர்லால் (வயது-21) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ந-9)

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### மதம் ஒரு மதயானையோ...?

சமூக முரண்பாடுகள் செம்பினில் களிம்பு போல் சமூகத்திலிருந்து பிரிக்க முடியாதவை. சமூக நலனுக்கென உருவான மதங்களிடையே முரண்பாடுகள் தொத்துவியாதிபோல் தொடர்கின்றன. முன்னர் கத்தோலிக்க- இஸ்லாமிய சிலுவைப்போர், கத்தோலிக்க- புரட்டஸ் தாந்திய 30 வருடப் போர், சைவம்- வைஷ்ணவம் அடிபாடு என்று நெடுங்கதையாகி தற்போது சிரியாவில் தரித்து நிற்கிறது. இலங்கைத் தீவினிலும் மெல்லக் கடை திறந்த மதவாதம், இனவாதத்துக்கு ஏடு தொடக்கி வைத்தது.
இந்து ஆலயங்கள் சிதைக்கப்பட்டமை அழிக்கப்பட்டமை குருக்கள் அடித்துக் கொல்லப்பட்டமை விநாயகர் திருவுருவை நீரோடையில் போட்டு, "கணதெய்யோ நாணவா.." என எழுதி வைத்தமை போன்றவை இலங்கையில் இந்து மதத் துக்கு ஏற்பட்ட கடந்த காலக் கறைகளில் ஒரு சிலவே. கடைசியாக தம்புள்ள பத்திரகாளி அம்மனையும் விட்டு வைக்கவில்லை மதவெறியர்கள்...! அடுத்து....?
சில நாள்களுக்கு முன்னர் தான் பெரும்பான்மையினப் பிரமுகர் ஒருவர் வடக்கின் தேர்தல் கூட்டமொன்றில், "பௌத்த ஆலயங்களில் பிள்ளையார் உட்பட இந்து தெய்வங்கள் இருக்கிறார்கள். தெய்வங்கள் ஒன்று சேரும் போது நாங்கள் ஏன் ஒன்றுசேர மறுக்கிறோம்" எனத் தெரிவித்திருந்தார். இதில் "நாங்கள்" என அவர் குறிப்பிட்டது யாரை என்பது தான் புரியவில்லை. மதம் ஒரு மதயானை என்று சொன்னவர் இருந்தாலும் கேட்டுப் பார்க்கலாம். நோயாளிக்குத் தானே மருத்துவர் தேவை.

## இசைச் சொற்பொழிவு

துன்னாலை வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை தொடக்கம் தினமும் மாலை 5 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவின் "மகாபாரதம்" பற்றிய இசைச் சொற்பொழிவு இடம்பெறும். (ந)





"ஆரோக்கியமான குடும்பத்தை நோக்கி"
"Towards Healthy Family"
"யாழ் மதர் கெயார்"
வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம்
Yarl Mother Care
Medical Specialist Consultation Centre

திறப்பு விழா



- வைத்திய நிபுணர்கள் ஆலோசனையும் சிகிச்சையும்
- ஸ்கான் (scan) & எக்கோ (echo) வசதிகள்
- ஆய்வு கூடம்
- மருந்தகம்
- எக்ஸ்ரே வசதிகள் (X-ray)

ஆகிய வசதிகளுடன் ..........
இல 514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் (போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு (OPD) முன்பாக) உள்ள பூர்வ வசதிகள் நிறைந்த புதிய கட்டடத்தில் உங்கள் அபிமானம் பெற்ற
"யாழ் மதர் கெயார்"(YARL MOTHER CARE)
வைத்திய ஆலோசனை நிலையம்
09.09.2013 முதல் இயங்க ஆரம்பிக்கின்றது.

No: 514/18, Hospital Road, Jaffna.
☎: 021 221 9595 / 021 221 9797
Reg . No# PV85754

- உங்கள் சேவையில்
உரிமையாளரும் பணியாளர்களும்.
(31558) (7.6.3)



**இலவச கணினிப் பயிற்சி**

இடம்: நுணாவில் [illegible]
காலம்: 25.09.2013
நேரம்: மு.ப 10.00 மணி
மேற்படி கணினிப் பயிற்சி வகுப்பில் 9 ஆம் ஆண்டு சித்தியடைந்த 28 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் அனைவரும் இணையலாம்.
விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரத்தை
ச.தில்லையம்பலம்
நிதிச் செயலாளர்.
[illegible]
என்னும் முகவரிக்கு 20.09.2013 இற்கு முன் கிடைக்கக்கூடியதாகத் தபாலில் அனுப்பி வைக்கவும்.
இயக்குநர், தேசிய தொழில்நுட்ப நிறுவனம்,
[illegible]. (கி/11949) (4.6.3)



**கடை வாடகைக்கு**

[illegible]
தொடர்பு: 021 222 2157, 075 047 8349

**Personal Class**

தரம் 3 தொடக்கம் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். நீங்கள் எமது நிறுவனத்தில் வந்து கற்கும் வசதியும் உண்டு. (31557) (7.6.3)
(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை)
தொடர்பு: K.K.S. Road, Jaffna. 071 904 1576

**வீடு விற்பனைக்கு**

[illegible] Store Room/ [illegible] Office Room, Attached Bath Room, Two Halls 1820 [illegible] Water Tank, [illegible] Servant Toilet, [illegible] 2011 ஆண்டு Valuation Report [illegible]
தொடர்பு :0776 953 776



**முன்னணி நிறுவனம் ஒன்றுக்கான உடனடி வேலை வாய்ப்புக்கள்**



Saudi Arabia
விஸா கையிருப்பில் உள்ளது

| Position | | Qty | Salary(SR)Food |
|---|---|---|---|
| தொழிலாளர்கள் | - Labour | 40 | 800 + 200 |
| மின் உபகரண திருத்துநர் | - Electrician | 20 | 1000 + 200 |
| ஏசி உதவியாளர்கள் | - A/C Duct Labour | 30 | 1000 + 200 |
| வெல்டர் | - Welder | 11 | 1000 + 200 |
| பிளம்பர் | - Plumber | 10 | 1000 + 200 |

நிபந்தனைகளும் விதிமுறைகளும்
- ஒப்பந்தக் காலம் 2 வருடம்
- தொழில்புரியும் நேரம் நாளொன்றுக்கு 8 மணித்தியாலம்
- தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதிகள் இலவசம்
- உணவுக் கொடுப்பனவு SR 200
- ஒப்பந்தக் கால முடிவில் நாடு திரும்புவதற்கான விமான ரிக்கெட் இலவசம்
- ஏனைய சட்டதிட்டங்கள் சவுதி நாட்டின் தொழிலாளர் சட்டங்களுக்கு உட்பட்டது

SR 01 = Rs. 35
CV Collection Only

அரசாங்க நிர்ணய கட்டணம் மட்டும்

SK Beta Travels
Manpower Consultants
937, 1st Floor Maradana Road, Colombo 08, Sri Lanka.
Tel : 011 725 7770 Hot Line : 077 732 0771 Fax : 011 753 8330
E-mail : skbetatravels@gmail.com
1543/1/13
(31572) (7.6.3)

## ஆற்றுப் படுகைகளை பாதுகாக்க விசேட திட்டம்



கொழும்பு.செப்.9
ஆற்றுப்படுகைகளை பாதுகாப்பதற்கான விசேட திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.


இதனை முன்னிட்டு கம்பஹா மாவட்டத்தில் மா ஓயாவை அண்மித்து ஆரம்பிக்கப்பட்டிருந்த இரண்டு திட்டங்கள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன என்று பணியகத்தின் பணிப்பாளர் அனில் பீரிஸ் குறிப்பிட்டார்.

இதன் மூன்றாம் கட்ட நடவடிக்கைகளை பொலநறுவை மாவட்டத்தில் மனம்பிட்டி, மகாவலி ஆற்றுப்படுகைகளில் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

ஆற்றுப்படுகை பராமரிப்புத் திட்டத்தை நாடு முழுவதும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனை முன்னிட்டு பராமரிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய இடங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

சூழலுக்கு அமைவாகவே ஆற்றுப்படுகைகளை பராமரிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# வருடாந்தம் 600 சிறுவர் திடீர் விபத்தால் உயிரிழப்பு



கொழும்பு.செப்.9
இலங்கையில் திடீர் விபத்துக்களால் வருடாந்தம் 600 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் உயிரிழக்கின்றமை தெரிய வந்துள்ளது.

இலங்கையில் சுகாதார சேவையில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும் திடீர் விபத்துக்களால் சம்பவிக்கும் சிறுவர் உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வாகன விபத்துக்களுக்கு அடுத்தபடியாக நீரில் மூழ்கியே அதிமான சிறுவர்கள் வருடாந்தம் உயிரிழக்கின்றனர் என்று றுகுணு பல்கலைக்கழகத்தின் சிறுவர் நோய்கள் பிரிவு வைத்திய நிபுணர் பேராசிரியர் சுஜீவ அமரசேன தெரிவித்தார்.

வீடுகளில் இடம்பெறும் விபத்துக்கள் மற்றும் நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகளின் கடிக்குள்ளாகி நோய்வாய்ப்பட்டும் சிறுவர்கள் அதிகம் உயிரிழக்கின்றனர் என்று அவர் கூறினார்.

மோட்டார் சைக்கிள்களில் சிறுவர்களை அழைத்துச் செல்வதால் இடம்பெறும் விபத்துக்களை தவிர்ப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

பெற்றொர் தமது பிள்ளைகள் தொடர்பில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் கரிசனையுடன் இருப்பதன் மூலம் விபத்துக்களை தவிர்க்க முடியும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)


### தேர்தல் கடமைகளில் ஈடுபடும் ஊழியருக்கு பயிற்சிக் கருத்தரங்கு

கொழும்பு.செப்.9
எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலின்போது கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ள அரச ஊழியர்களுக்கான விசேட பயிற்சிக் கருத்தரங்குகள் தேர்தல்கள் செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தந்த தேர்தல் அலுவலகங்களில் இந்தப் பயிற்சிக் கருத்தரங்குகள் வழங்கப்படும் என்று பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் குறிப்பிட்டார்.

இதேவேளை, தேர்தலின் போது வாக்குச் சாவடிகளில் தலா இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வீதம் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ச)

### 25 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்பு



கொழும்பு.செப்.9
நிட்டம்புவையில் சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து நிட்டம்புவ, ஊனகஹதெனிய பிரதேசத்திலுள்ள வீடொன்றை நேற்று ஞாயிற்றுக்கிழமை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியபோதே சுமார் 20 கிராம்களாக பொதிசெய்யப்பட்ட 25 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபர் நிட்டம்புவ, வியாங்கொடை, மீரிகம, திஹாரிய, பசியாலை உள்ளிட்ட பிரதேசங்களுக்கு ஹெரோயின் விநியோகித்து வருபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)



கண்டி இராச்சியத்தை இறுதியாக ஆட்சி செய்த மதுரை நாயக்கர் வம்சத்தவர்களுக்குச் சொந்தமான குருணாகல், நீர்கொழும்பு மாரியம்மன் ஆலயம் தற்போது அங்கு வாழும் இந்த வம்சத்தவர்களால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. (ச-200)

## வருடாந்தம் 3500 பேர் தற்கொலை


**சுகாதார அமைச்சு தகவல்**

கொழும்பு.செப்.9
வருடாந்தம் இலங்கையில் சுமார் 3500 பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்கொலை செய்துகொள்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தற்கொலை செய்வதற்கு முயற்சிப்போரை அதிலிருந்து காப்பாற்ற வேண்டியது சமூகத்தின் கடமை என்று அமைச்சு கூறியுள்ளது. (ச)

## மழையையடுத்து டெங்கு மீண்டும் பரவும் அபாயம்

**எச்சரிக்கிறது சுகாதாரத் தரப்பு**



கொழும்பு.செப்.9
மழை பெய்ய ஆரம்பித்துள்ளதையடுத்து, டெங்குக் காய்ச்சல் மீண்டும் பரவக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது என்று சுகாதாரத் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

டெங்குக் காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்த மக்கள் தமது சூழல்களை சுத்தமாக வைத்திருப்பது மிக முக்கியமான விடயமாகும் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பபா பலிஹவடன குறிப்பிட்டார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியினுள் 18 ஆயிரத்துக்கும் அதிகமானோர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது என்று அவர் கூறினார்.

தத்தமது சூழல்களில் நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாக மழை நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்களைக் கண்டுபிடித்து அழிப்பதன் மூலம் டெங்குக் காய்ச்சல் பரவுவதை தடுக்க முடியும் என்று அமைச்சின் தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை மேல் மாகாணத்திலேயே கூடுதலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச)

### பரப்புரைக்குப் பயன்படுத்தப்படும்

## அரச வாகனங்களை கைப்பற்ற உத்தரவு

கொழும்பு.செப்.9
தேர்தல் பரப்புரைக்காக பயன்படுத்தப்படும் அரச வாகனங்களை கைப்பற்றுமாறு பொலிஸாருக்கு தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

அரசுக்குச் சொந்தமான வாகனங்கள் சட்டவிரோதமாக தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன என்று நாளாந்தம் பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அரச நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்களின் செய லர்களுக்கு தேர்தல் பரப்புரைகளுக்கு அரச வளங்களை பயன்படுத்தக் கூடாது என்றுஅறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் இதனைப் பின்பற்றுவதற்கு ஒருசில அரச நிறுவன்ங்கள் தவறியுள்ளன என்று தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. இந்த நிலைமையை வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் அதிகம் காணக்கூடியதாக உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளி ஒக்ரோபரில்



**24,000 இற்கும் அதிகமான மாணவர்களை உள்வாங்கிக் கொள்ள தீர்மானிக்கப் பட்டுள்ளது.**

கொழும்பு.செப்.9
இந்தமுறை பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் குறித்து தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவர் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை முடிவுகள் அடிப்படையில் தகுதி உடைய மாணவர்களுக்கு வெட்டுப்புள்ளி வெளியிடப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தமுறை பல்கலைக்கழகத்துக்கு 24,000 இற்கும் அதிகமான மாணவர்களை உள்வாங்கிக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் தலைமைத்துவ பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தரமற்ற சிறுவர் இல்லங்களை மூடி விடுவதற்கு நடவடிக்கை



கொழும்பு.செப்.9
மேல் மாகாணத்திலுள்ள தரமற்ற சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 120 சிறுவர் இல்லங்கள் இயங்குகின்றன என்று மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஆணையாளர் சுகத் சிசிர தெரிவித்தார்.

அந்த சிறுவர் இலங்கள் உரிய தரத்துடன் இயங்குகின்றனவா என்பது தொடர்பில் மாதாந்தம் மேற்பார்வை செய்யப்படுகிறது என்று அவர் கூறினார்.

கட்டட வசதிகள், கல்வி மற்றும் சுகாதார வசதிகள் சிறுவர் இல்லங்களில் இருக்க வேண்டியது கட்டாயமாகும். சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் சிறுவர் இல்லங்களை பராமரிக்க வேண்டும் என்று நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் ஏற்கனவே அறிவுறுத்தல் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ரயில் மோதி ஒருவர் சாவு

வவுனியா, செப். 09
மன்னார் மடு வீதியில் தண்டவாளத்தை கடக்க முயன்ற டிப்பர் ஒன்றை ரயில் மோதியதில் டிப்பர் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் மடு பறயனாலன்குளம் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்றது. இதில் மன்னார் தம்பனைக் குளத்தைச் சேர்ந்த வடிவேல் செல்வக்குமார் (வயது-33) என்பவரே உயிரிழந்தவராவார்.
சடலம் பிரேத பரிசோதனைக்காக முருங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது .இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ங-400)

# சினிமாவின் தாக்கம் பற்றி கருத்துப்பரிமாற்ற நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.9
திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் மாதந்தோறும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு வருகின்ற ஃபோறம் எனப்படும் கருத்துப்பரிமாற்றக் கள நிகழ்வின் செப்ரெம்பர் மாதத்திற்கான அமர்வு இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம்பெற வுள்ளது.
யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருள்பணி ம.வி.இ. அரவிச்சந்திரன் அடிகளாரின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த அமர்வில் 'இளைஞர்கள் வாழ்வில் சினிமாவின் தாக்கம்' என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் மையத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் கருத்துரையாற்றுவார். தொடர்ந்து கருத்துப் பரிமாற்றம் இடம்பெறும்.
இந்த நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ங)

# கோஷ்டி மோதலில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், செப்.09
யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில் நேற்றிரவு இடம்பெற்ற கோஷ்டி மோதலில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத் தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.
எஸ்.ஜெனகன் (வயது-28) என்பவரே இவ்வாறு கோஷ்டி மோதலில் சிக்கி காயங்களுடன் யாழ். போதனா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டவராவார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ங-400-4)

# பல்கலை வெட்டுப்புள்ளிஅடுத்தமாதம்

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதி தொடர்பான வெட்டுப்புள்ளி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் வெளி யிடப்படும் என பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழு அறிவித் துள்ளது.
பல்கலைக்கழக அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் குறித்து தற்போது பரிசீலிக் கப்பட்டு வருகின்றது என பல் கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு தலைவர் ஷனிகா ஹிரும்பு ரேகம தெரிவித்துள்ளார்.
"2012 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தகுதி பெற்ற மாணவர்களுக்கு வெட்டுப்புள்ளி வெளியிடப்படும். 2013 ஆம் கல்வி யாண்டுக்காக பல்கலைக் கழகத்திற்கு 24 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்களை உள்வாங்கிக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் தலைமைத் துவப் பயிற்சி அளிக்கப்பட்ட பின் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்" என்றும் ஹிரும்பு ரேகம தெரிவித் துள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சரணடைந்தவர்கள்

எடுங்கள் என்று சண்டித்தனம் காட்டுவதற்கு ஒப்பானதாகும்.
வடக்கு, கிழக்கில் பலர் தமது உறவுகளைத் தொலைத்து விட்டு ஏங்கித் தவிக்கின்றனர். அவர்கள் காணாமற்போன மற்றும் சரணடைந்த தமது சொந்தங்களின் விடுதலையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.
இறுதிப் போருக்கு முன்னரும், போரின் போதும், அதன் பின்னரும் தமிழ் உறவுகள் பலர் காணாமற்போயுள்ளனர்.
இறுதிப் போரில் பலர் இராணுவத்திடம் சரணடைந்துள்ளனர். பலரை அவர்களின் உறவினர்கள் இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.
வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் திருமதி அனந்தி எழிலன் கூட தனது கணவரான எழிலனை எங்கே, எந்த இடத்தில், எந்த இராணுவத்தினரிடம் ஒப்படைத்தார் என்பதை விலாவாரியாகக் கூறியிருக்கின்றார்.
காணாமற்போன வண. பிதா ஜோசப் அடிகளார் பற்றியும் மறக்கமுடியாத செய்திகள் வெளியாகியுள்ளன. அவர் பலருடன் இராணுவத்தினரிடம் சரணடைந்தார் என்றும் தெரியவந்துள்ளது. எனவே, இவ்வாறு சரணடைந்தவர்கள் மற்றும் காணாமற்போனவர்கள் எங்கே?
போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது காணாமற் போனவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்றால், போர் முடிந்த பின்னர் சரணடைந்தவர்கள் மற்றும் அதன் பின்னர் காணாமற் போனவர்கள் எங்கே?
இலங்கை வரலாற்றில் விடுதலைப் புலிகள் - இராணு வத்தினருக்கிடையிலான போரின் போதும், ஜே.வி.பி. கிளர்ச்சியின்போதும் இரகசியத் தடுப்பு முகாம்கள் இருந்தே உள்ளன. இது கோத்தபாயவுக்கும் தெரியும்.
சரணடைந்தவர்கள் மற்றும் காணாமற்போனவர்கள் எவரும் இல்லை என்றால், இரகசியத் தடுப்புமுகாம்கள் இருக்கின்றன என்றுதான் அர்த்தம். இப்படித்தான் நவநீதம்பிள்ளை அம்மையாரும் நம்புவார்.
பொறுப்பற்ற விதத்தில் கருத்துகளை வெளியிட்டு மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றுவதை அரசு உடன் கைவிடவேண்டும்" என்றார். (ங-சி)

### ஜெனிவா

அடங்கிய குழுவுக்கு ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான தூதுவர் ரவிநாத் ஆரிய சிங்கவே தலைமை தாங்குவார் என்பது மட்டும் தற்போது உறுதியாகியுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தொடரின் 24 ஆவது அமர்வு இன்று முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங் கையில் தான் சந்தித்த மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூகத்தினர் மீதான தாக்குதல்கள் மற்றும் பதிலடி குறித்த விவகாரத்தை முன்னிலைப் படுத்துவார் என்றும், போருக்குப் பின்னர் இலங்கை அரசு முன்னெடுத்துவரும் அபிவிருத் திகளை அவர் தனது உரையில் வரவேற்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.
ஐ.நா. ம்னித உரிமைகள் பேரவையில் நவநீதம்பிள்ளை நிகழ்த்தவுள்ள 4000 சொற்களைக் கொண்ட உரையில், இலங்கை உள்ளிட்ட 20 நாடுகளின் மனித உரிமைகள் நிலை குறித்து விவரிக்கவுள்ளார். அதன் பின்னர் மார்ச் மாதம் நடைபெறும் 25 ஆவது கூட்டத்தொடரிலேயே அவர் இலங்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-சி)

### நாடெங்கும்

விளைவாகவே அரசியலிலும் இராணுவம் மூக்கை நுழைக்கிறது. அரசின் வெற்றிக்காக படையினர் பாடுபடுகின்றனர். எனவே இராணுவத்தினரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்குமாறு சொல்லவோ அல்லது வடக்கிலிருந்து படையினரை முற்றாக வெளியேறக் கோரவோ எங்களுக்கு அதிகாரம் தேவை. அந்த அதிகாரம் நீங்கள் எங்களுக்கு அளிக்கப்போகும் வாக்குகளிலேயே தங்கியுள்ளது - என்றார். (ங-2)

### கண்காணிப்புக்கு

"இலங்கைத் தேர்தல் ஆணையாளர் எங்களுக்கான வசதிகளை செய்து கொடுத்தாலும் எமது குழுவினர் சுயாதீனமாகவே செயற்படுவர்" என்று அந்தக் குழுவின் தலைவரான கோபாலசுவாமி தெரிவித் துள்ளார். (ங-400)

### வடக்கில்

அமைப்புத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கபே அமைப்பு மேலும் தெரிவித்ததாவது:
தேர்தல் விதிமுறை மீறல் மற்றும் வன்முறைகள் தொடர்பில் கடந்தவார ஆரம்பம் வரை 251 முறைப்பாடுகளே பதிவாகின. எனினும் கடந்த வாரம் மட்டும் மூன்று மாகாணங்களிலும் 154 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதன்படி கடந்தவாரம் இறுதிவரையான காலப் பகுதிகள் மொத்தம் 405 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.
வடமாகாணத்தில் கடந்தவார ஆரம்பம் வரை 43 ஆக இருந்த நிலையில் கடந்த வார இறுதிவரையான காலப் பகுதியில் 56 ஆக அதிகரித் துள்ளன.
மூன்று மாகாணங்களிலும் விதிமுறை மீறல்கள் தொடர்பில் 376 முறைப்பாடுகளும் வன்செயல்கள் தொடர்பில் 29 முறைப் பாடுகளும் பதிவாகியுள்ளன - என்று தெரிவித் துள்ளது. (ங-4)

### தபால் மூல

தகுதி பெற்றுள்ளனர்.
காலை 8.30 முதல் மாலை 4.15 மணி வரை, தபால் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பட்டுள்ள அரச அலு வலகங்களில் வாக்களிப்பை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
தவிர்க்க முடியாத காரணங்களால் குறித்த திகதிகளில் வாக் களிக்க தவறு வோர், 11 ஆம் திகதி தமது வாக்குச் சீட்டுகளை அந்தந்த மாவட்டங்களிலுள்ள தேர்தல் அத்தாட்சி அலுவலகத்தில் ஒப்படைத்துவிட்டு, 12, 13, 14 ஆகிய திகதிகளில் ஏதாவது ஒரு நாளில் வாக்களிப்பை மேற்கொள்ள முடியும்.
அதேவேளை, எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் 142 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 43 இலட்சத்து 58 ஆயிரத்து 263 பேர் வாக்களிப்பதற்கு தகுதிப்பெற்றுள்ளனர்.
வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கு சென்று விநியோகிக்கும் நடவடிக் கையை எதிர்வரும் 13 ஆம் திகதியுடன் நிறைவு செய்வதற்கு தபால் திணைக் களம் தீர்மானித்துள்ளது.
எனவே, 13 ஆம் திகதி வரை வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் தமது பிரதேசத் திற்குரிய தபாலகத்தில் அதனை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
தபால்மூல வாக்களிப்பு 10 மாவட்டங்களிலிருந்தும் தகுதி பெற்றுள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

**1) வடக்கு மாகாணம்**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 9,301 |
| கிளிநொச்சி | 970 |
| மன்னார் | 1, 917 |
| வவுனியா | 1,402 |
| முல்லைத்தீவு | 831 |

**2) மத்திய மாகாணம்**

| | |
|---|---|
| கண்டி | 23,805 |
| மாத்தளை | 12,130 |
| நுவரெலியா | 8,371 |

**3) வடமேல் மாகாணம்**

| | |
|---|---|
| குருநாகல் | 46,374 |
| புத்தளம் | 6,282 |

## மரண அறிவித்தல்



### கந்தன் பரிமளம்

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் - பரிமளம் கடந்த 07.09.2013 காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கந்தனின் மனைவியும் காலஞ்சென்றவர்களாகிய மயிலன் - கதிராசி தம்பதியரின் மகளும் வேலன் - கதிராசி தம்பதி யரின் மருமகளும் கட்டைவேலி பனை தென்னை கூட்டுறவு சங்க முன்னாள் பொது முகாமையாளரும் தற்போது சுவிஸில் வசிப்பவருமாகிய ஐயாத் துரையின் அன்புத் தாயும் கனடாவில் வசித்துவரும் நாகம்மா வின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான முத்துக்குட்டி, மகாலிங்கம் மற்றும் இளையகுட்டி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லக்கண்டு, மகேஸ், கண்மணி, வண்ணம் ஆகியோரின் சிறியதாயும் நாகேந்திரம் (கொலண்ட்), சத்தியசீலன் (லண் டன்), திரவியம் (டென்மார்க்), ராசா (கனடா), யோகராசா (சுவிஸ்), தங்கராசா (சுவிஸ்), தவரத்தினம் (சுவிஸ்), அன்னலட்சுமி (பிரான்ஸ்), இராஜலட்சுமி ஆகியோரின் பெரியதாயும் தாரணி - வரதன், நிமல்-வைதேகி, கமல்-தனுஷா, ரஜனி-சுவேந்திரராஜா, விமல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் உஷாயினா, அபின்சன், நிதுஷன், டார்மிகன், தாரகா, தரணிகா, தன்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2013) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்வெட்டி (சி/31632-23-16) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கனகரத்தினம் சிவராசா

முன்னாள்முள்ளிப்பற்று பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவாளர்,
முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்,
தற்போதைய கமக் குழுத் தலைவரும், மல்வில் கிருஷ்ணன் கோவில் பொருளாளரும்)

கொற்றாண்டார் குளம் இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சிவராசா கடந்த 07.09.2013 சனிக்கிழமை அமரத்துவம் அடைந்தார்.
அன்னார் கனகரத்தினம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் யோகராணியின் பாசமிகு கணவ ரும் நடராசா - பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும் ஜெயப்பிரகாஸ் (பிரான்ஸ்), றமேஸ், சஜீஸ், பவித்ராஜ் (தபால் திணைக்களம்), கஸ்தூரி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2013) திங்கட்கிழமைபி.ப. 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சாவத்தி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொற்றாண்டார் குளம்,
இயக்கச்சி.
(37520-23-16)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### முத்தன் சிவக்கொழுந்து

சில்லாலை சாந்தை, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தன் சிவக்கொழுந்து நேற்று (08.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2013) திங்கட்கிழமை ந.பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சம்பில்துறை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை சாந்தை,
பண்டத்தரிப்பு.
(31633-23-14-16)
தகவல்:
மார்க்கண்டு, மகேந்திரன்,
செல்லக்கிளி, பிள்ளைகள்.

## இன்றைய ஆட்டம்

மாங்குளம், செப்.9
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவ சக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று திங்கட் கிழமை பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 4 மணி
ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் நியூட்டன் விளையாட்டுக் கழகம்
பி.ப. 4.45 மணி
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகம்.
(ற-400-422)

## உதைபந்து தொடர் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 9
திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ற-23)

### மட்டுவில் ஐங்கரன் கரப்பந்துத் தொடர்

# ஆவரங்கால் மத்தி, மோகனதாஸ் வசம் வெற்றிக் கிண்ணங்கள்



யாழ்.மாவட்டப் பிரிவில் சம்பியனாகத் தெரிவாகிய ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி.

யாழ்ப்பாணம், செப்.9
மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டம், தென்மராட்சி பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டங்களில் யாழ்.மாவட்டப் பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும், தென்மராட்சிப் பிரிவில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகின.

நேற்றுமுன்தினம் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில், யாழ். மாவட்டப் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும், ஆவரங்களால் மத்தி விளையாட்டுக்கழகமும்மோதின.

விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை வீழ்த்திச் சம்பியனாகத் தெரிவாகியது.

ஆட்டநாயகன் விருதை ஜெயந்தன் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற தென்மராட்சிப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியும், கச்சாய் சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணியும் களமிறங்கின.

ஆட்டம் ஆரம்பமானது முதல் ஆதிக்கம் செலுத்தியது மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி. ஆட்டநேர முடிவில் 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது மோகனதாஸ் விளையர்ட்டுக் கழக அணி.

ஆட்டநாயகன் விருதை எஸ். பிரதீபன் பெற்றுக்கொண்டார்.
(ற-23-9)



தென்மராட்சிப் பிரிவில் சம்பியனாகத் தெரிவாகிய மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி.

## ஹென்றிஸ் 2 ஆம் இடம்

யாழ்ப்பாணம், செப்.9
அகில இலங்கை பாடசாலைகளுக்குஇடையிலானதேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை அநுராதபுரம் சுவர்ணம்பாளி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.
இதில் ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினை சுவீகரித்துள்ளது. (ற-23)

## மனோகராவை வீழ்த்தியது கொலின்ஸ்

யாழ்ப்பாணம், செப்.9
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் வில்ளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.
மனோகரா விளையாட்டுக் கழகத்துக்கும் கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டக்கழகம் 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

### சூசைப்பிள்ளை ராஜ் வெற்றிக் கிண்ணம்

# பாடுமீன் சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.9
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன்ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் சூசைப்பிள்ளை ராஜ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண இறுதியாட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.
மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.
சிறந்த வீரராக குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வீரன் தீலிப்பும், சிறந்த கோல் காப்பாளராக சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக வீரன் ஜெயபிரகாஸும் தெரிவாகினர்.
(ற-23)

### முருகையன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம்

# விக்வூட், பற்றிமா வாகை சூடின



திருகோணமலை, செப்.9
திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகம் நடந்தும் முருகையன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண, 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் விக்வூட் விளையாட்டுக் கழக அணியும், 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டத் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் பற்றிமா விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகின.
40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. அதில் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விக்வூட் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் விக்வூட் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.
தொடர்ந்து இடம்பெற்ற 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் பற்றிமா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜமாலிய விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் பற்றிமா விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது.
(ற-23)



# மைக்கல் 'பி' அணியை வீழ்த்தியது வீனஸ் 'பி'

யாழ்ப்பாணம், செப்.9
அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வீனஸ் 'பி' அணி 58 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
இந்த ஆட்டத்தில் வினஸ் 'பி' அணியும், மைக்கல் 'பி' அணியும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய வினஸ் 'பி' அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
அதில் தனேஸ் 43 ஓட்டங்களையும், குருசோத் 26 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் மைக்கல் விளையாட்டுக் கழக அணி சார்பில் தனுஸ் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 28 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை வீழ்த்தினார்.
84 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் விளையாட்டுக் கழக அணியினர் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 24 ஓட்டங்களை மட்டுமே பெற்று 59 ஓட்டங்களால் தோல்வியுற்றது.
பந்துவீச்சில் வினஸ் 'பி' அணி சார்பில் லஜி 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், மோகன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.(ற-23)

# அடுத்த சுற்றில் சிறி அம்பாள் வி.க.

மாங்குளம், செப்.09
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் நவிண்டில் சிறி அம்பாள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு ம்ன்னேறியது.
பொமர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகமும், நவிண்டில் சிறி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதின.
ஆட்டம் ஆரம்பமாகி 7 ஆவது நிமிடத்தில் யங்லயன்ஸ் அணி வீரர் ஹரிஸ் மார்க் தமது அணிக்கான மு்தலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார். அதையடுத்துத் தம்மை சுதாகரித்து கொண்டு உத்வேகத்துடன் விளையாடிய சிறி அம்பாள் அணி வீரர்கள், 13 ஆவது நிமிடத்தில் ருபிந்தனும் 17 ஆவது நிமிடத்தில் தர்சனும் அடுத்தடுத்து 2 கோல்களைப் பெற்று தமது அணியை முன்னிலைப்படுத்தினர்.




இதன் பின் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்படும் வரை இரு அணியினரும் மேலதிக கோல் எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை.
இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் சூடு பிடிக்கத் தொடங்கியது. இரு அணியினரும் எவ்வளவோ முயற்சி செய்தும் கோல் எதனையும் பெறமுடியவில்லை.
இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ற-400-422)


# தேசிய மட்ட பெருவிளையாட்டு போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 9
அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பெரு விளையாட்டுக்களில் கபடி போட்டியில் 15 வயதுப் பெண்கள் பிரிவில் வடமாகாணத்தைச் சேர்ந்த மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி , கிளிநொச்சி சிவநகர் அ.த.க பாடசாலை அணி, மன்னார் கருங்கண்டல் ம.வி அணி என்பனவும்,
15 வயது ஆண்கள் பிரிவில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி, கலட்டி றோ.க. வித்தியாலய அணி ஆகியனவும்-
19 வயது ஆண்கள் பிரிவில் வவுனியா பரக்கும் மகா வித்தியாலய அணியும் கால் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.
கரம் போட்டிகளில் 15 வயது பெண்கள் பிரிவில் வவுனியா அல் இக்பால் வித்தியாலய அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
உதைபந்தாட்டத்தில் 19 வயது ஆண்கள் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (ற-23)

# 'தலைவர்' வெற்றிக் கிண்ணம் எதிர்வரும் 28 ஆம் திகதி

யாழ்ப்பாணம், செப். 8
திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 'தலைவர்' வெற்றிக் கிண்ண 11 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர் எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக்மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ள னர்.
(ற-23)





## அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர்

# ஜோகோவிச், நடால் பலப்பரீட்சை

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின் ஆடவர் இறுதியாட்டத்தில் செர்பியாவின் ஜோகோவிச் மற்றும் நடால் ஆகியோர் மோதவுளனர்.

நியூயோர்க்கில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. அதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் உலகின் முதல்தர வீரர் செர்பியாவின் ஜோகோவிச், சுவிட்ஸர்லாந்தின் வாவ்ரின்காவை எதிர்கொண்டார். அதில் முதல் செற்றை 2:6 என்ற கணக்கில் இழந்த ஜோகோவிச், டைபிரேக்கர் வரை சென்ற இரண்டாவது செற்றை 7:6 என்ற கணக்கில் வென்றார். மூன்றாவது செற்றை 3:6 என்ற கணக்கில் கோட்டை விட்ட ஜோகோவிச், அடுத்த இரண்டு செற்களை 6:3, 6:4 என்று தன்வசப்படுத்தினார். அதன் மூலம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார்.

நடால் அசத்தல்:

மற்றைய அரையிறுதியில் உலகின் 2ஆம் தர நிலை வீரர் ஸ்பெயினின் நடால், பிரான்ஸின் ரிச்சர்டு காஸ்குயட்டை சந்தித்தார்.

அதில் முதல் செற்டை 6:4 என வென்ற நடால், அடுத்த இரண்டு செற்களையும் 7:6, 6:2 என்ற கணக்கில் கைப்பற்றினார். முடிவில், நடால் 6:4, 7:6, 6:2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார்.

தரவரிசையில் முதலிரு இடங்களிலும் உள்ள வீரர்கள் மோதும் இறுதியாட்டம் இரசிகர்களுக்கு விருந்தாய் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

# 2020 ஒலிம்பிக் டோக்கியோவில்

2020ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை நடத்த ஜப்பானின் டோக்கியோ நகரம் தெரிவாகியுள்ளது. சர்வதேச ஒலிம்பிக் செயற்குழுவின் இறுதிக்கட்ட வாக்கெடுப்பிலேயே டோக்கியோ தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அதன் மூலம் இரண்டாவது தடவையாக டோக்கியோ நகரம் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தவுள்ளது. இதற்கு முன்னர் 1964ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை டோக்கியோ நடத்தியிருந்தது. இடம்பெற்ற இறுதிக்கட்ட வாக்கெடுப்பில் டோக்கியோ நகரம் எகிப்தின் இஸ்தான்புல்லைத் தோற்கடித்து இந்த வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது.

வாக்கெடுப்பில் டோக்கியோ 60 வாக்குகளையும் இஸ்தான்புல் 36 வாக்குகளையும் பெற்றுக்கொண்டன. 32ஆவது ஒலிம்பிக் தொடரை 2020 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு அதிக வாய்ப்புக்களுள்ள நகரமாக டோக்கியோவே ஆரம்பத்திலிருந்து கருதப்பட்டு வந்தது. எனினும் ஃபுகுஷிமா அணு உலையில் ஏற்பட்டுள்ள கதிரியக்க நீரின் கசிவு காரணமாக டோக்கியோவின் வாய்ப்புக்கள் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் டோக்கியோவிலிருந்து 150 கிலோ மீற்றர்கள் தூரத்திலுள்ள புகுஷிமா அணு உலையின் கசிவின் காரணமாகப் பாதிப்புக்கள் ஏற்படாது என்றும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் காணப்படுவதாகவும் ஜப்பானின் பிரதமர் ஷின்ஸோ அபே உறுதிபடத் தெரிவித்தார். அதனையடுத்து இந்த வெற்றி ஜப்பானுக்குக் கிடைத்துள்ளது. (ற)




# பாகிஸ்தான் சுழலில் சிதறியது சிம்பாப்வே

சிம்பாப்வே அணிக்கெதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 221 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் ஹராரே நகரில் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமானது.

அதில் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் 249 ஓட்டங்களும், சிம்பாப்வே 327 ஓட்டங்களும் எடுத்தன. 78 ஓட்டங்கள் பின்தங்கிய பாகிஸ்தான், 2ஆவது இன்னிங்ஸில் 9 இலக்குகள் இழப்புக்கு 419 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

சரிவில் இருந்து அணியை காப்பாற்றிய மூத்த வீரர் யூனிஸ்கான் இரட்டை சதம் (200 ஓட்டங்கள்) அடித்து அசத்தினார். அதன் மூலம் சிம்பாப்வேக்கு 342 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

கடின இலக்கைநோக்கி 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த சிம்பாப்வே 4 ஆவது நாள் முடிவில் ஓர் இலக்கு இழப்புக்கு 13 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்த நிலையில் 5ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் அணித்தலைவர் ஹாமில்டன் மசகட்சா, சிபாண்டா ஆகியோரை வேகப்பந்து வீச்சாளர் ஜுனைட் கான் காலி செய்தார்.

அதன் பின்னர் சயீத் அஜ்மல், அப்துர் ரகுமான் ஆகியோரின் சுழல் வலையில் சிக்கி சிம்பாப்வே சிதறிப் போனது. உணவு இடைவேளைக்கு முன்பாக சிம்பாப்வே அணி 46.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 120 ஓட்டங்களுடன் சுருண்டது.

அதன் மூலம் பாகிஸ்தான் அணி 221 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிம்பாப்வேக்கெதிராக பாகிஸ்தானின் பெரிய வெற்றி இதுவாகும்.

இதற்கு முன்பு 1993ம் ஆண்டு 131 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதே இந்த வகையில் சிறந்த வெற்றியாக இருந்தது.

சிம்பாப்வே அணியில் சிக்கந்தர் ராசா 24 ஓட்டங்களும், மால்கம் வாலர் 17 ஓட்டங்களும், சிகும்புரா 28 ஓட்டங்களும், முதம்பமி 16 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

பாகிஸ்தான் தரப்பில் சயீத் அஜ்மல், அப்துர் ரகுமான் ஆகியோர் தலா 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

சயீத் அஜ்மல் ஏற்கனவே முதல் இன்னிங்சில் 7 இலக்குகளை வீழ்த்தியதையும் சேர்த்து மொத்தம் 11 இலக்குகளை அள்ளியிருக்கிறார்.

டெஸ்டில் ஆட்டமொன்றில் அவர் 10 மற்றும் அதற்கு மேல் இலக்குகளை வீழ்த்துவது இது 4ஆவது முறையாகும். யூனிஸ்கான் ஆட்டநாயகன் விருதை பெற்றார். (ற)



**ஹாமில்டன் மசகட்சா, சிபாண்டா ஆகியோரை வேகப் பந்து வீச்சாளர் ஜுனைட் கான் காலி செய்தார். அதன் பின்னர் சயீத் அஜ்மல், அப்துர் ரகுமான் ஆகியோரின் சுழல் வலையில் சிக்கி சிம் பாப்வே சிதறிப் போனது.**

# கவலைப்படும் உசைன் போல்ட்




2013ஆம் ஆண்டு எனக்கு சிறப்பாக அமையவில்லை என்று உலகின் அதிவேக மனிதரான ஜமைக்காவின் உசைன் போல்ட் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் கடைசி ஓட்டப் பந்தயமான டைமண்ட் லீக் பெல்ஜியத்தில் நடைபெற்றது. அதில் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் 9.80 விநாடிகளில் இலக்கைக் கடந்து முதலிடத்தைப் பிடித்தார் போல்ட். அவரைத் தொடர்ந்து அமெரிக்காவின் மைக் ரோட்ஜர்ஸ் (9.90 விநாடிகள்), ஜமைக்காவின் நெஸ்டா கார்டர் (9.94 விநாடிகள்) அடுத்தடுத்த இடங்களைப் பிடித்தனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே போல்ட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து மேலும் கூறும்போது,

"காயம் போன்ற பிரச்சினைகளால் இந்தக் காலப்பகுதியில் எனது தடகள வாழ்க்கை சிறந்ததாக அமையவில்லை. எனினும் உலக சம்பியன்ஷிப் தடகளம் போன்றவற்றில் முதலிடத்தைப் பிடித்தது நிறைவைத் தந்துள்ளது' என்று தெரிவித்தார் போல்ட்.

# வென்றது ஸ்பெயின்

பின்லாந்துக்கு எதிரான உலகக் கிண்ண உதைபந்துத் தொடரின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் ஸ்பெயின் அணி வெற்றி பெற்றது.

பிரேஸிலில் அடுத்த ஆண்டு ஆண்களுக்கான பிபா உலகக் கிண்ண உதைபந்துத் தொடர் நடைபெறவுள்ளது.

இத்தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, ஓசியானா, தென் அமெரிக்கா, வடக்கு/மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன் என்று 6 பிரிவுகளாக உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகின்றது.

ஐரோப்பிய பிரிவில் 53 அணிகள் ஒன்பது பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றன. அதில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் ஸ்பெயின், பின்லாந்து அணிகள் மோதின.

அபாரமாக ஆடிய ஸ்பெயின் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஸ்பெயின் சார்பில் ஜோர்டி ஆல்பா (19வது நிமிடம்), ஆல்வரோ (86வது) தலா ஒரு கோல் அடித்தனர்.

மற்றொரு ஆட்டம் ஒன்றில் ஸ்கொட்லாந்து அணியும் பெல்ஜியம் அணியும் மோதின. அதில் பெல்ஜியம் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(ற)



THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE-JAFFNA
2013 DAY CLASS
11.09.2013 புதன் முதல்
பிரிவு I மு.ப 10.00
பிரிவு II பி.ப 4.00
CHE- அன்பு
PHY-செல்வன்
BIO- D.S.S (கொழும்பு ஆசிரியர்)
MATHS- சிவகரன்
மயூரன்
(c/11939)(3.11.8)

கணனி,முகாமைத்துவ, ஆங்கில கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவு ஆரம்பம்
09.09.2013
12.09 .2013 காலை 10.00மணி
மேலதிக விபரங்களுக்கு: 021 4922 741
IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

வேலைவாய்ப்பு
யாழ். பிரதேசத்தில் பல இடங்களுக்கும் சென்று வேலைசெய்யக் கூடியவர்கள் தேவை. (இருபாலாரும்) நேரில்வரவும்.
மாதவேதனம் 15000 - 20000 வரை.
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்.
0718474325

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
Learn French The French Way
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது Certificate அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே.
புதிய வகுப்பு விரைவில்... உடன் பதிவு செய்யவும்...
61, Kachchery-Nallur Road, Jaffna T.P. 021 222 8093
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

CIMA~UK Certificate (3Months) Weekdays batch
PO-75% S.Kanisdda
PO-74% T.Sanjeevan
இம்முறை வெளியான **CIMA** பெறுபேற்றில் **MCS** நிறுவன மாணவர்கள் அனைவரும் சித்தி பெற்றுள்ளனர். இதன் மூலம் **Managerial/Operational** மாணவர்களும் **100 %** சாதனை சித்தியைப்பெற்றுள்ளனர். இவ்வெற்றியினை கொண்டாடும் முகமாக செப்ரெம்பர் 11ம் திகதிக்கு முன் பதிவு செய்யும் மாணவர்களிற்கு **CIMA_UK Reg Fee** 16000 ரூபா புலமைப்பரிசிலாக வழங்க உள்ளோம். புலமைப்பரிசிலிற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் உங்களது **<NAME> <CIMASC>** என **type** செய்து 772 395 895 க்கு **sms** செய்யவும். **AL 2013** பரீட்சைக்கு தோற்றிய மாணவருக்கான விசேட பிரிவுகள் புதன் கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது. மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள **MCS** வளாகத்தில்.

IIS வழங்கி வரும் UK உயர் கல்வி
A/L 2013 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!, மற்றும் உயர்கல்வி வாய்ப்புக்காக காத்திருக்கும் மாணவர்களே! உங்களுக்கான விஷேட பிரிவு ஆரம்பம்.
HND
CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
SOFTWARE ENGINEERING
BUSINESS MANAGEMENT
Leading to DEGREE From UK, US, NZ, Australian Universities
மேற்படி துறைகளில் பிரித்தானிய பட்டத் தகைமைகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினை IIS வழங்குகின்றது
மாணவர்களுக்கு இலகு கல்விக் கடன் வசதி செய்து தரப்படும்
புதிய பிரிவு ஆரம்பம் 14/09/2013 காலை 10.00மணி
மேலதிக விபரங்களுக்கு 021 4900 900
IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk

வவுனியாவை சேர்ந்த நான் கணனித்துறையில் Software Engineering பட்டக்கல்வியை மேற்கொள்வதற்காக IIS CITY CAMPUS ஐ தெரிவு செய்தேன். அவர்களின் தொழில் நுட்ப ரீதியானதும், நடை முறைக்கு ஏற்றதுமான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை எனது இறுதிப் பயிற்சிக்காலத்தில் துல்லியமாக பிரயோகித்து முன்னணி நிறுவனம் ஒன்றில் வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடிய ஓர் சந்தர்ப்பம் கிடைத்தமை எனக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.
அ.அலன்ராஜ்

பொறியியல் துறையில் பெற்றோரின் ஆலோசனையின் பிரகாரம் எனது உயர் கல்விக்காக நான் IIS CITY CAMPUS ஐ தெரிவு செய்தேன். ஆற்றலும் அனுபவமும் மிக்க விரிவுரையாளர்கள் மற்றும் நிறுவனத்தின் வளங்கள் என்பன எனது உயர்கல்விக்கு உறுதுணையாக இருந்தது. அது மட்டுமல்லாது நிறுவனத்தின் சூழல் ஓர் முழுமையான உயர்கல்வி வளாகத்தில் கற்றுக் கொண்ட அனுபவத்தை எனக்கு அளிக்கின்றது.
கி.துவாரகன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.